376

# மன்னர்

# பாஸ்கர சேதுபதி

ஆசிரியர்

டாக்டர். எஸ். எம். கமால்

வெளியீடு :

ஷர்மிளா பதிப்பகம்,

21, ஈசா பள்ளிவாசல் தெரு,

இராமநாதபுரம்-623 501.

## Bibliographical Data


| | | |
|---|---|---|
| 1. | Title | : Mannar Bhaskara Sethupathy |
| 2. | Author | : Dr. S.M. Kamal<br>21. Easa Pallivasal Street,<br>Ramanathapuram 623 501 |
| 3. | Language | : Tamil |
| 4. | Publication | : First Edition, March 1992 |
| 5. | Copyright | : Author |
| 6. | Paper used | : White cream |
| 7. | Size of the Book | : 21.5cm × 14cm |
| 8. | Type used | : 10pt. Tamil Roman |
| 9. | No. of copies | : 1500 |
| 10. | Pages | : 151 |
| 11. | Printer | : Parani Achchaham<br>4. Melavadampokki St,<br>Madurai-625 001 |
| 12. | Publisher | : Sharmila Pathippakam,<br>21. Easa Pallivasal St.<br>Ramanathapuram - 623 501 |
| 13. | Subject | : Biography of<br>His Highness Bhaskara<br>Sethupathy, Rajah of<br>Ramanathapuram |
| 14. | Summary | : Write - up of<br>Important events in the life of Raja Bhaskara Sethupathy (1868-1903. AD) high lighting his cultural and religious activities beneficial to the Tamil Society. |
| 15. | Price | : Rs. 24-00 |

## இந்த தொகுப்பிற்கு பயன்பட்ட நூல்கள்

### தமிழ் நூல்கள்


1. பெருந்தொகை
   — மதுரை தமிழ்ச்சங்க வெளியீடு (1932)

2. இராமேசுவரம் குடமுழுக்கு மலர்
   — இராமேசுவரம் திருக்கோயில் வெளியீடு (1974)

3. பாளையப்பட்டு வமிசாவளிகள் தொகுதி I, II, III
   — தமிழ்நாடரசு தொல்லியல் இயக்கக வெளியீடு (1981)

4. தமிழ்ப்பா மஞ்சரி (தொகுதி-2)
   — டாக்டர். உ.வே. சாமிநாத ஐயரவர்கள் நூலகம், சென்னை. (1962)

5. பணவிடுதூது
   — சொக்கநாத கவிராயர் (1980)

6. தனிச்செய்யுட் சிந்தாமணி

7. பழநி மாம்பழக் கவிசிங்க நாவலர் பாடல் திரட்டு

8. இராமநாதபுரம் சமஸ்த்தான நவராத்திரிப் பாடல்கள் (1911)

9. மகாவித்வான். ரா. ராகவ ஐயங்கார் அவர்கள் தனிப்பாடல்கள்

10. புலவர் ஆற்றுப்படை
    — நாகூர் குலாம் காதிறு நாவலர்

11. மதுரை தமிழ்ச்சங்க மான்மியம்
    — சோதுகுடி எம் கே.எம். அப்துல்காதிர் புலவர்

ஆங்கில நூல்கள்


1. Baskara Sathupathy Diary (1893)
2. Manual of Ramnad Samasthanam
   — T. Rajaram Rao (1891)
3. Manual of Madura Country
   — A. Nelson (1868)
4. History of Madura Nayaks
   — S. Sathianathaier (1924)
5. The Pandya Kingdom
   — K. A Nilakanta Sastry (1929)
6. Brief Notes, Traditions and Historical Relating' Rameswaram Temple
   — R. Srinivasa Iyer (1914)
7. Mackenzie MSS-Vol. I
   — Dr. T.V. Mahalingam (1972)
8. Oriental Manuscripts Library
   — Collection N.R. 370, N.R. 1572
9. Sethupatis of Ramnad
   (Unpublished Thesis) — Dr. K. Seshadri (1972)
10. Swami Vivekananda, a sketch
    — M S. Natesan (1913)
11. Swami Vivekananda, a Biography
    — Swami Nikilananda (1953)
12. Religious Firmentation in Modern India
    — French and Arvind Sha
13. Vivekananda in Indian Newspapers
    — Basu and Ghosh (1969)
14. Swami Vivekananda's speeches — from Colombo to Almora — V. R. and Sons, Madras (1923)

# 1

## பெருமை மிக்க பரம்பரை

தொன்றுதொட்டு மறவர் சீமையை ஆளும் தகுதிபெற்று இருந்தவர்கள் மறக்குல மக்களின் மூத்த குடியினரான சேதுபதி மன்னர்கள். இந்த மன்னர்கள் தங்கள் இயற்பெயருடன் இணைந்துவழங்கிவரும் "சேதுபதி" என்ற சிறப்புமிக்க 'அடைமொழி, இராமபிரான் இராமேசுவரம் அருகில் அமைத்த திருவணையையும், இராமேசுவரத்தில் மேற்கொண்ட "இராமலிங்கப் பிரதிஷ்டை" யையும் என்றென்றைக்கும் பேணிப் பாதுகாத்து வருபவர்கள் என்ற பொருளில் அமைந்துள்ளதாகும்.

இவர்கள் தங்களை மறவர் சீமையின் ஆட்சியாளர்களாக மட்டும் கருதிக் கொள்ளாமல் புனித இராமேசுவர திருக்கோவிலின் காவலர்களாகவே கருதி வாழ்ந்து வந்தனர். இதன் காரணமாகவே "சேது ரக்ஷகன்" சேது மூல துரந்தரன்" "சேதுகாவலன்", "சேதுங்கராயன்"–என்றவிருதுகளால் இவர்கள் சிறப்பிக்கப் பெற்றனர். இந்திய நாட்டின் பல பகுதிகளில் இருந்து

நாள்தோறும் தலயாத்திரையாக இராமேசுவரம் வருகிற பயணிகளுக்குத் தேவையான வசதிகள் அனைத்தையும் இவர்கள் வழங்கி வந்தனர். சேதுநாட்டின் வடக்கு எல்லையான கோட்டைப் பட்டினத்திலிருந்தும் தெற்கு எல்லையான வேம்பாற்றிலிருந்தும் இராமேசுவரம் வரையிலான கடற்கரை வழியெங்கும் அடுத்து அடுத்து பல அன்ன சத்திரங்களை அமைத்தனர். நீண்ட நடைப் பயணத்தில் களைத்தும், பசித்தும் வருகின்ற பயணிகளுக்கு, அங்கே உண்டியும் உறையுளும் வழங்க ஏற்பாடுகளைச் செய்தனர். அதற்கென பல ஊர்களை சர்வமானியமாக அளித்து உதவினர். மண்டபம் தோணித்துறைக்கு அந்தப் பயணிகள் வந்து சேர்ந்தவுடன், கடலைக் கடந்து இராமேசுவரத்தை அடைவதற்குப் படகுப் பயண வசதிகளையும் செய்து வந்தனர். பாரத தேசமெங்கும் இருந்து புனித இராமேசுவரம் வரும் பயணிகளுக்கு, தொண்டர்களுக்கு தொண்டர்களாக துணை இருந்தவர்கள் இந்த மன்னர்கள். நமது இதிகாசமான இராமாயணமும், இந்திய ஒருமைப்பாட்டுச் சின்னமான இராமேசுவரம் திருக்கோயிலும் நிலைத்து இருக்கும்வரை இந்த மன்னர்களது பெயரும், புகழும், பணியும் வாழ்வும், வரலாற்றில் சிறந்து விளங்கும்.

இவர்கள், தங்கள் நாட்டிலுள்ள் தேவார, திருவாசக, திவ்விய பிரபந்தங்களால் பாராட்டப் பெற்ற திருவாடானை, திருச்சுழியல் திருஉத்திரகோசமங்கை, திருப்புல்லணை, திருமருந்தூர் ஆகிய திருப்பதிகளில் உள்ள திருக்கோயில் திருப்பணிகளை மேற்கொண்டு, அறக்கட்டளைகளையும் நிவத்தங்களையும் அமைத்தனர். என்றாலும் இவர்களது உள்ளத்தின் அடித்தளத்தை சிறப்பாக ஆட்கொண்டிருந்தது. இராமேசுவரம் திருக்கோயில் ஒன்றே இதன் காரணமாக இந்தக் கோயிலின் அன்றாட பூசனைகளும், ஆண்டு வழிபாடுகளும் மிகச் சிறப்பாக நடப்பதற்கு அணியும், மணியும், பொன்னும் பொருளும் பூமியும் வழங்கியதுடன், நிலையான வருவாய் தரும் பல ஊர்களையும் இறையிலி நிலங்களாக இந்தக் கோயிலுக்கு வழங்கி உள்ளனர். இன்றும் அந்த அறக் கொடை

களின் வருவாய் இத்திருக்கோயிலின் பராமரிப்பிற்கு ஆணிவேராக அமைந்துள்ளது குறிப்பிடத்தக்கது. கோயிற் கருவறை, திருமதில், பிரகாரங்கள், கோபுரம், தெப்பக்குளம், சந்நிதிகள், கல்யாண மண்டபம், அனுக்க மண்டபம், பள்ளியறை என்ற பல்வேறு அமைப்புகளுடன் கூடிய திராவிட கட்டுமானக்கலைக்கு எடுத்துக்காட்டாக இக்கோயில் விளங்கி வருவதற்கு இச் சேதுபதி மன்னர்களது அற உணர்வும், தொண்டுள்ளமும், வாரி வழங்கிய பெரும் பொருளுமே கருவியாக இருந்தன என்பதைக்கடந்த ஐந்நூறு ஆண்டுகால வரலாறு இனிதே எடுத்துச் சொல்கின்றது.

இத்தகைய சமயப்பணிகளுடன் நின்று விடாமல் இம்மன்னர்கள் சமுதாயப் பணிகளிலும் குறிப்பாக தமிழ் வளர்ச்சிப் பணியிலும் முனைந்து நின்றனர். மூவேந்தரும் முடிந்து, சங்கமும் போய், கோவேந்தர் கொடையுமற்று, பாவேந்தர்கள் இலவம் பஞ்சாய்ப் பரிதவித்தபொழுது, அவர்களுக்குத் தேவேந்திர தருவாக சேதுபதி மன்னர்கள் விளங்கினர். அழகிய சிற்றம்பலக் கவிராயர், அமிர்த கவிராயர், மீர்ஜவ்வாதுப் புலவர், சர்க்கரைப் புலவர், அட்டாவதானம் சரவணப் பெருமாட் கவிராயர், சதாவதானம் சரவணப் பெருமாள் கவிராயர், மதுரகவி, தலமலைகண்டதேவர், திருச்சிற்றம்பல ஐயா, சிவசம்பு புலவர் ஆகிய பெரும் புலவர்கள், சேதுபதி மன்னர்களது தண்ணளியில் திளைத்து, பரிசிலும் பாராட்டும் பெற்றதுடன் அவர்களது வாழ்க்கையில் வறுமை தொடராது இருக்க, வளமான ஊர்கள் பலவற்றையும், சேதுபதி மன்னர்களிடம் தானமாகப் பெற்று வாழ்ந்தனர். தளசிங்கமாலை, ஒருதுறைக் கோவை, பணவிடுதூது, விஞ்சைக்கோவை, மருதூர்ப்புராணம், மருதூர் அந்தாதி, தேவை உலா, சேதுபதி விறலி விடுதூது சேதுபுராணம், மற்றும் முத்துராமலிங்க சேதுபதி ஒருதுறைக் கோவை, பாஸ்கர சேதுபதி கல்லாடக் கலித்துறை, நான்மணிக் கோவை மங்களேசுவரி பிள்ளைத்தமிழ் ஆகிய பிற்காலப் படைப்புக்களுக்கும் முழு முதற் காரணங்கள் இவர்கள் வழிவந்தோர்.

## 2. பெற்றோர் :

இத்தகைய பெருமை பெற்ற கொற்றவர் குல வழியில் பிற்காலச் சேதுபதிகளில் பெரிதும் புகழ் பெற்று விளங்கியவர் இரண்டாவது முத்துராமலிங்க சேதுபதி மன்னர் ஆவார். இவர் கி பி. 1841 க்கும் கி.பி. 1873 க்கும் இடையில் முப்பத்து இரண்டு ஆண்டுகளே இராமநாதபுரத்தில் வாழ்ந்தவர். ஐந்து ஆண்டுகள் மட்டும் அரசு கட்டிலில் இருந்தவர். பெறுதற்குரிய உடல் வலிவும், மன வளமும் பெற்று இருந்த மாவீரர் இவர். பல மைல் தொலைவு குதிரை சவாரி செய்தாலும் சில நொடிகள் கூட களைப்படையாத காளை மறவர். வாட்போர் செய்வதிலும் மல்லரோடு பொருதி அவர்களை வீழ்த்துவதிலும் மாறாத பெருவிருப்பு உடையவர்.

இதோ, இந்த மன்னரது திறமைகளைக் கண்டு திகைத்த புலவர் ஒருவரது பாடல்,

"கல்வியினாள் சேடனுக்கும் கருணை நிறைவால் கடற்கும்
வில்வலியால் பற்குனற்கும் மெய்யழகால் சித்தசற்கும்,
மல்வலியால் வீமனுக்கும் மனக்கலக்கம் தருமுரவோன்
செல்வமெலாம் ஒருங்கெய்தித் திகழ்ந்த பெருந்தகை நிருபன்.

"திருமகனோ திருவை மணந்து இருந்தவனோ திருமகளின்
மருமகனோ புட்பகத்தின் வருமகனோ வயங்கெழுமைத்
தருமகனோ தசரதனார் தருமகனோ எனமடவார்
வருமகனோ வாநகையான் மயக்கு பெரு'வடிவழகன்.

"கம்பனும் கண்டுஉளம் மயங்கிக் கம்பென நிற்கும் வகை
வம்புகமழ் அமுதென்ன வளச்சொல்லும் பொருட்பொலிவும்

பம்பிய கற்பனைச் சுவையும் பல்குகவி பல
பகர்வோர்
உம்பர் பிரான் எனப்புலவர் உறும் அவையில்
ஒளிர் பெரியோன்.

தாய்மொழியாகிய தமிழில் மட்டுமின்றி தெலுங்கு, சமஸ்கிருதம், இந்துஸ்தானி ஆகிய பிற மொழிகளிலும் ஆழ்ந்த புலமை பெற்றவர் இந்தப் பெருமகன். நீதி போதம், பாலபோதம், பிரபாகர மாலை ஆகியன இவர் படைத்தளித்த சிற்றிலக்கியங்கள் ஆகும். இவை தவிர இந்துஸ்தானியிலும் தெலுங்கிலும் பல சாகித்தியங்களையும், கீர்த்தனங்களையும், ஜாவளிகளையும் இயற்றியுள்ளார். அவற்றில் சில காயகப்பிரியா, ரசிக ரஞ்சனம் என்ற அவரது நூல்களில் காணப்படுகின்றன. இங்ஙனம் இசை உணர்வும் இறைநெறியும் இணைந்த திருவுருவாக வாழ்ந்த இவர், பின்னர் கனிந்த கந்தன் அடியவராக மாறினார் முருக அனுபூபதி, வள்ளிமணமாலை, சரச சல்லாப மாலை, என்ற இவரது சிற்றிலக்கியங்கள் அதனை உறுதி செய்கின்றன. இவரது பாடல்களிலும் நாதலயத்திலும் ஈடுபட்ட பழனி மாம்பழக் கவிச்சிங்கப் புலவர்,

''மந்தர நேர் புயத்தன் முத்துராமலிங்கச்
சேதுபதி மதுர கீதச்
செந்தரம் ஓர்ந்து இயக்கரெல்லம் தினமுமயல்
உற்றதன்றி திருத்துவீணைச்
சுந்தர நாரதனாம் அந்தத் தும்புருவும்
இம்பரிடைத் தோற்றார் ஆகி
அந்தர மேல் அலைந்தனரேல் அதற்குவமை
எதைப் புகழ்வது அறிந்து மாதோ?

என வியந்து பாடியிருக்கிறார்[1]. ஆம்! இந்தச் சேதுபதி மன்னரது இசைப் புலமைக்கு ஈடாக எதனைப் புகழ்வது? யாரை உவமையாகக் கூறுவது? புலவர்களையே வியக்க வைக்கும் பெரும்புலமை?

---

1. பழநி மாம்பழக் கவிச் சிங்கப் புலவர் – தனிப்பாடல் திரட்டு.

இசைக் கலையிலும், தமிழ் யாப்பிலும் சிறந்து விளங்கிய இசைச் கலைஞர்களையும் தமிழ்ப் புலவர் களையும் வரவழைத்து, அவர்களது திறமைகளைத் தேர்ந்து பாராட்டிப் பெரும் பரிசில்களை வழங்கிச் சிறப்பித்து வந்தார். குன்றக்குடி கிருஷ்ண ஐயர், பட்டணம் மகா வைத்தியநாத பாகவதர், இராமசாமி சிவன் முதலிய ஈடு இணையற்ற இசை மேதைகள் இந்த மன்னரது அருங்கொடையைப் பெற்று அகம் மகிழ்ந் தனர்.

குறிப்பாக, மகா வைத்தியநாத பாகவதரும் அவரது தமையனார் இராமசாமி சிவனும் சேதுமன்னரால் அடிக்கடி சிறப்பிக்கப்பட்டு வந்தனர். வழக்கமாக அளிக் கப்படும் பரிசில்களுடன், இந்த இருபெருங் கலைஞர் களும், வாழ்நாளெல்லாம் சிறப்பாக வாழ்ந்து, இசைக் கலைக்கு உயர்ந்த சேவை செய்வதற்கென்று நிரந்தர மான அறக்கட்டளை யொன்றையும் மன்னர் அவர் களுக்கு ஏற்படுத்தி மகிழ்ந்தார். ஒருமுறை, இந்த புலவர் பெருமக்கள் இராமநாதபுரம் அரண்மனையில் மன்னரின் விருந்தினர்களாகத் தங்கி இருந்தனர். அப்பொழுது மன்னர், அவர்களிடம், "கந்தபுராணம்" பற்றிய சிறப் புக்களை தெரிவித்ததுடன், அந்த நூலின் பிரதியொன் றையும் அவர்களுக்கு அளித்தார். சில நாட்களில், அந்த இலக்கியத்தைப் பாமரரும் அறிந்து சுவைக்கும் வண்ணம் "கந்தபுராண கீர்த்தனைகள்" என்று இசை இலக்கிய மாக இராமசாமி சிவன் பாடி முடித்தார். இதனை அறிந்த சேதுபதி மன்னர் அவரை "சாகித்யப் புலி" எனப் பாராட்டிச் சிறப்பித்தார்.

திரிசிரபுரம் மகாவித்வான் மீனாட்சிசுந்தரம்பிள்ளை, யாழ்ப்பாணம் ஆறுமுக நாவலர், முதுகுளத்தூர் சதாவ தானி சரவணப் பெருமாட் கவிராயர், பழநி மாம்பழ கவிச்சிங்கப் புலவர், சென்னை சந்திரசேகர கவிராஜ பண்டிதர் ஆகிய இயற்றமிழ்ப்புலவர்களும் இந்த மன்ன ரால் சிறப்பிக்கப்பட்டவர் ஆவர். புலவர்களும் இந்தப் புரவலரைப் பாராட்டிப் பெருமிதத்துடன் பாடினர்.

இத்தகைய புரவலரைப் படைத்த கடவுளுக்கு கைம்மாறு செய்வது எப்படி என தடுமாறுகிறார் ஒரு புலவர். அவரது பாடல்[2]

படிதழைக்க மனுநீதிப் பயிர் தழைக்க
உயிர் தழைக்கப் பரவி வாழும்
குடி தழைக்கக் கற்றோர்தம் குலந்தழைக்க
நலந்தழைக்கக் கோநிலாநின்
முடி தழைக்கச் செய்த தனிக்கடவுட்கென்
கைம்மாறு முற்றுநீ தேரேன்
வடி தழைக்கும் வேற்கை முத்து
ராமலிங்க சேதுபதி மன்னரே !

சிறந்த பண்புகளின் நிலைக்களமாக விளங்கிய இந்த மன்னரது புகழ்சேர் வாழ்க்கைத் துணைவியாக வாய்த்தவர் முத்தாத்தாள் நாச்சியார் என்பவர். மறக்குல மங்கையரில் நன்முத்தாக ஒளிர்ந்து, உயர்வு பெற்றவர். கல்வி கேள்விப் புலங்களின் கடலாக விளங்கியவர். சுருக்கமாகச் சொல்லப் போனால், தாம் கரம் பற்றிய மன்னனுக்கு ஏற்ற மங்கை நல்லார் அவர். அன்பும் அடக்கமும் பண்பும் பெருமையும் மிக்க அந்தப் பெருமாட்டியின் பெருமைகளை ஓர்ந்த ஒரு பெரும் புலவர்

''... ... ... ... ... .... .... வாயறியாப் பெண்டிர்க்கு
ஞானம் பெறவருளினோர் யார் - நன்று
உண்டற்கு உணவளிக்கும் உற்றார் யார்-எண்திக்கும்
கொண்டாள் கற்பித்த குறிப்பொழுகல்-கற்பென்று
அண்டாள் அறிய மகிழ்ந்தியங்கும் – பெண்டார்
உடலைச் சுருக்கி உயிரைப் பெருக்கி
நடவைச் சிறுவாழ்வை நத்தா – மடவரல்யார்
தூயமலர்சேர்க்கை தூவியம் பஞ்சணையாம்
பாயல்துறந்து பழந்தரையின் – மேயினர் யார்
பண்ணவனார் பண்பும் பணிவிடையுமே பயனாகக்

---

2. சதாவதானி சரவணப் பெருமாட் கவிராயர்
—தனிப்பாடல் திரட்டு

கண்ணுங் கருத்துங்கொள் காரிகையார் — நண்ணும்
உருவத்து வந்த ஒரு தெய்வமென்றே
குருபத்தி செய்துநின்ற சோதி — திருவார்
மணிவாசகத் தேனை மாந்தினர் யார் — பூதி
அணிவார் யார் நோன்பு அமைவார் யார் —
பிணிநீக்கு
செந்தமிழ் வேதம் பயிலும் சீரினர் யார் புண்ணியனை
அந்தமிழாற் பாடும் அரிவையர் யார் ... ... ...''[3]

என இந்த நல்லிசைப் புலமை மெல்லியலாரின் மாண்புகளை புலவர் ஒருவர் அடுக்கடுக்காக, வினாக்களை தொடுத்துச் சொல்லும் பாங்கில் இருந்து, பாண்டியன் நின்ற சீர் நெடுமாறனுக்கு வாய்த்த பங்கயச்செல்வி பாண்டிமாதேவி போல இந்த மாதரசி மன்னருடன் பொருந்தி வாழ்ந்து வந்தார் என்பது தெரிய வருகிறது

3. மகாவித்துவான் ரா. ராகவ ஐயங்கார் — இரங்கல் கவிவெண்பா (1916)

# 2

## வாழ்வின் தொடக்கம்

தக்கார் தகவிலர் என்பது அவரது எச்சத்தாற் காணப்படும் என்பது தெய்வப்புலவர் திருவாக்கு இணையற்ற இந்த இருபெரும் மேதைகளுக்கு வாய்த்த பிள்ளைகள் இருவரும் குணக்குன்றாக குவலயம் போற்றும் ஞான சூரியராகத் திகழ்ந்ததில் வியப்பில்லைதானே பின்னர், அவர்கள் பெறப்போகும் வெற்றியை முன்னரே நினைத்து அவர்களது பெற்றோர் அவர்களில் முன்னவருக்கு பாஸ்கரர் என்றும், பின்னவருக்கு தினகரர் என்றும் பெயர்கள் சூட்டிப் பேருவகை பெற்றனர்.

பாஸ்கரர் ஐந்தாண்டு பிராயத்தினராக இருக்கும் பொழுதே அவரது தந்தை இரண்டாவது முத்துராமலிங்க சேதுபதி காலமானார். இராமநாதபுரம் சமஸ்தானத்தின் ஆட்சிப்பொறுப்பை மேற்கொண்ட பிரிட்டிஷ் துரைத்தனத்தாரின் கோர்ட் ஆப் வார்ட்ஸ் என்ற

ஆட்சிக்குழு[4] மறைந்த சேது மன்னரது மக்களை வளர்க்கும் பொறுப்பை ஏற்றுக் கொண்டது. பாலகர்களாக இருந்த இளஞ்சூரியர் பாஸ்கரையும், தினகரையும் சென்னைக்கு அழைத்துச் சென்று அங்கு கல்வி கற்க ஏற்பாடு செய்தது. ''தந்தையொடு கல்விபோம்''என்ற அவச்சொல் அவர்களுக்கு ஏற்படவில்லை.

முதலாவது முத்துராமலிங்க சேதுபதி மன்னர், தமது கோநகர் இராமநாதபுரத்தில் மேனாட்டு முறையிலான கல்விக்கூடம் அமைக்க சுவார்ட்ஸ் பாதிரியாருக்கு கி.பி. 1784ல் உதவிகள் வழங்கினார். இராமநாதபுரம் கோட்டைக்குள் அரண்மனைக்கு வடக்கே நிர்மாணிக்கப்பட்ட தேவாலயத்தின் வளாகத்தில் அந்தப் பள்ளி அமைந்தது. அதன் பராமரிப்பிற்கு மாதந்தோறும் மன்னர் இருபத்து நான்கு பொற்காசுகள் வழங்கி உதவி வந்தார். ஆனால் அவரது பரம்பரையில் வந்தவர்கள் அந்தக் கல்விப் பயிற்சியை, பயிற்சியின் பலனைப் பெறவில்லை. ஆனால், அந்த வாய்ப்பு நூறு ஆண்டுகளுக்குப்பிறகு இந்த இளவல்களுக்குக் கிட்டியது தங்களது அன்புத் தாயாரது ஆசியுடன் சென்னை சென்ற இந்த இளவரசர்கள், தொடக்கத்தில் கல்விப் பணியில் சிறந்து விளங்கிய எழும்பூரில் ஆங்கிலேயர் நிர்வகித்த தனியார் பள்ளிகளிலும், பின்னர் அரசாங்க கல்விச் சாலையிலும், எண்ணையும் எழுத்தையும் கண்ணெனக் கற்றனர்.

ஆங்கிலேயரின் துரைத்தனத் தலைமை இடமாக அப்பொழுது விளங்கிய சென்னை பட்டினத்தில் ஆரவாரச் சூழ்நிலையில், புதிய மேனாட்டுக் கல்வி, நாகரிகம், பண்பாடு ஆகியவைகளை பாஸ்கரரும் அவரது தம்பியும் பயின்றனர். அத்துடன் ஓவியம் வரைதல், பியானோ இசைத்தல், டென்னிஸ் விளையாடுதல், ஆங்

---

4. Court of wards என்பது சமஸ்தானாதிபதி இல்லாத பொழுது அவர்களது நலனைக் காப்பதற்காக பிரிட்டிஷ்த் துரைத்தனம் அமைத்த நிர்வாகக் குழு

O Census Report 1871 (1873) Page 49

கில இசை - ஆகியவற்றிலும் அவர்கள் சிறந்து விளங்கி னர். மேலும், தமிழ் இலக்கியங்களிலும், சைவ வைண வத் திருமுறைகளிலும் தேர்ச்சி பெற்றுத் திகழ்ந்தனர். இங்ஙனம், பத்தாண்டுகள் பட்டினத்தில் தொடர்ந்த கல்விப் பயிற்சிக்கும், அறிவு வளர்ச்சிக்கும் ஆங்கில நாட்டு ஆசான்கள் பொறுப்பாக இருந்ததால், எந்தப் பொருள் பற்றியும் இடர்ப்பாடு எதுவும் இல்லாமல் தன்னிச்சையாக ஆய்ந்து, சிந்தித்து அறிந்துகொள்ளும் உரனும், அறிந்துகொண்ட பொருளை அழகாக ஆங் கிலத்திலும் தமிழிலும் வெளியிடும் பேச்சுத் திறனும் அவர்கள் ஒருங்கே பெற்றனர். அன்றைய நிலையில் ஆட்சியாளருக்குத் தேவையான அனைத்துத் தகுதிகளை யும் அவர்கள் பெற்றிருக்க வேண்டும் என்பதுதான் அவர்களைப் பயில்வித்த ஆட்சிக் குழுவிற்கும், பொறுப் பாளர்களுக்கும் குறிக்கோளாக இருந்தது அந்த வெற்றி யனைத்தையும் பெற்றவராக அந்த அரச மக்கள் வளர்ந்தனர்.

இளவரசர் பாஸ்கரரது பள்ளி வாழ்க்கை தொடர்ந் தது. பதினேழு வயது நிரம்பும் தறுவாயில் தஞ்சைத் தரணியில் உள்ள சில ஆலயங்களுக்கு அவர் சென்று வந்தார் அப்பொழுது திருவாவடுதுறைக்கும் சென்றார். அங்குள்ள ஆதீனத்திற்கும், இராமநாதபுரம் சேது மன்னர்களுக்கும் பதினேழாவது நூற்றாண்டிலிருந்து தொடர்புகள் இருந்து வந்தன. இராமநாதபுரம் சீமை யின் வடக்கு எல்லையை, தஞ்சைத் தரணிக்குள்ளும் விரித்த திருமலை ரகுநாத சேதுபதி, கிழவன் ரகுநாத சேதுபதி, முத்துராமலிங்க விஜய ரகுநாத சேதுபதி மன்னர்கள் இந்த ஆதின கர்த்தர்களின் சமயப் பணியில் மிகவும் ஈடுபாடு கொண்டவர்களாக அந்த ஆதீனத்தின் பராமரிப்பிற்காக, தங்களது சேது நாட்டில ஆவுடை யார் கோவில், வல்லக்குளம். சூரியன் கோட்டை, பொற் கோட்டை, பூதகுடி, சிறுகனூர், பெருங்காடு. கட்டி யேரி, கங்கணி, நாஞ்சி வயல், நாணக்குடி முதலிய ஊர் களை ஆதீனத்தாருக்கு தானமாக வழங்கி இருந்தனர்.

இத்தகைய சிறந்த சமய ஆதரவாளர்களான சேதுபதி மன்னர்களைத் திருவாவடுவதுறை ஆதீனங்கள்

நாள்தோறும் பகலுணவு கொள்ளும் மகேசுவர பூசையின் பொழுது, "காவிரி நீரும், சேதுபதி மன்னர் அன்னமும், ஆவுடையப்பர் நிழலும் என்றும் உடையோம்" என நினைத்து வழுத்தத் தவறுவதில்லை[5] இந்தக் காரணங்களினால் அப்பொழுது இருந்த ஆதீனகர்த்தர் அம்பலவாண தேசிகர் இளம்பாஸ்கரருக்கு தமது திருமடத்தில் சிறந்த வரவேற்பு வழங்கி ஆதீனத்து நூல் நிலையத்தை திறந்து வைக்குச் சிறப்பையும் நல்கினார்.[6] இந்த நூல் நிலையம் தமிழ்ப் பேரறிஞர் உ.வே சாமிநாதையரது ஆராய்ச்சிக்குப் பயன்பட்ட பல இலக்கியச் சுவடிகளைக் கொண்ட "வித்தியாநிதி" எனப் பெயர் பெற்றதாகும்.

பின்னர்—

தஞ்சைத் தரணிக்குச் சென்ற இளவல் பாஸ்கரர். நாகூருக்கும் நாகைப்பட்டினத்திற்கும் சென்றார். தமிழகத்துச் சமய வாழ்க்கையின் சாளரங்களைப் போன்று சிறந்த. அந்தத்தலங்களை அவர் தரிசிக்க விழைந்ததில் வியப்பில்லை. அப்பொழுது நாகைப்பட்டினத்தில்இருந்து வெளியிடப்பட்ட இலக்கியத் திங்கள் வெளியீடான "நீலலோசனி" சஞ்சிகையின் ஆசிரியர் திரு. சதாசிவம் பிள்ளை, அவரது பத்திரிக்கை அலுவலகத்தில் மன்னருக்கு வரவேற்பு ஒன்றையும் நல்க விழைந்தார். தமிழ் வேந்தரைச் சிறப்பிக்க வேண்டும் என்ற பேரார்வத்தை மன்னரிடம் வெளியிட்டார். அவரது விருப்பத்தைப் பூர்த்திசெய்ய மன்னர் "நீலலோசனி" அலுவலகத்திற்கும் சென்றார். சதாசிவம் பிள்ளை எய்திய மகிழ்ச்சிக்கு எல்லை இல்லை.

சைவத்தலங்களை தரிசிப்பவர்கள், திருக்கோயிலில் உள்ள சண்டேசுவரரையும் தரிசித்தால்தான் பக்தர்களது தரிசனம் நிறைவு பெறும் என்பது ஐதிகம். அதைப்போல் காசி ராமேசுவர யாத்திரையை மேற்கொள்பவர்கள். இறுதியில் இராமநாதபுரம் இராமலிங்க விலாசத்தில்

---

5. மகாவித்வான் ரா. ராகவ ஐயங்கார் - சேதுநாடும் தமிழும் (1931).
6. தினமலர் (நாளிதழ் - நெல்லை) – 8-2-1984.

சேதுபதி மன்னரைத்தரிசனம் செய்து புண்ணியம் பெறுதல் வழக்கம். அவ்வாறு மன்னரை தேடிச்சென்று தரிசனம் செய்யாத தமக்கும், மன்னர் விழைந்து வந்து தரிசனம் தந்த மாண்பினைக் கவிதைகளாகப் படைத்து வழங்கினார் ஆசிரியர்.

''கதிபடைத்த காசி இராமேச்சுர யாத்
திரைமுடித்தோர் கருதா நின்ற
துதிபடைத்த தவப்பயன்தான் நினதுதரி
சனமிலையேல் தொடரா தென்பார்
நதிபடைத்த சடை நம்பர் ஆலயத்தை
வணங்கிடினும் நற்சண்டே சர்
விதிபடைத்த திருவடியை வணங்காக்கால்
என்பயனோ வேந்தர் ரேறே! (1)

''அருள்படைத்த அச்சிறப்பை அருஞ்சிறப்பாக்
கொண்டமரும் அரச ரேறே
தெருள்படைத்த நீயிருக்கும் இடந்தேடித்
தெரிசிரா சிறியேம் உள்ள
மருள்படைத்த இடம்நாடி வந்து தரி
சனந்தந்து வாழ்வித் தாய்இப்
பொருள் படைத்த எமைப் போலும் புண்ணியருண்
டோவுலகிற் புகலுங் காலே.'' (2)

... ... ...என்பன அந்தக்கவிதைகள். பத்திரிகை ஆசிரியருக்கு மன்னா தரிசனம் கொடுத்ததுடன், அந்தப் பத்திரிகையின் வளர்ச்சிக்கு கணிசமான பொருள் வழங்கியும் உதவியதாகத்தெரிகிறது. இதனைப்போன்றே கி.பி.1886ல் தொடங்கப்பெற்ற பிரம்மவித்யா, திவாகரன், இதழ்களும் இந்த இளம் மன்னரது பொருளுதவி கொண்டு வெளிவந்தன.

அடுத்து, அந்த ஆண்டுத் தொடக்கத்தில் இளவரசர் இருவரையும் வட இந்தியாவில் உள்ள பல இடங்களுக்கு அவர்களது, ஆங்கில ஆசான்கள் அழைத்துச் சென்றனர்.

அத்துடன் இராமநாதபுரம் சமஸ்தானத்தின் கிழக்கு எல்லையில் அமைந்துள்ள இலங்கையிலும் ஐம்பத்து ஒரு நாட்கள் சுற்றுப்பயணம் மேற்கொண்டனர். இந்திய நாட்டின் பல பகுதிகளிலும் உள்ள மக்களது வாழ்க்கை நிலை, பழக்க வழக்கங்கள், மரபுகள் ஆகியவற்றையும், இவற்றிற்கெல்லாம் ஆதாரமாக அமைந்து திகழும் இந்தியப் பண்பாட்டையும் இந்த இளம் உள்ளங்களில் நிறைத்துக் கொள்ளுவதற்கு ஏதுவாக அமைந்து இருந்தன இந்தச் சுற்றுப் பயணங்கள். இத்தகைய சிறந்த பயணங்களுக்கு உடனிடருந்து உதவிய அவர்களது ஆசிரியப் பெருமக்கள் கிரீட்டன் தம்பதியினரை இளவரசர் பாஸ்கரர், இராமநாதபுரம் அரண்மனையில் "சிறப்புத் தர்பார்" ஒன்றில் வரவேற்பு அளித்துப் பெருமைப் படுத்தினார்.

5-1-1888 முதல் 24-2-1888 வரையான ஐம்பத்து ஒரு நாட்கள் இலங்கையில் மன்னர் சுற்றுப்பயணம் மேற்கொண்டபொழுது (வரைந்த குறிப்புகள் பின்னர் சிறிய நூலாக வெளியிடப் பட்டது) அப்பொழுது அவருக்கு வயது இருபது. இலங்கையில் இருந்து அவர் வாங்கி வந்த அரிய பொருள் என்ன தெரியுமா? ஆங்கில நூல்கள் — பேகனது "கட்டுரைகள்" ஸ்காட்டின் "மந்திர தந்திரங்கள்" காலரிட்ஜின் "அரங்கப் பேச்சு" மற்றும் "அராபிய இரவுகள்".

இவ்விதம் மன்னர் பாஸ்கரரது நலனை கண்காணிப்பதற்கும், கல்வியை புகட்டுவதற்கும் ஆங்கில நாட்டு செவிலியரும், ஆசிரியர்களும் நியமிக்கப்பட்டு இருந்தனர் அல்லவா? ஆதலால், அவரது வாழ்க்கை, ஒழுங்கு கட்டுப்பாடு என்ற அடிப்படையில் அமைந்து, சிறப்பாக இயங்கிய காரணத்தினால் தமது அன்றாட வாழ்க்கையினை முறையாக நாட்குறிப்புகளிலும், சொந்த செலவுகளை கணக்குப் பதிவேடுகளிலும் அவர் பதிவு செய்து வந்தார். இந்த பதிவேடுகளில் கி பி, 1891க்கான செலவுக்கணக்குப் பதிவேடும் கி. பி. 1 893க்கான நாட்குறிப்பும் கிடைத்துள்ளன.

---

O My Trip to India's utmost isle (Madras 1890)

அவரது நாட்குறிப்புகள், அந்த நல்ல மனிதரைப் பற்றி அறிந்து கொள்வதற்கு பயனுள்ளதாக உள்ளது. இராமநாதபுரம், சென்னை ஆகிய நகரங்களில் மன்னர் கலந்து கொண்ட நிகழ்ச்சிகள், சந்தித்த பெரிய மனிதர்கள், திருக்கோயில் வழிபாடுகள், தேரோட்டம், திருமேனிகள் புறப்பாடு, குருபூசை, இராமநவமி, மகா சிவராத்திரி, சேது நீராடல் போன்ற சமய நிகழ்ச்சிகளில் அவர் உற்சாகத்துடன் கலந்து கொண்டதை தெரிவிக்கின்றன. அவை மக்களது ஆன்மீக வளர்ச்சிக்கு உறுதுணையாக அமைய வேண்டும் என்ற அவாவுடையவராக இருந்தார் என்பதும் இரவு பகலாக விரதம் அனுஷ்டிப்பதிலும், ஆகம விதிப்படி திருக்கோயில் நடைமுறைகள் நிகழவேண்டும் என்பதிலும் அவர் கண்டிப்பாக இருந்தார் என்பதும் தெரிய வருகின்றது மன்னரது கட்டுப்பாட்டிலிருந்த இராமேசுவரம், இராமநாதபுரம், திருஉத்திரகோசமங்கை ஆகிய ஊர்களில் திருக்கோயில் நிர்வாகமும் பூசை முதலியனவும் ஆகம விதிகளின் படி நடை பெறுமாறு வலியுறுத்தி வந்ததாக இப்பதிவுகளில் காணப்படுகின்றன.

என்றாலும் பழமை விரும்பிகளுக்கும் போலித்தனமான பக்தர்களுக்கும் மன்னரது உயர்ந்த நோக்கமும் உன்னதமான செயல்களும் உடன்பாடாக இல்லாததால் அவர்கள் பெரும் எதிர்ப்பை ஏற்படுத்தினர். இதனால் மனமுடைந்த மன்னர், தமது இராமேசுவரம் திருக்கோயில் அறங்காவலர் பதவியை கி.பி. 1901-ல் ராஜினாமா செய்தார். கி.பி. 1893ல் இந்தப் பதவியை ஏற்கும்பொழுது அவர் அடைந்த எல்லையற்ற மகிழ்ச்சிக்கும் கூடுதலான சஞ்சலத்துடன், அதனை அவர் துறக்க வேண்டியதாயிற்று. இது போன்ற செய்திகளையும் இன்னும் அவரது வாழ்க்கை இலக்குகள், ஆசைகள், அவருடன் தொடர்புடையவர்கள், மன்னரால் உதவி பெற்றவர்கள், ஆகியவர்களைப் பற்றிய கணிப்புகளும் கருத்துகளும் அவரது நாட்குறிப்பில் காணப்படுகின்றன. அத்துடன் இராமநாதபுரம் அரண்மனையில் புலியுடன் ஆட்டுக்கிடாய் சண்டையிட்ட அபூர்வமான காட்சி, அவரது அருமைச் சகோதரர் தினகர் அவருக்கு எதிராக

"பிளாக்மாஜிக்" என்ற வஞ்சனையில் ஈடுபட்டது. அன்பு மகன் ராஜ ராஜேசுவரனை அரண்மனைக்கு வெளியே அழைத்துச் சென்று உலவி வந்தது போன்ற உள்ளத்தை நெகிழச் செய்யும் நிகழ்ச்சிகளும் அந்த நாட்குறிப்புகளில் பதிவாகி உள்ளன.[7]

இதனைப் போன்றே, இந்த மன்னரது சொந்த செலவு கணக்குப் பதிவேடு, மன்னருடன் தொடர்புடைய வாழ்க்கை நிகழ்ச்சி பலவற்றைக்கோடிட்டுக் காட்டுகின் றது நண்பர்களைச் சந்திக்கவும், நாட்டுப் பிரச்சினை களைக் கவர்னருடன் பேசித்தீர்வு காணவும் அவர் அடிக்கடி சென்னை செல்வது வழக்கம். மிகக் குறைவான போக்குவரத்து வசதிகள் இருந்த அந்நாளில் இராம நாதபுரத்திற்கும் சென்னைக்கும் நேரடியான பயண வசதி இல்லாததால் அவரும் அவரது பணியாட்களும், மதுரை சென்று, ரயிலைப்பிடித்து ஈரோடிற்கும், பின்னர் அங்கிருந்து சென்னைக்கும் செல்வது வழக்கம். அவர் சென்னையில் தங்கும் பொழுது உபயோகிப்பதற்காக மதுரையிலிருந்து பீட்டன் என்ற கோச் வண்டியும், குதிரைகளும் ரயிலில் கொண்டு செல்லப்பட்டன. பொன்னாலான தண்டங்களைத்தாங்கிய மெய்க்காவலர் களும் சீருடை அணிந்து மன்னருடன் சென்றனர்.

மதுரை, திருப்பரங்குன்றம் ஆலயங்களில் வழிபாடு, ஆங்கில நீதிபதிக்கு விருந்து அளித்தது. சென்னைராயப் பேட்டை "உட்லண்ட்ஸ்" மாளிகையில் தங்கல்புரசை, மயிலை, திருவல்லிக்கேணி ஆலயங்களில் வழிபாடு, அர்ச்சகர், தேவதாசிகளுக்கு அன்பளிப்பு, ஆர்க்காட்டு நவாப், சென்னை கவர்னர், திருவனந்தபுரம், பொப் பிலி, மன்னர்களது தொடர்பு, பொது நிறுவனங்களுக்கு அன்பளிப்பு, சட்ட வல்லுநர் பாஷ்யம் அய்யங்கார், பாடகர் தட்சிணாமூர்த்தி சிவன் ஆகியோருடன் அள வளாவியது, ஷேக்ஸ்பியர் நாடகம் கண்டுகளித்தது.

---

7. சென்னையில் உள்ள தமிழ்நாடு ஆவணக்காப்பகத் தில் இந்த நாட்குறிப்பு பாதுகாக்கப்பட்டு வருகிறது.

போன்ற அன்றாட நிகழ்ச்சிகளுக்குச் செலவு செய்யப் பட்ட விபரங்களையும் இந்த பதிவேடு தருகிறது.[8] இத் தகைய ஆவணங்களும் மன்னரது ஏனைய பதிவுகளும் முழுமையாக கிடைத்திருந்தால் மன்னரைப் பற்றியும், அன்றைய அரிய நிகழ்ச்சிகளையும் இன்னும் அதிக மாகத்தெரிந்து கொள்வதற்கு வாய்ப்பாக இருந்திருக்கும். காலத்தின் கனிவு கிட்டவில்லை. எனினும் கிடைத்த ஆவணங்கள், செய்திகள் தொகுப்பாக இந்த தொகுப் புரை தொடர்கிறது.

★ ★ ★

பருவமுற்ற பிள்ளைகளுக்குத் தக்க துணையைத் தேர்வு செய்து மணவினையை முடித்து வைக்க விரும்பு வது பெற்றோர் இயல்பு. அழகும் அறிவும் மிகுந்த இளைஞர் பாஸ்கரருக்கு திருமணம் செய்து வைக்க எண்ணினார் அவரது தயார் முத்தாத்தாள் நாச்சியார். இராமநாதபுரம் சமஸ்தான ஆட்சிப் பொறுப்பு. கும்பெனித் துரைத்தனத்தாரிடம் அப்பொழுது இருந்து வந்ததால், அவர்களது அனுமதியைப் பெற ராணியார் முயன்றார். இளம் பாஸ்கரரது இனிய கல்விக்கு மணவினை இடையூறாக இருக்குமென்று கருதப்பட்ட தால் முதலில் அனுமதி மறுக்கப்பட்டது. ஆனால், கி.பி. 1888ம் வருடம் மே திங்களில் இளவரசர் பாஸ்கரர் எப்.ஏ. பட்டத் தேர்வில் தேர்வு பெற்றபிறகு அரசாங்கத் தார் பாஸ்கரரது திருமணத்திற்கு ஒப்புதல் அளித்தனர். அத்துடன் சமஸ்தான நிதியில் இருந்து திருமணச் செல விற்காக ஐம்பது ஆயிரமும் ஒதுக்கீடு செய்தனர். ஆனால், ராணியார் ரூபாய் ஒரு லட்சத்திற்கு மேல் செலவு செய்து பாஸ்கர சேதுபதி திருமணத்தை 13-5-1888-ல் ஆடம்பர மாக நடத்தி வைத்தார். மன்னரது வாழ்க்கைத் துணை யாக வந்தவர். களரி கிராமம் சேதுராஜாத் தேவர் மகள் மங்களேசுவரி நாச்சியார் ஆவர். இந்தச் சிறப்பான திருமண நிகழ்ச்சியை கவிஞர் ராமலிங்கம் என்பவர்

---

8. இந்தப்பதிவேடு இந்த நூலாசிரியரால் கண்டுபிடிக் கப்பட்டு இராமநாதபுரம் மாவட்ட வரலாற்று ஆவணக் குழுவிடம் ஒப்படைக்கப் பட்டுள்ளது.

கும்மியாகவும் இன்னொரு புலவரான சின்னையாபிள்ளை "திருமண ஊசலாகவும்" படைத்துள்ளனர்.o

இந்த திருமணம் நடைபெற்ற சில நிமிடங்களில், மன்னருக்கும் சிவபாக்கியம் நாச்சியார் என்ற மங்கை நல்லாளுக்கும் அரண்மனை அந்தப்புரத்தில் மற்றுமொரு திருமணமும் நிறைவேறியது. ஏற்கனவே, கும்பெனியார் இந்த இரண்டாவது திருமணத்திற்கு அனுமதி மறுத்த தால், உறவினர்கள் முன்னிலையில் இந்தத் திருமணம் தனியாக நடந்தது. சுற்றத்தாரிடையே பகைமை உணர் வும் பூசலும் ஏற்படாமல் தடுப்பதற்கு ஏற்கனவே அவ ரது தாயாரால் நிச்சயிக்கப்பெற்ற இரு பெண்களில் ஒருவரை முதலில் மணந்தார். அடுத்த பெண்ணுக்கு ஏற் படும் தலைக்குனிவையும் மனக் குழப்பத்தையும் தவிர்ப்ப தற்காகவே இரண்டாவது திருமணத்திற்கும் மன்னர் உடன்பட்டார்.

மன்னரது தூரத்து உறவினரான தூவல் கிராமம் கண்ணுச்சாமித்தேவர், தமது மகள் சிவபாக்கியத்தை இராமநாதபுரம் அரண்மனைக்கு அழைத்து வந்து கி.பி. 1885ல் மன்னரது தாயாரிடம் ஒப்படைத்து திருமணத் திற்கு ஏற்பாடு செய்யுமாறு கோரினார். துரைத்தனத் தாரின் முன்னனுமதி பெறுவதில் ஏற்பட்ட தாமதத்தின் பொழுது, ராணியின் இன்னொரு உறவினரான களரி கிராமம் சேதுராஜா தேவர் அவரது மகள் மங்களேசு வரியை மன்னருக்குத் துணைவியாக ஏற்றுக்கொள்ளு மாறு ராணியை வற்புறுத்தி வந்தார். இருவரும் மன்னரது உறவினர்கள். இவர்களில் யாராவது ஒருவரைப் புறக் கணித்தாலும் சுற்றத்தாருக்குள் மனவருத்தம் ஏற்படுவது இயல்பு. ஆதலால் இருவரையுமே மணப் பெண்களாக வரித்துக்கொள்ளும் நிர்ப்பந்தம் மன்னருக்கு ஏற்பட்டது.

இருபது ஆண்டுகள் நிறைவு பெற்ற இளம்மன்னர் பாஸ்கரது இல்லறம் நல்லறமாக நடந்தது. மனைமாட்சி

---

o இந்த இருபடைப்புக்களும் இந்த நூலின் இறுதியில் இணைப்பாக கொடுக்கப்பட்டுள்ளது.

யின் மங்கலம் மக்கட்பேறு அல்லவா? இரண்டாவது மனைவி சிவபாக்கியம் நாச்சியாருக்கு மைந்தன் ஒருவன் பிறந்தான்[9]. மகிழ்ச்சியில் திளைத்த பாஸ்கரர் மகனுக்கு "ராஜ ராஜேசுவரன்" எனப் பெயர் சூட்டி மகிழ்ந்தார் மன்னர் மகன் "மன்னர் மன்னன்" தானே! இதற்கிடையில் சமஸ்தானத்தை நிர்வகிக்கும் வயதை பாஸ்கர சேதுபதி எய்தி விட்டதால் ஆட்சிக் குழுவினர் இராமநாதபுரம் சமஸ்த்தான ஆட்சிப்பொறுப்பை அவரிடம் ஒப்படைத்தனர்.

பிறந்த நாள் 3 6-1889. முதல் மனைவிக்கும் அடுத்து ஒரு குழந்தை பிறந்தது. ஆனால் விரைவில் இறந்து விட்டது. இதனால் தமக்குப் பின்னர் சமஸ்த்தான உரிமை மைந்தன் ராஜ ராஜேசுவரனுக்கே சேர வேண்டுமென்ற விருப்பத்தை 11-7-1892ல் ஆவணம் மூலம் பதிவு செய்து வைத்தார் பாஸ்கரர்.

# 3

## கோமான் ஆட்சியும் கொடையின் மாட்சியும்.

பாஸ்கர சேதுபதி மன்னர், இராமநாதபுரம் சமஸ்தான ஆட்சியை சுமார் ஆறு ஆண்டுக்காலம் ஏற்று இருந்தார். அவரது தந்தையார் காலம் முதல், வாரிசு உரிமை பற்றிய நீண்டகால வழக்குகளினால் சமஸ்தான நிர்வாகமும் அதன் நிதி வசதிகளும் மிகவும் பாதிக்கப்பட்டிருந்தன. என்றாலும் அடுத்து ஆட்சிப் பொறுப்பை மேற்கொண்டிருந்த ஆட்சிக் குழுவினர் ஓரளவு நிர்வாகத்தை திறம்பட இயக்கி வந்திருந்தனர். இந்த நிலையில் சமஸ்தான நிர்வாகம் மன்னர் பாஸ்கரர் கைகளுக்கு வந்தது. அப்பொழுது அவருக்கு வயது இருபத்து ஒன்று. இந்தியாவில் அந்தக் கால கட்டத்தில் வேறு எந்த சமஸ்தானத்திலும் இவ்வளவு இளம் வயதினர் சமஸ்தானாதிபதியாக இருந்தது இல்லை.

என்றாலும், இந்த இளஞ்சிங்கம், தனியரசர்களாகவும் தன்னேரிலாத ஆட்சியாளர்களாகவும் விளங்கிய தமது முன்னோர்களது ஆட்சித்

திறனையெல்லாம் நன்கு அறிந்தவராக இருந்ததால், சமஸ்தானத்தின் செம்மையான நிர்வாகத்திற்குரிய செயல்களில் ஈடுபட்டார். முதல் நடவடிக்கையாக சமஸ்தானப் பகுதிகளுக்கு பல்லக்கில் பயணம் செய்து தம்முடைய குடிமக்களது வாழ்க்கை நிலையையும், மனோபாவத்தையும் நேரில் கண்டறிந்தார். இரண்டாயிரத்து நாற்று எழுபது கிராமங்களையும் அவற்றில் இருந்து ஆண்டு வருமானமாக சுமார் எட்டு லட்சம் ரூபாய் வருவாயும் கொண்டுள்ள அப்போதைய இராமநாதபுரம் சமஸ்தானத்தின் காலங்கடந்த பல தேவைகளை உடனடியாக நிறைவேற்ற முயன்றார். குறிப்பாக இரண்டு லட்சம் ரூபாய் செலவில் திருப்புல்லாணி, திரு உத்தரகோசமங்கை, திருவாடானை திருச்சுழியல் திருக்கோயில்களின் திருப்பணியை மேற்கொண்டார். மதுரையிலும் சென்னையிலும் உள்ள துரைத்தனத்தாரின் உயர் அலுவலர்களை அணுகி பல கண்மாய்களைப் பழுது பார்ப்பதற்கும்ஆவன செய்தார்.

ஆங்கில மொழியை. எழுத்திலும் பேச்சிலும். இனிமையும் அருமையும் அமையக் கையாளும் திறனும், யாவரிடமும் அன்பாகக் கலந்து உரையாடும் தேர்ச்சியும் பெற்றிருந்த மன்னரிடத்தில், கவர்னர், கலைக்டர் முதலிய அதிகாரிகளும், ஜமீன்தார்களும், சமஸ்தானாதிபதிகளும், கனிவும் மதிப்பும் கொண்டு பழகி வந்தனர். இந்திய அரசு அவருக்கு "மகாராஜா" என்ற சிறப்பு விருதை வழங்கிக் கௌரவித்தது. அவரும் உண்மையான "மகாராஜா" வாகவே வாழ வேண்டும் என விழைந்தார் என்பதை அவரது அறக்கொடைகளும் அரிய செயல்களும் நமக்குப் புலப்படுத்துகின்றன. பாஸ்கர சேதுபதி மன்னருக்கு முன்னூறு ஆண்டுகள் வரை இராமநாதபுரம் சீமையை ஆண்டு வந்த சேதுபதி மன்னர்கள் திருமலை ரகுநாத சேதுபதி (கி.பி. 1646-74) முதல் முதலாவது முத்துராமலிங்க விஜயரகுநாத சேதுபதி மன்னர் (கி.பி. 1762 – 1795) வரை எந்த அரசுக்கும் கட்டுப்படாத கப்பம் செலுத்தாத - தன்னாட்சி மன்னர்களாக இருந்து

வந்தனர். அதனால், அந்தத் தொன்மையான சேதுபதி மன்னர் பரம்பரையின் பிரதிநிதியாக நாமும் இருக்க வேண்டும் என்ற பேரவாவினால் குறிப்பிட்ட சட்ட வரம் பிற்குட்பட்ட, குறைந்த நிதி வசதியுடைய ஜமீன்தார் என்பதை அவர் மறந்தார் குடிமக்களுடைய தேவை களையும், தமது வாழ்க்கையின் இலட்சியங்களாகக் கரு தும் பல செயல்களையும் நிறைவேற்றி வைக்கத் துடித் தார். அவர் புகழுடம்பு பெறுவதற்குப் பத்தாண்டுகளுக்கு முன்னர் தமது இருபத்து ஐந்தாவது வயதில் அவர் வரைந் துள்ள நாட்குறிப்புகள் இந்தப் பேருண்மையைப் புலப் படுத்துகின்றன.

★ ★ ★

1893 வது ஆண்டு ஜனவரித்திங்கள் பதின்மூன்றாவது நாள். பொங்கல் திருநாளில், தமிழக மக்கள் பூரித்து மகிழ்வது வழக்கம். ஆனால், பாஸ்கர சேதுபதி மன்ன ரைப் பொறுத்தவரை அவரது சிந்தனை பொங்கலுக் கும் மேலாக பொங்கி வழிந்தது என்பதனை அவரது அன்றைய நாட்குறிப்பில் பதிவுகள் சொல்லுகின்றன. தமது எஞ்சிய வாழ்நாளில் குறைந்தது முப்பத்து மூன்று சாதனைகளையாவது செய்து முடிக்க இறைவனிடம் அன்று வேண்டிக் கொண்டார், அவையாவன,

- தமிழின் வளர்ச்சிக்காக தமிழ்ச்சங்கம் ஒன்றை நிறுவுதல்.
- குறைந்தது பன்னிரண்டு தமிழ் நூல்களையும், பன்னி ரண்டு வடமொழி நூல்களையும் ஏட்டுச்சுவடிகளில் இருந்து அச்சேற்றி வெளியிடுதல்.
- மேற்படிப்பிற்கு செல்லும் தீண்டத்தகாத மாணவர் களுக்கு சென்னை, மதுரை, ஆகிய பெருநகர்களில் தங்கும் விடுதிகளை அமைத்தல்.
- தம்மைப் பெற்றுவளர்த்த அன்புத்தாயாருக்கு மாத்ரு கருமங்கள் (இறுதிச்சடங்குகள்) செய்யும் வாய்ப்பைப் பெறுதல்.

- இராமேஸ்வரம் திருக்கோயில் திருப்பணி செய்தல்.
- இராமேஸ்வரம் திருக்கோயில் நிர்வாகத்தை பண்டாரத்திடமிருந்து ஏற்று செம்மையாக நிர்வகித்தல்.
- தனுஷ்கோடி தீர்த்தக்கரையில் அர்த்தோதய, மகோதய நாட்களில் புனித நீராடுதல்.
- மதுரை மீனாட்சி அம்மன் கோயில் திருப்பணி செய்தல்.
- லண்டன் மாநகரம் சென்று ராணி விக்டோரியாவை சந்தித்தல்.
- பிரிட்டிஷ் அரசிடமிருந்து உயர்ந்த விருதுகளைப் பெறுதல்
- தமது அன்பிற்கும் மதிப்பிற்கும் உகந்த அண்ணன் பாண்டித்துரைத் தேவருக்கு முன்னால் இறந்துவிடும் வாய்ப்பைப் பெறுதல் - வலியும் வேதனையும் இல்லாத நிலையில் இறைவனது சிந்தனையுடன் மரணித்தல்.

இன்னும் இவை போன்ற இருபத்து இரண்டு ஆசைகள் அவரது வாழ்வில் எய்த வேண்டிய இலக்குகளாகும். சமயத்திலும் மொழியிலும் தோய்ந்து நின்ற ஈடுபாட்டிற்கும். அன்னையிடத்திலும், அண்ணனிடத்திலும் கொண்டிருந்த ஆழிய அன்பிற்கும், எளிய மக்களிடம் ஈடுபட்ட உயர்ந்த உள்ளத்திற்கும், எடுத்துக்காட்டாக அவரது இந்த இலக்குகள் - நாட்குறிப்பு பதிவுகள் அமைந்து இருக்கின்றன. அன்றைய சமஸ்தான அதிபதிகளில் எத்தனை பேருடைய இதயங்களில் இத்தகைய சீரிய சிந்தனைகள் இழையோடி நின்றன! அதுவும் இருபத்து ஐந்து அகவை நிரம்பாத இளவலிடம்!

எண்ணரிய கேளிக்கைகள், ஆடல்பாடல்கள், இன்பச் சூழல்களில் - அமைதியான அந்தப்புற வாழ்க்கைக்கு

மாற்றமாக, இளமைத்துடிப்பும் இறையுணர்வும் மிக்க இலட்சிய மனிதனாக விளங்க வேண்டும் என்ற அற்புத வடிவமாக மன்னர் விளங்கினார்.

இனிய சாதனைகளுக்கு ஏற்ற களம் இளமைக்காலம் என்பதை மன்னர் உணர்ந்தார். அத்துடன் "அன்றறிவாம் என்னாது அறம் செய்க" என்ற வள்ளுவத்தை அறிந்தவர் அல்லவா? ஆற்றொழுக்குப் போல ஒருவர் பின் ஒருவராக நாள்தோறும் தம்மை நாடி வருகின்ற நாவலர்கள், நல்லிசைப் புலவர்கள், கலைஞர்கள், வறுமையையும் சிறுமையையும் வாழ்க்கைச் சுமையாகக் கொண்ட பல திறப்பட்ட மக்கள் ஆகிய அனைவரையும் காலமெல்லாம் தாங்கும் ஆலமரமாகவே அவர் காட்சி அளித்தார். நொந்து வந்தவர் யாராக இருந்தாலும், அவரது சிந்தை குளிர தமது செழுங்கரங்களால் பொன்னையும் பொருளையும் அள்ளி அள்ளி வழங்கி அகம் மகிழ்ந்தார். ஆய்ந்து சிவந்த அவரது உள்ளத்தைப் போல அவரது கரங்களும் ஈந்து சிவந்தன. ஏழைகள் திருமணம் கல்விக்கூடம், கலாசாலை மாணவர் விடுதி, மேல்படிப்பு வசதி, பத்திரிகை, கோயில் கட்டளை, திருப்பணி, திருவிழா, திருமேனி, அங்கி உற்சவம், வாகனம் என்பன போன்ற அறப்பணிகளுக்கான கோரிக்கைகள் எத்தனை வந்தாலும் அவை அத்தனையையும் நிறைவேற்றிக் கொடுப்பதற்கு மன்னரது நெகிழ்ந்த மனமும், நிறைந்த கரங்களும் துணை நின்றன.

இவை போன்று, இன்னும் தேசிய காங்கிரஸுக்கு ரூபாய் பதினாராயிரம், சென்னை கிறித்துவக் கல்லூரியில் மாணவர் விடுதியும் உயர்நிலைப் பள்ளியும் அமைக்க ரூபாய் நாற்பது ஆயிரம், முகவையில் தீண்டப்படாதோர் குழந்தைகளின் கல்விக்கு ரூபாய் பதினாறாயிரம், மதுரை அமெரிக்க மிஷன் மருத்துவமனைக்கு ரூபாய் ஆறாயிரம், மதுரை யூனியன் கிளை நூலக கட்டிட அமைப்பிற்கு ரூபாய் ஐயாயிரம், மதுரை உயர்நிலைப் பள்ளிக்கு ரூபாய் மூவாயிரம்—இப்படிச் சேதுபதி மன்னரது நன்கொடைப் பட்டியல் நீண்டு கொண்டே செல்

கின்றது. இந்தச் சிறு கையேட்டிற்குள் அதனை அடக்க இயலாத காரணத்தினால் பட்டியலை இங்கே நிறைவு செய்ய முடியவில்லை. அவரது 1893-ம் ஆண்டு ஜூன் 27ந் தேதி நாளிட்ட அவரது நாட்குறிப்புப் பதிவின்படி கி.பி. 1890-93க்கும் இடைப்பட்ட நான்கு ஆண்டுகளில் மட்டும் நாற்பது இலட்சத்திற்கும் அதிகமான ரூபாயைக் கொடையாக வழங்கி இருந்தார் எனத் தெரிகிறது[10] இரண்டு மலைகள் உள்ளன. ஒன்று தங்கத்தினாலானது. மற்றொன்று வெள்ளியிலானது இரண்டையும் உருக்கி பவுனாகவும் ரூபாயாகவும் மாற்றி மன்னரிடம் கொடுத்தால் அது அவரது சிறிதுநேரச் செலவிற்குத் தான் பயன்படும். இதனைப் போன்றே வறட்சிக் காலத்தில் வருண ஜெபம் செய்தால் சில சமயங்களில் மழை பெய்யும் ஆனால் பாஸ்கர சேதுபதியின் கரங்கள் நீட்டுகின்ற காலத்தில் எப்பொழுதும் பொன்மழை பொய்யும். ஆகையில் இத்தகைய பாஸ்கர சேதுபதி பிறந்திராவிட்டால் ஆலயங்கள் சீராக இருக்காது; தமிழ்ப் புலவர்கள் வாழ்வு சிறப்படைந்து இருக்காது தருமமும் தழைத்து இருக்காது. இப்பொழுது பாடல்களைப் படியுங்கள். மேலும் 12-7-1895-ந் தேதியன்று மன்னருக்கு இருபது லட்சம் ரூபாய் பற்றாக்குறை இருந்ததும் தெரிகிறது அதனால் சமஸ்தான கருவூலம் காலியாகிய இடர்ப்பாடான சூழ்நிலையிலும், மன்னரது கொடுத்துப் பழகிய கைகள் சோர்ந்து விடவில்லை. மிகவும் இக்கட்டான நிலை ஒன்று ஏற்பட்டபொழுது, நவரத்தினங்கள் இழைத்த எட்டு நவகண்டி மாலைகளும், முத்துக்களால் ஆன முத்தாரங்களும் மன்னரது அறையில் இருந்து, கானாடுகாத்தான் எஸ்.ஏ. அண்ணாமலைச் செட்டியாரது இரும்புப் பெட்டிக்கு மாறியது, ஈட்டுப்பணமாக அறுபதினாயிரம் ரூபாய் வாங்கி வரப்பெற்றது. அப்பொழுது. இது ஒரு அவசர நிலை சமாளிப்பாகக் கருதப்பட்டது. இந்த நிகழ்ச்சிக்குப் பின்னர், மன்னர் சமஸ்தான நிர்வாகத்தை ஆட்சிக் குழுவிடம் ஒப்படைத்தார்.

---

10. Diary Entry — 29-6-1893
இன்றைய நாணயச் செலாவணியில் இந்த தொகை இருபது கோடிக்குச் சமம்.

அந்தக் குழுவின் தலைவர் என்ற முறையில் திவானும் இந்த நகைக்கடனை உறுதி செய்து இருந்தார். பின்னர் ஏற்பட்ட இரு கடன் பாக்கிகளுக்கு இந்த நகைகள் ஈடாகக் காண்பிக்கப்பட்டு இருந்தன. மன்னரது மறைவை அடுத்து சமஸ்தானாதிபதியான முத்துராமலிங்க இராஜேஸ்வர சேதுபதியின் காலத்தில் தேவகோட்டை எம் ஆர். எம். ஏ. இராமனாதன் செட்டியார் என்பவர் இந்த நகைக்கடன் பற்றி வழக்குத் தொடர்ந்தார். இளம் ஜமீன்தாரது நலன்களைக் காப்பதற்காக ஆட்சிக் குழுத் தலைவராக நியமனம் பெற்ற திவான், தமது அதிகார நிலைக்குப் புறம்பாக நடந்து கொண்டிருப்பதாக, கடனை மறுத்து எதிர் வழக்கு தொடரப்பட்டது. பல சட்டப் பிரச்சினைகள் தோன்றின என்றாலும், கடன்களுக்கு ஒன்று வட்டி வீதம் கொடுத்து நகைகளை மீட்க ஏற்பாடு செய்யப்பட்டபொழுது, முதல் கடன்தாரரான கானாடுகாத்தான் செட்டியார் நகைகள் அனைத்தையும் நிலுவை பாக்கிக்காக ஏற்கனவே ரூ. 2, 80,000/-க்கு விற்பனை செய்து விட்டார், மீண்டும் சிக்கல்கள், வழக்கு, சென்னை உயர்நீதிமன்றம், லண்டன் பிரிவு கவுன்ஸில் ஆகியவைகளின் பரிசிலனைக்குச் சென்றது. முப்பத்தைந்து ஆண்டுகால நிலுவைக்குப்பின்னர் 1935ல் வழக்கு இராமநாதபுரம் சமஸ்தானத்திற்கு இறுதி வெற்றியை வழங்கி முடிவுற்றது.[11] என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. அவசர நெருக்கடியைச் சமாளிக்க, தற்காலிகமாகச் செய்த ஏற்பாடு, இத்தகைய நீண்ட வரலாறு படைத்தது விந்தைதான்.

"தங்கமலையைப் பவுனாக்கி சந்திரன் சார் கிரியை
துங்கம் பொருந்திய ரூபாயாக்கிச் சொரிந்திடினும்
திங்கள் குடைதங்கும் பாஸ்கர பூபன் செழுங்கமல
செங்கைக்கு பற்றுமா கண நேரச் செலுவினுக்கே!

"சீலத்தவ மறையோர் வருணசெபம் செய்யினும்
கோலக்கருமுகில் பெய்யும் பெய்யாது குகனை
எண்ணிக்க

11) Seshadri — Dr — Setupatis of Ramnad (1972)
(unPublished Thesis)

பாலத்தில் நீறணி பாஸ்கர சேதுபதி கைமுகில்
தாலத்தில் எந்நேரத்திலும் பெய்யும் தனமழையே!

"ஆலயம் சீராமா அரும்புலவர் வாழ்வாரா
காலமெல்லாம் தருமம் தழைக்குமா—ஞானச்
சாந்தகுணச் சேதுபதி தன்மரபிற் பாஸ்கரனாம்
வேந்தன் பிறவா விடில்".

என்ற இந்த மூன்று பாடல்கள் பாஸ்கர சேதுபதி மன்னரது கொடைப் பண்பைத் தெளிவாக அறுதியிட்டுச் சொல்கின்றன. கலியுகக் கர்ணனாக, செம்பிநாட்டுச் சீதக்காதியாக வாழ்ந்த இந்த மன்னரது வாழ்வில் நிகழ்ந்த சில நிகழ்ச்சிகளையும் இங்கு இணைத்துச் சொல்வது பொருத்தமாக இருக்கும்.

சென்னை உயர்நீதி மன்றத்தின் நடுவராக இருந்து புகழ்பெற்ற ஸர். டி எஸ் முத்துச்சாமி ஐயர் வசதியற்ற ஏழைக் குடும்பத்தில் பிறந்தவர். நாள்தோறும் இரவு நேரங்களில் தெரு விளக்குக் கம்பங்களின் அடியில் அமர்ந்து, அந்த வெளிச்சத்தில் படித்துப் பட்டம் பெற்று, பின்னர் சென்னை உயர்நீதிமன்றத்தின் நீதிமானாகும் தகுதி பெற்றவர். கடும் உழைப்பால் உயர்ந்து கல்வியால் சிறந்த இவர் இறந்தபொழுது, மன்னர் மிகவும் துயருற்றார். காசியிலும், சிதம்பரத்திலும், இராமேசுவரத்திலும் உள்ள தமது நிர்வாகப் பிரதிநிதிகளுக்கு தந்திச் செய்திகள் அனுப்பி அந்த திருத்தலங்களில் மறைந்த முத்துச்சாமி ஐயரது ஆத்ம சாந்திக்காக சில சடங்குகளைச் செய்து முடிக்குமாறு செய்தார். அத்துடன், காசியில் ஐந்து அந்தணர்கள் கங்கையில் நீராடி ஐயருக்காக சில பிதிர்க்கருமங்களை நிறைவேற்றி வைக்குமாறும், இந்தச் சடங்குகள் தொடர்பாக ஒரு பசுவை வாங்கி காசி அன்னபூரணி ஆலயத்திற்கு வழங்குமாறும் செய்தார். மேலும், சென்னையில் மறைந்த அந்த நீதிபதியின் நினைவாக அமைக்கப்பட்ட நினைவுச் சின்ன அமைப்புச் செலவின் பெரும்பகுதியை மன்னர் அன்புடன் வழங்கி உதவினார்.[12] உழைப்பால் உயர்ந்த உத்தமரான முத்துச்சாமி ஐயரது திருவுருவிலான அந்த

12. Madurai Mail – 2-2-1985

வெள்ளை பளிங்குக்கல் நினைவுச் சின்னம், சென்னை உயர்நீதிமன்ற வளாகத்தில் இன்னும் அழகாகக் காட்சியளித்துக் கொண்டு இருக்கிறது.

வட இந்திய சமஸ்தானங்களில் ஒன்றான தார் சமஸ்தானத்தின் மகாராணியார், தலயாத்திரையாக இராமேசுவரம் வந்தார். சேதுயாத்திரையின் நிறைவுச் சடங்காக கருதப்பட்ட சேதுபதி மன்னரது தரிசனத்திற்காக அவர் இராமநாதபுரம் வந்தார். அவருக்குப் பாஸ்கர சேதுபதி மிகவும் ஆடம்பரமான வரவேற்பு வழங்கி, பதினைந்து பீரங்கிக் குண்டுகள் முழங்க மரியாதையுடன் தமது தர்பாரில் அமரச் செய்து உபசரித்தார்[13] திருவாங்கூர் மன்னர் சுவாதித் திருநாள் இராமேசுவரம் யாத்திரை சென்று திரும்பும் பொழுது, அவருக்கும் அவரது குழுவினருக்கும் இத்தகைய தொரு சிறப்பான வரவேற்பினை அளித்து மன்னர் உபசரித்தார்.[14].

தமது மெய்க்காப்பாளராக இருந்த வீரபத்திரன் சேர்வைக்கு சிறந்த மாளிகை ஒன்றை நிர்மாணித்துக் கொடுத்ததுடன், அந்த மாளிகையின் "புதுமனை புகுவிழாவிற்கு" அரண்மனை சம்பிரதாயத்தையும் மீறி, நேரில் சென்று சிறப்பிக்கவும் செய்தார். இந்த மாளிகை இன்றும் "சக்தி விலாசம்" என்ற பெயரில் வழங்கி வருகிறது. இன்னொரு அந்தரங்கப் பணியாளராக ஆறுமுகம் சேர்வை' எந்தவித வசதியும் இல்லாமல் மனம் நொந்த நிலையில் இருந்தபொழுது, அவருக்கு மன்னர் ஆறுதல் கூறியதுடன், அவர் சொந்தமாக வீடுகட்டிக் கொள்வதற்கும், பிற செலவுகளுக்குமாக ரூபாய் இருபத்து ஐயாயிரம் வழங்கியதுடன், அவரது குடும்பத்தினர் கவலையற்று வாழ்வதற்கு தமது சமஸ்தானத்தில் இரண்டு கிராமங்களையும் நீண்டகாலக் குத்தகையில் கொடுத்துமகிழ்ந்தார். இவ்விதம் எல்லா வசதிகளையும் மன்னரிடமிருந்து

---

13. Madura Mail – 0-1-1894
14. Rajaram Row. T - Manual of Ramnad Samasthanam (1891) p. 208.

பெற்ற இந்தச் சாதாரணப் பணியாளரை மக்கள், அன்று முதல் ''லக்ஷாதிபதி'' ஆறுமுகம் சேர்வை'' என்று பெருமையுடன் குறிப்பிடுவது வழக்கமாகி விட்டது. அந்தச் சேர்வைக்காரரது மாளிகை ''லட்சாதிபதி ஆறுமுகம் சேர்வை வீடு'' என்றும், அந்த வீடு உள்ள பகுதி ''லட்சாதிபதி ஆறுமுகம் சேர்வை சந்து'' என்றும், இராமநாதபுரத்தில் இன்றைக்கும் வழங்கப்பட்டு வருகின்றன.

மிகுந்த அன்புடனும் அக்கரையுடனும் மன்னருக்கு ஊழியம் செய்த மற்றுமொரு பணியாளர் காதர் ராவுத்தர் என்பவர், சிறந்த மல்லர். சிலம்பம், வாள் சண்டை, வேல் வீசுதல் ஆகியவைகளில் ஒப்பாரும் மிக்காரும் இல்லாது விளங்கிய வீரர். வெளியூர் பயணங்களின் பொழுது மன்னரது மெய்க்காவலராக உடன் சென்று வருதல் அவர் வழக்கம். 1902-ல், மன்னர் இராமேசுவரம் இராம மந்திரம் மாளிகையில் தொடர்ந்து மூன்று மாத காலம் தங்கியிருந்தார் கண்ணின் இமையாக, இரவு பகலாக, காதர் ராவுத்தர் மன்னருக்கு ஊழியம் செய்து வந்தார். உறங்கிய நிலையில் கூட காதர் என குழைந்து அழைக்கும் மன்னரது குரல் கேட்டு ''மகாராஜா ஆஜர்'' என்று பணிவாக பதில் அளிப்பார்.

ஒரு நாள் காலை இராமமந்திர மாளிகை முகப்பில் உள்ள பூந்தோட்டத்தில் மன்னர் உலாவிக் கொண்டு இருந்தார். அப்பொழுது அவருடன் வந்து கொண்டிருந்த காதர் ராவுத்தரது இதயத்தில் ஏதோ ஒன்று அழுத்திக் கொண்டிருப்பதை மன்னரது அகக்கண்கள் உணர்ந்துவிட்டன.

''காதர்! ஊருக்கு போக வேண்டுமா!''
''இல்லையே! சமூகம் இப்படி ஏன் உத்திரவிடுகிறது''
''பதில் சரியாகத்தான் இருக்கிறது. ஆனால் உனது மனதுதான் சரியில்லை''.

''அதெல்லாம் ஒன்றுமில்லை மகாராஜா''
''ஏன் இன்னும் மறைக்கின்றாய்?'' மன்னரது குரலில் கடுத்தம் தொனித்தது.

"மகாராஜா! பல வருஷங்களாக எனக்கு
ஒரு ஆசை, நாகூர் ஆண்டவர் பள்ளிவாசலுக்கு
போய் வரவேண்டும் என்று, அங்கு
இன்னும் பத்து நாட்களில் கந்தூரி விழா
இருக்கிறது".

...... என்று தயக்கமாக காதர் பதிலளித்தார்

"நாகூர் போய்வர என்ன செலவாகும்".
"ரொம்பப் போனால் நூறு ரூபாய் தேவைப்
படும்"
"அவ்வளவுதானா! குடும்பத்துடன் போய்
காணிக்கையெல்லாம் செலுத்த நூறு
ரூபாய் போதுமா?".
"மகாராஜா ! அது போதும்!"

மன்னர் அறைக்குள் சென்று சில நொடிகளில் திரும்பி வந்தார். நூல்கயிற்றுப் பைகள் நான்கினை காதரிடம் கொடுத்தார்.

"இந்தா! இதில் இரண்டாயிரம் ரூபாய் இருக்கிறது. நாகூர் சென்று ஆறுதலாக திரும்பி வா. உக்கிரான சாவியை அடைப்பம் சூரியன் சேர்வையிடம் கொடுத்து விட்டுப் போ".

"மகாராஜா! இவ்வளவு பணம் எதற்கு!"
"பரவாயில்லை ! நிம்மதியாக போய் வா"
காதர் ராவுத்தருக்கு ஏற்பட்ட திகைப்பில் அவரது வாயில் இருந்து மேலும் வார்த்தை எதுவும் வர வில்லை![15]

பாஸ்கர சேதுபதி தமது அன்பிற்கும் அனுதாபத்திற்கும் உரியவர்களை எவ்விதம் ஆதரித்து மகிழ்ந்தார் என்பதற்கு இந்த நிகழ்ச்சிகள் சில எடுத்துக்காட்டுக்கள் ஆகும். மேலும் இந்த நிகழ்ச்சிகள், மன்னரது அகங்கனிந்த அன்பிற்கு முன்னால், எல்லோரும் ஒரே வகையாக, ஒரே நிறையாகக் காட்சியளித்தனர், என்பதையும் புலப்

15. இந்த நிகழ்ச்சி பற்றி விவரம் தெரிவித்தவர் காதர் வழியினரும் இராமநாதபுரம் நகர்மன்ற உறுப்பினருமான இராமநாதபுரம் திரு இ. காட்டுவா ராவுத்தர்.

படுத்துகின்றன. இந்த அன்பும் பாசமும் அவரது பணி யாளரிடமிருந்து மட்டுமல்லாமல், அவரைச் சந்திக்கின்ற புலவர், கலைஞர்களிடத்திலும் காட்டாறாகப் பொங்கி வழிந்தது.

சேது மன்னர்கள் அனைவருமே கலையார்வம் மிக்க வர்களாக இருந்தனர். அதனால் கலைஞர்களையும், புலவர்களையும் அவர்கள் போற்றிப் புரந்ததில் வியப் பில்லை. அத்துடன் அவர்களே சிறந்த பன்மொழிப் புலவர்களாகவும், பண்ணும் பதமும் தெரிந்த கலைக் குரிசில்களாகவும் திகழ்ந்தார்கள். பதினேழாம் நூற்றாண் டில் பிற்பகுதி வரை, சேது நாட்டைச் சிறப்பாக ஆட்சி செய்த ரகுநாத திருமலை சேதுபதிமன்னர். அரசவையில் பெரும்புலவர்களான அமிர்த கவிராயர், அழகிய சிற்றம் பலக் கவிராயர் ஆகியவர்களது படைப்புக்களாக "தளசிங்கமாலை" யும் ஒருதுறைக் கோவையும்" அரங்கேற்றம் பெற்றபொழுது, அந்தப் படைப்புக்களின் பா நயத்தையும் பொருள் நயத்தையும் பகுத்துப் பார்த்து, சுவைத்து மகிழ்ந்து, தரத்திற்குத் தக்கவாறு அந்த மன்னர் சிறந்த பரிசில் வழங்கியதாகச் செய்திகள் உண்டு.

அடுத்து. விஜயரகுநாத சேதுபதிமன்னர் அவையில் பணவிடுதூதினையும் "தேவை உலாவை" யும் அரங்கேற் றிய சொக்கநாதப் புலவரும், பெற்ற வரிசைகள் பல. இதே சேதுபதிமன்னர் கோட்டைப் பட்டினம் கோபால ஐயரது வீணை வாசிப்பை மிகவும் ரசித்துக் கேட்டு அந்த இசைக் கலைஞர் நிலக்கொடை வழங்கியதுடன் அதே வீணை வாசிப்பை நாள்தோறும் ஆவுடையார் திருக்கோயிலில் மேற்கொள்ளுமாறு செய்தார். இன்னும் சேதுபதி சீமையினைச் சேர்ந்த சோதுகுடி புலவர் எம். கே எம். அப்துல் காதிறு ராவுத்தர் என்ற சான் றோர், சேதுமன்னரது அரிய நட்பினைப்பெற்ற பெருந் தகையாக இருந்தார். மன்னரது உயர்ந்த உள்ளத்தையும் உன்னத செயல்களையும் கண்டு மனம் நெகிழ்ந்த காரணத்தால் தாம் பாடிய மதுரைத் தமிழ்ச்சங்க மான் மியம் என்ற சிற்றிலக்கியத்தில், சேதுபதிகளது செழுங் குடியையும், கொடைப் பெருமையையும் சிறப்பாக

ஐம்பதிற்கும் அதிகமான பாடல்களில் பாடியுள்ளார். இந்தப் பாடல்களில் மிக்க சிறப்பாக பாஸ்கர சேதுபதியையும் அவரது தந்தை முத்துராமலிங்க சேதுபதியையும், பாடியிருப்பது படித்து இன்புறுத்தக்கவையாக உள்ளன. சேதுபதி மன்னர்களுக்கு "வித்தியா வினோதன்", "சங்கீத சாகித்திய வித்யா விநோதன்", "வீணாபிரசங்கன்" பரத நாடகப் பிரவீணன்" "பரத நாடக பக்திப் பிரியன்" என்ற விருதாவளிகள் இருந்ததை அவர்களது செப்பேடுகள் சொல்கின்றன. அதே கொடிவழியில் வந்த இந்த மன்னர், கலையார்வம் நிறைந்தவராக கல்வி கேள்விகளிலும் இசையிலும் சிறந்தவராக இருந்ததில் ஒன்றும் வியப்பில்லை.

பள்ளிவாழ்க்கையின் பொழுது மேலைநாட்டு இசைக் கலையான பியானோவில் இவர் தேர்ச்சி பெற்று இருந்தார் அல்லவா? ஒருமுறை தனக்கு நெருக்கமான செட்டியார் வீட்டிற்குச் சென்று இருந்த பொழுது, அந்தப் பெரிய மனிதரது மகள் மிகவும் சிறப்பாக பியானோ இசைத்த பாங்கினை, இசையினை, மிக அருமையாக இருந்ததாகப் பாராட்டி தனது நாட்குறிப்புகளில் குறிப்பிட்டுள்ளார்[16] இங்ஙனம் இதயத்தை ஈர்க்கும் இசையில், ஈடுபாடு கொண்டிருந்த இந்த மன்னரைப் பற்றிப் பல செய்திகள் சொல்லப்படுகின்றன. அப்பொழுது சிறந்த வயலின் விற்பன்னராக விளங்கிய திருக்கோடிக்காவல் கிருஷ்ண ஐயர் ஒருநாள் மன்னரது தர்பாரில் அமர்ந்து அருமையாக வயலினை வாசித்துக் கொண்டிருந்தார். கச்சேரி நிறைவு பெறும் நிலையில் மன்னரது விருப்பப்படி காம்போதி ராகத்தை மிகவும் விரிவாக வாசித்து லய வியன்னியாசம் செய்து முடித்தார். பின்னர் வித்வான் அவருக்கு பிரியமான கீர்த்தனம் ஒன்றையும் இசைத்தார்.

"நடமாடித் திரிந்த உனக்கு இடதுகால் உதவாமல்
முடமானதேன் என்று சொல்வீர்—ஐயா?"

---

16. Diary Entry Dated - 13. 4. 1893

என்ற கேள்வியுடன் தொடங்கும் அந்தக் கீர்த்தனம், மன்னரும் மற்றவர்களும் அதுவரை கேள்விப்படாத ஒன்றாக இருந்தது. வித்வான் நிரவல் செய்து வாசிப்ப தற்கு ஏற்றவாறு எளிமையாகவும், ரசிகர்களது உள்ளத் தை ஈர்க்கும் வகையில் வியப்பு, ஏளனம், போன்றஉணர்வு களை உள்ளடக்கியதாகவும் அந்தக் கீர்த்தனம் அமைந்து இருந்தது. அதனால் வித்துவானது வாசிப்பை மன்னர் மிகவும் அனுபவித்துச் சுவைத்தார். பரிசிலை வழங்கி வயலின் வித்வானைப் பாராட்டும் பொழுது, அவர் வாசித்த கீர்த்தனம் தமது பரிசிலைவிடப் பன்மடங்கு பெருமதிப்பு வாய்ந்தது என்பதை சொல்லி தமது மகிழ்ச் சியைத் தெரிவித்தார். பாபநாச முதலியார் என்ற இசைப் புலவர் எழுதிய அந்தக் கீர்த்தனத்தை முழுவது மாக அந்த வித்துவானிடம் இருந்து எழுதிவாங்கி, அச் சிடச் செய்து, தர்பாருக்கு வரும் இசைக் கலைஞர்களுக் கெல்லாம் அதனைக் கொடுத்துப் பாடுமாறு செய்து அந்தக் கீர்த்தனத்தை மிகவும் ரசித்ததுடன் பிரபலப் படுத்தினார்[17].

இன்னொரு முறை, மைசூர் சமஸ்தானத்தில் சிறந்து விளங்கிய வீணை வித்துவான் சேஷண்ணாவை இராம நாதபுரத்திற்கு வரவழைத்து தமது தர்பாரில், அவரது வீணைக் கச்சேரி நடப்பதற்கு ஏற்பாடு செய்தார். வித்துவானும் மன்னர் மீது ''தில்லானா'' ஒன்றை அமைத்து இசைத்தார். அவரது இசைப் புலமையை மன்னர் பாராட்டிச் சிறப்பித்ததுடன் அவருக்குப் பதி னாயிரம் வெண்பொற்காசுகள் வழங்கி''கனகாபிஷேகம்'' செய்து மகிழ்ந்தார். மைசூர் மன்னர்கூட வழங்காத இந்தச் சிறப்பினால், சேஷண்ணா சிந்தை மகிழ்ந்து நெகிழ்ந்து போனார்.

இவ்வாறு அந்தக் காலக் கட்டத்தில், கர்நாடக இசை யில் சிறப்புற்றுத் திகழ்ந்த இசைக் கலைஞர்கள் அனை வரும் இராமநாதபுரம் சமஸ்தானத்தில் தங்களது திறமை யைக் காட்டி ''அரச முத்திரை'' பெற்றுச் செல்வது

17. The Hindu - 7-6-1970

வழக்கமாக இருந்தது. மகா வைத்தியநாதையர், பட்டணம் சுப்பிரமணிய ஐயர், போன்ற பெரும் மேதைகள் மன்னரிடம் மிகுந்த பெருமதிப்புக் கொண்டவர்களாக அடிக்கடி வருகை தந்து மன்னரது விருந்தினராக இருந்தனர் இங்ஙனம் பாஸ்கர சேதுபதி மன்னர் இசைக்கலையில் புரவலராக ஆர்வலராக மட்டுமல்லாமல் தாமே இசையை அனுபவிக்கும் சிறந்த இசைக்கலைஞராகவும் திகழ்ந்தார். சிறந்த வித்வான்கள் அவரைக் கண்டு தமது திறமைக்கு பரிசு பெற வரும்பொழுது அவர்களுக்கு இசைப் பாடல்களையும், ராகத்தையும் குறிப்பிட்டு, அவைகளை இசைக்குமாறு செய்து ஏற்ற பரிசில்களை வழங்கினார்.

ஒருமுறை இராமநாதபுரம் அரண்மனைக்கு, மகா வித்வான்கள் மகாவைத்யநாத ஐயரும், பட்டம் சுப்பிரமணிய ஐயரும், குன்றக்குடி கிருஷ்ண ஐயரும் வந்து இருந்தனர் இந்த மூன்று வித்வான்களது இசைத் திறமையைத் தனித்தனியே பலமுறை கேட்டு, அறிந்து ரசித்தவர் மன்னர். ஆதலால் இம் மூவரையும் ஒன்றாக இணைத்து ஒரு நிகழ்ச்சியை ஏற்பாடு செய்தால் என்ன என்று அவரது சிந்தனை ஒரு நொடி சுழன்றது அன்று மாலையில் இராமலிங்க விலாசம் அரண்மனையில் மிகச் சிறந்த நிகழ்ச்சி நடைபெற்றது. வரலாறுகாணாதவாய்ப்பாக மன்னரும் மக்களும் ரசித்து பரவசமடைந்தனர். மகாவைத்யநாதர் ராகம் பாட, பட்டணம் சுப்ரமணிய ஐயர் தாளம்போட குன்னக்குடி கிருஷ்ண ஐயர் பல்லவி பாடினார்.⁰ முக்கனிப்பந்தரில் தேன்மாரி சொரிந்தது- சோனைமாரியாக.

திருப்புல்லாணியில் பிறந்து, தென்னகத்தில் ஒப்பற்ற லட்சன வித்துவானாக விளங்கிய பூச்சி சீனிவாச ஐயங்காரை தமது தர்பாரில் கௌரவித்து தமது "சமஸ்தான வித்வான்" என்ற பெரும் பேற்றையும் அவருக்கு அளித்தார். இந்தப் பாடகரது இயற்பெயர் சீனிவாசன். எழி

---

o இந்த நிகழ்ச்சி பற்றிய செய்தியை அளித்தவர் மதுரையில் உள்ள இசைப் புலவர் சங்கீதமணி திரு. C.S. சங்கர பாகவதர் அவர்கள்.

லான வண்டினது ரீங்காரம் போல அவரது குரல் மிகவும் இனிமையாக இருந்த காரணத்தால் மக்கள் அவரை "பூச்சி" என (வண்டு) அன்புடன் அழைத்தனர். மெட்ரிக் தேர்வுகளை கல்வி பயில வள்ளல் பாண்டித்துரைத்தேவர் அவருக்கு வசதி செய்ததுடன் அப்பொழுது மிகவும் பிரபலமாக இருந்த பட்டணம் சுப்பிரமணிய அய்யர் என்ற இசை மேதையிடம், திருவையாறில் தங்கி இருந்து, இசைப் பயிற்சியினை முறையாக பெறுமாறு செய்தார். வித்வான் சீனு ஐயங்கார் என மரியாதையுடன் அவரை அழைத்து வந்த மன்னர் தமது நாட்குறிப்பிலும் அவரைப் பற்றிய கணிப்பினை பதிவு செய்துள்ளார். "வெள்ளி இழைபோல தெளிவான அமிர்த தொனியும், பத்தரை மாற்றுப் பசும்பொன் போன்ற இனிய பண்புகளும், இவைகளுக்கெல்லாம் மேலாக நிறைந்த உள்ளமும், இசைக்கென்றே தம்மை அர்ப்பணித்துக் கொண்ட நல்நோக்கும் உடைய அரிய மனிதர்" என அவரை புகழ்ந்து குறிப்பிட்டுள்ளார்[18]. வள்ளல் பாண்டித்துரைத் தேவர் பற்றியும் சேதுபதி மன்னர்கள் பற்றியும், இந்த இசைப் பேரறிஞர் இயற்றிய ஜாவளிகளும், தில்லானாக்களும் இன்றும் இசையரங்குகளில் விருப்பமுடன் பாடப்பட்டு வருகின்றன.

---

ㅇ சங்கீத கலாநிதி எனப்பெரும் புகழ்பெற்ற அரியக்குடி இராமானுஜம் ஐயங்கார் அவர்கள், இந்த மேதையிடமிருந்து இசையை கற்ற சீடராவார்.

18. Diary Entry — 13-12-1893

# 4

## சமயத் தொண்டும் தமிழ்ப் பணியும்

தாமின்புறுவதுடன் தம்மைச் சுற்றி யுள்ள உலகும் கல்வி கேள்விகளால் கவினுற வேண்டும் என்பதே கற்றறிந்தார் விரும்பும் களிபேருவகையாக இருக்கும். எனவே மக்களது நலிவு தீர உதவும் பெருங் கொடையாளியாக மட்டுமின்றி, இறையருளால் எய்திய ஞானச் செல்வத்தை வாய்ப்பு ஏற்படும்பொழுதெல்லாம், பக்திப் பெருக்குடன் வழங்கும் அமுதசுரபியாகவும் விளங்கினார் பாஸ்கரர். ஆங்கிலத்திலும், தமிழிலும் அருவி போலச் சைவ சமய சாரங்களை அருமையாக, இனிமையாக மணிக்கணக்கில் இனிமைப் பொழிவுகளாகக் கொட்டி மகிழ்ந்தார். இத்தகைய இனிய பொழிவு ஒன்றைக் கேட்டுச் சுவைத்த சிதம்பரத்தைச் சேர்ந்த பத்திரிகைச் செய்தியாளர் ஒருவர்.

"......மன்னரது மட்டற்ற பாண்டித்தியத்தை-ஆங்கிலத்திலும், தமிழிலும், சமஸ்கிருதத்திலும் - அவருக்கிருந்த விசாலமான நுண்மான் நுழைபுலத்தைச் சுட்டுகின்ற சாதனை

மாக அவரது சொற்பொழிவு அமைந்து இருந்தது. இந்துச் சமயத் தத்துவங்களிலும் அவற்றில் பொதிந்துள்ள உண்மைகள் பற்றிய தெளிவினை அறிய இந்திய நாட்டுப் பெருநகரங்கள் அனைத்தும் இந்த அரசரை அழைத்து அவரது சொற்பொழிவைக் கேட்டல் வேண்டும். இது என்னுடைய தாழ்மையான விண்ணப்பம்'' எனக் குறிப்பிட்டுள்ளார்[19].

சிதம்பரத்தில் நிகழ்த்திய சொற்பொழிவுகளைப் பற்றி தமது தமையனார் பாண்டித்துரைத் தேவருக்கு வரைந்த கடிதத்தில்,

''நான் முந்தின நாளில் செய்த இரண்டு சொற்பொழிவுகளையும் கேட்க நாலாயிரம் பேர் வந்திருந்தனர், உள்ளூர் மாவட்ட முன்சீப்பும். சில பட்டதாரிகளும் கூட சொற்பொழிவுகளை கேட்டனர். முதற்பேச்சு நடராஜ தத்துவம் பற்றியது. இதனைச் சில கருவிகளைக் கொண்டு விளக்கம் செய்தேன். இரண்டாவது பேச்சு ''பக்தி யோகத்திற்கு சண்டேஸ்வர நாயனாரது பங்கு'' என்பது பற்றியது. இரண்டு மணி நேரத்திற்கும் அதிகமாக பேசி முடித்தேன்'' எனக் குறிப்பிட்டு இருந்தார். இந்த இரு சொற்பொழிவுகளும் 1-4-1893ல் நிகழ்த்தப்பட்டவை. பத்தொன்பதாவது நூற்றாண்டின் இறுதியில் தோன்றிய சைவ சமயப் புத்துணர்விற்கு மன்னரது பேருரைகள் பெரிதும் பயன்பட்டன.

தமது சொந்த நகரான இராமநாதபுரத்தில் இருக்கும்பொழுது எல்லாம், பேரறிஞர் பாண்டித்துரைத் தேவரும்,[20] பிற அறிஞர்களும் மாலை நேரங்களில் மன்னரை அணுகி பயனுள்ள கலந்துரையாடலாக சமய இலக்கியப் பரிமாற்றத்தில் ஈடுபட்டு பொழுது போக்குவது வழக்கம் தமது குடும்பத்தாரிடத்திலும் பணியாட்களிடத்தும் சிவநாமம், சிவபூசை, அனுபூதி பற்றிப் பேசாத நாள் அவருக்குப் பிறவாத நாளாகும். ஒருநாள் தமது பன்னிரண்டு

19. Madurai Mail - 19-1-1895.
20. Madurai Mail - 19-1-1995

வயது நிரம்பப் பெற்ற மைந்தன் ராஜராஜேஸ்வர முத்துராமலிங்கம், சிவனடியார்களது காவியுடைபற்றி இழிவாகக் குறிப்பிட்டதற்காக, அந்தப் பிஞ்சு உள்ளத்தின் பேதமையை நீக்க, ஏறத்தாழ ஒரு மணி நேரம் விளக்கம் சொல்லி இளவரசர் மனத்திலே இறையுணர்வை நிரப்பி மகிழ்ந்தார்"[21].

இங்ஙனம் கேட்டார் பிணிக்கும் தகைமையும், கேளார் உவக்கும் பேச்சுத் திறனும் கொண்ட மன்னர் ஏதாவது ஒரு பொருள் பற்றி விளக்கம் சொல்லத் தொடங்கினால், அவரது உரை தங்குதடையில்லாத ஆற்றொழுக்காகத் தொடர்ந்து கொண்டேயிருக்கும். அதிலும் உண்ணும் நேரத்தில் விருந்தாளிகள் யாரும் பேச்சைத் துவக்கினால், மன்னர் தமக்கு முன்னால் உணவு படைக்கப்பட்டு இருப்பதை முற்றும் மறந்து பேசிக்கொண்டே இருப்பார். உணவு பரிமாறும் பணியாளருக்குத்தான் மிகவும் சிரமமாக இருக்கும். ஏனெனில் நேரம் ஆகும்பொழுது மன்னரது இலையில் உள்ள உணவுப் பண்டங்களது சுவையும் இனிமையும் மாறிவிடும் என்பதால் பணியாளர் அந்த இலையை மெதுவாக நகர்த்தி அப்புறப்படுத்தி விட்டு, புதிய இலையில் மன்னருக்கு மறுபடியும் உணவுப்பொருட்களைப் பரிமாறுவார். சில நாட்களில் இவ்விதம் மூன்று முறை இலை மாற்றம் செய்ததும் உண்டு. விருந்தினருக்கு இத்தகைய நிகழ்ச்சி புதுமையாகத் தோன்றும். ஆனால், பாஸ்கர சேதுபதி மன்னர் காலத்தில் இத்தகைய நிகழ்ச்சி இராமநாதபுரம் அரண்மனையில் இயல்பான நிகழ்ச்சியாக இருந்து வந்தது. மன்னரது பேச்சில் இன்ன கருத்து விடுபட்டது என்று யாரும் சொல்ல முடியாத வகையில் பேச்சுக்கள் முழுமையும் பொருள்செறிந்தவையாக இருக்கும். மேலை நாட்டு அறிஞர்களது கொள்கைகளும், தத்துவங்களும் மேற்கோளாக அமைந்து கேட்போருக்கு பெருவிருந்தாக இருக்கும்.

---

21. Madurai Mail – 20-1-1894

ஒருநாள் மதுரையை அடுத்த பசுமலை கிறித்துவ உயர்நிலைப்பள்ளி விழா ஒன்றிற்கு மன்னர் சென்று இருந்தார் அப்போது அங்கு குழுமி இருந்த கிறித்துவ குருமாரும், கல்லூரி பள்ளி ஆசிரியர்களும் மன்னரது பேச்சைக் கேட்பதற்குப் பெரிதும் விழைந்தனர். மன்னரும் விவிலியத்தில் புதிய ஏற்பாடு அல்லது பழைய ஏற்பாடு ஆகிய இரண்டில் எதைப் பற்றிப் பேசவேண்டும் என அவர்களிடம் வினவினார். எந்தத் தலைப்பில் பேசினாலும் தங்களுக்கு மகிழ்ச்சிதான் என அங்கிருந்தவர்கள் கூறினர் மன்னர் ''இரண்டு ஏற்பாடுகளுக்கும் உள்ள ஒற்றுமை - வேற்றுமை பற்றி இரண்டு மணி நேரம் ஆங்கிலத்தில் நீண்ட உரையாற்றினார். குழுமி இருந்தவர்கள் வியப்பு மேலிட்டவர்களாக சொல் புதிது. சுவை புதிது என அவரது பேச்சை மிகவும் சுவைத்து மகிழ்ந்தனர் இந்து சமயச் சான்றோர், ஒருவர், கிறித்துவ சமயக் கோட்பாடுகளின் அடிப்படைகளை வெவ்வேறு பரிமாணங்களில் விளக்கம் செய்வது வியப்பளிக்கும் செயல் தானே!

சிவஞானம் சிந்திக்கப்பெற்ற செல்வருக்கு சொல்வளமும் பொருள்வளமும் பொருந்தி இருந்தது புதுமை இல்லை.

இந்து சமயத்தின் ஒரு பிரிவான சைவ சித்தாந்தத்தைப் பின்பற்றி ஒழுகி வந்தவர் மன்னர், அந்த நெறியிலே சிறந்து விளங்கினார். அவருக்கிருந்த இறைஞானச் செல்வத்தினால் சிறந்த பக்தராக மட்டும் அல்லாமல், பக்தி நெறி பரப்பும் தொண்டராகவும் திகழ்ந்தார். இராமேசுவரம், திருஉத்திரகோசமங்கை போன்ற இராமநாதபுரம் சமஸ்தான திருக்கோயில்களில் நடைபெறும் விழாக்களுக்கு நேரில் சென்று பங்கு கொண்டார். மேலும் சமயம் கிடைக்கும் பொழுது எல்லாம், சைவ நெறி, நடராஜ தத்துவம், திருவாசகம், திருஞான சம்பந்தர் போன்ற தலைப்புகளில் சொற் பெருக்காற்றி குடிமக்களுக்கு ஞானச் செல்வத்தை வழங்கி பக்தி உணர்வை வளர்த்தார்.

அத்துடன், இராமேசுவரத்தில் தங்கி இருக்கும் பொழுது இராமநாத சுவாமி ஆலயத்தில் அர்த்தசாமப்

பூசையில், முழுவதுமாகக் கலந்து கொண்டு, சுவாமி, அம்பாள் திருமேனிகள் பள்ளியறைக்கு எடுத்துச்செல்லப் படும் பொழுது பல்லக்கிற்கு முன்னர் மிகவும் எளியவ ராக தங்கத் தீவட்டி தூக்கி தொண்டு செய்வதை வழக்க மாகக் கொண்டிருந்தார். அப்பொழுது வழங்கப்படும் நைவேத்தியங்களான அன்னம், குழம்பு, வடை ஆகிய வற்றைப் பெற்று உண்பதைப் பெரும் பேறாக நினைத் தார். இதைப் போன்றே, சென்னையில் தங்கியிருக்கும் பொழுது எல்லாம், மயிலை கபாலீசுவரர் ஆலய அர்த்த சாம பூசையில் கலந்து கொள்வதை வழக்கமாக் கொண் டிருந்தார். அதற்கான கட்டளை ஒன்றையும் அங்கு நிறுவினார். அந்தக் கோயில் அர்த்தசாமப் பூசையின் பொழுது சுவாமி ஆரோகணித்துச் செல்லும் வெள் ளிப் பல்லக்கு, மன்னரால் வழங்கப்பட்டதாகும்.

மேலும், திருக்கோயில்களுக்குச் செல்லும் பொழுது, ஏதாவது ஒரு சிறந்த பொருளை அந்தந்தக் கோயில் களுக்குத் தானமாக வழங்கி மகிழும் பழக்கமுடையவராக இந்த சேதுபதிமன்னர் இருந்தார். இராமேசுவரம் பர்வத வர்த்தினி அம்மனைத் தரிசிக்கச் சென்ற பொழுது, அந்த அம்மனுக்கு வைரக்கொலுசு ஒன்றினை அளித்து, அம்பிகையின் திருவடி அழகினைக் கண்டு களிகூர்ந்தார். இன்னொரு முறை, திருப்புல்லாணி ஆதி ஜகந்நாதரது திருக்கோவிலுக்குச் சென்ற பொழுது, தாம் அணிந்து இருந்த வைரக்கடுக்கன்களையும்[22]. எழுபத்து ஆறு பவுன் எடையுள்ள தங்கப்பூணூலையும் வைரக்கிரீடம், ஹஸ்தம் ஆகியவற்றையும், கழற்றிக் கொடுத்து பெருமாளுக்கு அணிவித்து மகிழ்ந்தார். திரு உத்தரகோச மங்கை மங்களநாதசுவாமி தரிசனத்தின்பொழுதும் அவர் அணிந்து இருந்த தங்க அரைஞாண், வைரம் அழுத்திய இடுப்புப்பட்டை, முத்துமாலை ஆகியவற்றை அளித்

22. இந்த வைரக்கடுக்கன்களின் அப்பொழுதைய மதிப்பு ஒரு லட்ச ரூபாய் (25 காரட்நிறை) இராமநாதபுரம் சமஸ்தானம் – திருப்புல்லாணி தலைபுராணம் (1968) பக்கம். (1)

தார். சிதம்பர நடராஜப் பெருமானுக்குப் பச்சைமரகத கிரீடம், மதுரை மீனாளுக்கு தங்க அங்கி ஆகியவற்றை யும் அளித்து மகிழ்ந்தார். அத்துடன் மயிலைக் கபாலீசு வரருக்குப் பல்லக்கு, மதுரைச் சொக்கருக்குத் தேர், அவரது குலதெய்வமான இராமநாதபுரம் ராஜ ராஜேஸ்வரி அம்மன் திருக்கோயிலுக்கு தங்கத்திலான சிம்ம வாகனமொன்றையும் செய்து அளித்ததுடன், இந்தக் கோயிலின் விமானத்தை பொன் வேய்ந்தார் அந்த விமானத்தில் கி.பி. 1893 ல் பொறிக்கப்பட்டுள்ள கல்வெட்டு இதனைத் தெரிவிக்கின்றது.

ஆங்காங்கு உள்ள திருக்கோயில்களுக்கு இவை போன்ற அணிமணிகளை வழங்கித் தமது பக்திப் பெருக்கையும் பண்பட்ட உள்ளக் கிடக்கையையும் புலப் படுத்தி வந்தார் அத்துடன், தமது சமஸ்தானக் கோயில் களில் எல்லாம் ஆகம முறைப்படி அர்ச்சகர்கள் ஆரா தனைகளையும் வழிபாடுகளையும் மேற்கொண்டு வரு கிறார்களா, என்பதை மிகவும் அக்கரையுடன் கவனித்து வந்தார். இராமநாதபுரம் சிவன் கோவிலை மன்னரது முன்னோரான தளவாய் சேதுபதி என்ற இரண்டாம் சடைக்கன் சேதுபதி கி.பி. 1640 ல் நிர்மாணித்தார், இந்தக் கோயிலில் ஒருமுறை நடைபெறவிருந்த குட முழுக்கு விழா ஆயத்தங்களை முதல் நாள் இரவு நேரம் பார்வையிட்ட மன்னர், நமது நாட்குறிப்பில் இவ்வாறு தமது கவலையை வேதனையுடன் குறித் துள்ளார்.

"இந்தச் சடங்குகளைச் செய்து வருகின்ற ஆதி சைவப் பிராம்மணர்கள் அனைவரும் தாங்கள் என்ன செய்கிறோம் என்பதை அறியாதவர்களாக உள்ளனர். துரதிர்ஷ்டவசமாக, நமது குருக்கள்மார் காலப்போக் கில் தங்களது தரத்தில் தாழ்ந்தவர்களாக, சுயநலமிக்க வர்களாக மாறிக்கொண்டு வந்துள்ளனர். இந்த சமஸ் தானத்தில் கோயில் குருக்களாகவோ பூசாரிகளாகவோ பணியாற்றுவதற்கு அவர்கள் தகுதியற்றவர்களாக உள்ளனர்"[23].

---

23. Diary Entry dated – 18-11-1893

இராமேசுவரம் திருக்கோயில் காரியங்களை நடத்திவந்த இராமநாத பண்டாரத்தார் பற்றிய குறைபாடுகளையும் மிகுந்த சஞ்சலத்துடன் வெளியிட்டுள்ளார்[24] இத்தகைய குறைபாடுகள் நீங்கிய நிலையில் கி.பி. 1895ல் திருஉத்திர கோசமங்கை திருக்கோயிலில் திருவாதவூர் அடிகளின் குருபூஜை விழாவை திருவாவடுதுறை ஆதினத்தின் அறிவுரைப்படியும், அவரது தொண்டர்கள் உதவியுடனும் சிறப்பாக மன்னரே நேரில் இருந்து நடத்தினார்.[25] அந்த விழாவையொட்டி நடந்த சுவாமி புறப்பாட்டில், மன்னரும் பஜனைக் குழுவினருடன் சேர்ந்து திரு வீதிகளில் திருவாசகப் பாடல்களைப் பாடிச் சென்றது மறக்க முடியாத காட்சி ஆகும். இத்தகைய நிகழ்ச்சிகளின் பொழுது அந்தந்தத் தெய்வத் திருமேனிகளைப் புகழ்ந்து அவரே பாடல்கள் இயற்றிப் பாடி மகிழ்வதுண்டு. மதுரைச் சோமசுந்தரரது ஆலயத்திற்கு ஒருமுறை சென்று இருந்த பொழுது, "ஆலவாய் அமரும் அந்த அரசர்" மீது "தேவை அமரும் இந்த அரசர்" பதிகம் ஒன்றை உருக்கமாகப் பாடி வழிபாடு செய்தார். அந்த ஆலவாய்ப் பதிகம் இணைப்பில் கொடுக்கப்பட்டுள்ளது.

பிறிது ஒரு நாள் முகவையில் ராஜராஜேஸ்வரி அம்மனை அகங்குளிர தரிசித்த பொழுது, அம்மையின் திருக்கோலத்தில் ஈடுபட்டு கீர்த்தனையொன்றை மன்னர் இயற்றி இசைத்துப் பாடினார். திருக்கோயில்களில் நடைபெறும் நிகழ்ச்சிகள் முறையாக அமைக்கப் பட்டிருந்தால் அவைகளில் தன்னை மறந்து ஈடுபட்டு சம்பந்தப் பட்டவர்களைப் பாராட்டி பரிசு வழங்கவும் அவர் தவறியதில்லை. ஒரு முறை காஞ்சிபுரம் ஆலயம் ஒன்றில் நடைபெற்ற இராமநவமி விழாவிற்கு மன்னர் சென்றிருந்தார். அப்பொழுது நடைபெற்ற சுவாமி புறப் பாட்டின் பொழுது, அந்தணர்கள் மிகுந்த பக்தி சிரத்தையுடன் வேதங்களை முழக்கி வந்ததை அக்கரையுடன் கவனித்தார். அங்கேயே அந்த அந்தணர்களுக்கு ஐநூறு வெண்பொற்காசுகளை வழங்கினார். இந்த நிகழ்ச்சியை

24. Diary Entry dated - 9 8-1893
25. Madurai Mail - 13-7-1895

தமது நாட் குறிப்பில், "அவர்கள் மிகவும் சிறப்பாக, வேதபாராயணம் செய்தனர். அங்கு வழிபாடு செய்ய வந்தவர்களுக்கு இந்த நிகழ்ச்சி நல்ல வளமான சிந்தனையை ஊக்குவித்து இருக்கும்" எனக் குறிப்பிட்டுள்ளார்.[26]

இவ்விதம் ஆலயங்களில் நடைபெறும் வழிபாடுகளும் விழாக்களும் உணர்வு பூர்வமாகவும் ஆகம முறைப்படியும் நிகழவேண்டும் என்பதே அவரது உள்ளார்ந்த நோக்கமாக இருந்தது. அதற்கு ஆதரவு வழங்குவதை, மன்னர் என்ற முறையில் தமது தார்மீகக் கடமையாக அவர் கருதி வந்தார். இதனைச் செயல் வடிவில் நிறைவேற்ற வேண்டும் என்பதற்காக கோவில் விழாக்களில் அவரது சமஸ்தான பரிவாரங்களுடன் அவரே முனைந்து முன்னின்று மற்றவர்களை ஊக்கப்படுத்துவதை வழக்கமாக கொண்டிருந்தார். இராமநாதபுரம் சிவன் கோவிலில் மாணிக்கவாசகரது குருபூசையை நாள் முழுவதும் சிறப்பாக் கொண்டாட ஏற்பாடுகள் செய்ததுடன் அவரும் காலை முதல் இரவு வரை விரதம் பூண்டு அந்த விழா நிகழ்ச்சிகளில் தீவிரமாகப் பங்கு கொண்டார்.[27] இதைப் போன்றே என்றும் இல்லாத புதிய வழக்கமாக இராமநாதபுரம் அரண்மனை ஆலயத்தில் உள்ள ராஜராஜேஸ்வரியம்மனை சிறப்பாக அலங்கரித்து நகரின் முக்கிய வீதிகளில் உலா வருமாறு செய்தார். அன்று இராமநாதபுரம் நகரம் தேவலோகம் போல் அழகும் பொலிவும் பெற்றுத் திகழ்ந்தது என அவரே அகமகிழ்ந்து தமது நாட்குறிப்புகளில் பதிவு செய்துள்ளார்.

இன்னொரு, புதுமையையும் புகுத்தினார், மன்னர். தனுஷ்கோடி தீர்த்தக்கரையில் ஆடி; தைத்திங்கள் அமாவாசை நாட்களில் மக்கள் புனித நீராடலை மேற்கொள்ளுதல் வழக்கம், அங்கிருந்த, சுவேத மாதவர் ஆலயம் கடற்கோளால் பல ஆண்டுகளுக்கு முன்னர் அழிந்து விட்டதால் நீராடலை முடித்த பக்தர்கள் சுவாமி தரிசனத்திற்காக மீண்டும் பதினெட்டு கல் தொலைவு

26. Diary Entry dated. 26. 3. 1893.
27. Diary Entry 5. 6. 1893.

நடந்து இராமேசுவரம் திருக்கோயிலுக்கு வரவேண்டிய நிர்ப்பந்தம் அப்பொழுது இருந்தது. பக்தர்களின் இந்த சிரமத்தை தவிர்ப்பதற்காக இராமேசுவரம், இராமநாத சுவாமியையும், அம்மனையும் தனுஷ்கோடி தீர்த்த வாரிக்கு எழுந்தருளச் செய்து, பக்தர்களுக்குத் தரிசனம் வழங்கச் செய்தார். ஆனால், இத்தகைய புதுமைகளை நடைமுறை மாற்றங்களை-சமயச் சடங்குகளை சரியான கண்ணோட்டமில்லாத கோயில் பணியாளர்கள் ஆதரிக்க வில்லை என்பதைப் பின்னர் அவர்கள் மன்னர் மீது எழுப்பிய புகார்களில் இருந்து தெரிய வருகிறது[28] மேலும், இராமநாதபுரம் அரண்மனையில் உள்ள ஆலயத் திலும், மற்றுமொரு முக்கியமான மாற்றத்தை ஏற்படுத்த விரும்பினர். அந்த ஆண்டு நவராத்திரி விழாவிற்கு வருகை தருவதாக இருந்த சிருங்கேரி மடாதிபதியை ஆவலுடன் எதிர்பார்த்து இருந்தார்.

1894ம் ஆண்டு இறுதியில், இராமநாதபுரம் அரண்மனை யில் நவராத்திரி விழா தொடங்கியது. ஸ்ரீ ராஜராஜேஸ் வரி அம்மன் திருக்கோயிலில் சிறப்பான அலங்காரங் கள், பூசனைகள், காப்புக்கட்டு, அபிஷேகம், அபய்வக னம், மரகதபீட பூசை, அடுத்து பீரங்கி முழக்கம், அதிர் வேட்டுக்கள் வெடிப்பு, வாண வேடிக்கைகள், நாதசுர இசை, தேவரடியார் சதிர் ஆட்டம், அரண்மனை வாத் திய இசை, தேவார திருவாசக இசை, பண்டிதர்கள் வேதகோஷம், பொதுமக்கள், சமஸ்தான ஊழியர்களது வாழ்த்தொலிகள், குதிரைகள், யானைகள், வீரர்கள் அணி வகுப்பு மரியாதை, கொற்றக் குடைகள் தூக்க, கவரி, வெண் சாமரம் வீச, கட்டியம் முழங்க, வண்ண வண்ணத் தோரணங்களையும் லஸ்தர் விளக்குகளையும் அலங்காரக் கொடிகளையும் கடந்து, அரசர் இராமலிங்க விலாசம் அரண்மனை தர்பாரில் கொலு வீற்றிருத்தல், அவருக்கு முன்னால் விரிக்கப்பட்டிருக்கும் திட்டுச் சேலை யில் விழுந்து அவரது உற்றார் உறவினர்கள் தெண்ட னிட்டு வணக்கம் தெரிவித்தல். அடுத்து இராமநாதபுர சமஸ்தானத்தின் பல திருக்கோயில் குருக்கள்மார் அர

---

28. Diary Entry Dated. 29-10-1893.

சருக்குப் பிரசாதம் வழங்கல், சமஸ்தானப் பாடகரது இசைப் பொழிவு, வேதவிற்பன்னர்கள், தமிழ்ப் புலவர்கள், வாழ்த்துக்கள். பாராட்டு, தங்கதோடாக்கள், சாதரா மாதாவி, பட்டாடைகள், பொற்கிழி, ஆகியவை பரிசிலாக வழங்குதல், பத்தாவது நாள் முற்பகல் அம்பு விடும் விழாவும் பிற்பாடு பந்தயங்களும் நடைபெறுதல் வழக்கம்

பொதுவாக, இராமநாதபுரம் அரண்மனை நவராத்திரி விழாவையொட்டி நடைபெறும் வழக்கமான நிகழ்ச்சிகள் இவை[29] அந்த வருடம் சிருங்கேரி சாரதா பீட முப்பத்துமூன்றாவது மடாபதி ஜகத்குரு சச்சிதானந்த சிவ அபிநவ நரசிம்மபாரதி சுவாமிகள் சிறப்பு விருந்தினராக நவராத்திரி பூஜைகளில் கலந்து கொள்ள வந்து இருந்தார் அத்துடன் முக்கியமான கடமை ஒன்றையும் நிறைவேற்றினார் அரண்மனை ஆலயத்தில் பிரதிட்டை செய்து இருந்த ராஜராஜேஸ்வரி அம்மன் சக்தியின் உக்கிரவடிவாக இருந்ததால், அம்மனுக்கு நித்யபூஜை வாம மார்க்கத்தில் உயிர்ப்பலியுடன் நிகழ்ந்து வந்தது. பாஸ்கர சேதுபதிக்கு இந்த நடைமுறை உடன்பாடாக இல்லாததால் சிருங்கேரி சுவாமிகளது உதவியை நாடினார். சுவாமிகளும் உரிய பூஜைகளை மேற்கொண்டு புதிய ஸ்ரீ சக்ரத்தை ஆலயத்தில் நிறுவி, அம்பிகையின் நித்ய பூஜையை வைதீக மார்க்க வழிபாடாக மாற்றி உதவினார் அம்மன் முன் இருந்த மரகதபீடம் அகற்றப்பட்டு ஸ்ரீ சிருங்கேரி மடத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டது. இந்த பீடம் ராய வேலூரில் இருந்து சேதுபதியின் தளகர்த்தர் தெய்வக் கன்னியால் கி பி. 1720 ல் கொண்டு வரப்பெற்று இந்தக் கோயிலில் நிறுவப்பட்டது. விழா முடிந்து, பத்தாவது நாள் பிற்பகலில் சங்கராச்சாரிய சுவாமிகளை வழியனுப்புவதற்காக அவர் தங்கி இருந்த ''சங்கர விலாசம்'' விருந்தினர் மாளிகைக்கு, மன்னர் தமது மகன் ராஜராஜேசுவரனுடனும் பிரதானிகள், சமஸ்தான அலுவலர்களுடனும் சென்றார். ஜகத்குருவைச் சந்தித்து உரையாடிக்கொண்டிருந்த மன்னர், திடீரெனத் தமது தலைப்பாகையையும் உடைவாளையும் கழற்றி,

---

29. Tne Miniature Hindu Excelsior Serial (1892)

சங்கராச்சாரியார் சுவாமிகளது பாதங்களில் வைத்து, 'சுவாமி இந்தப் புனிதமான சேது சமஸ்தானத்தை, காணிக்கையாக ஏற்றுக் கொள்ள வேண்டும். இதனைத் தங்களுக்குத் தானமாக வழங்கிவிட்டேன்'' என மிகுந்த பணிவுடன் கூறிக் கைகட்டி வாய் புதைத்து நின்றார். தமது ஆணைச் சக்கரத்திற்கு உட்பட்ட விண்ணையும், மண்ணையும் தமது இரண்டு அடி கோரி, வாமனனாக வந்த இறைவனுக்கு மாமன்னர் மாவலி வழங்கியதாகப் புராணம் கூறுகிறது. ஆனால், இந்த அரசர் தமது அரும் பொருள் அனைத்தையும் கொடுத்து முடிந்த பிறகு எஞ்சியுள்ள தமது நாட்டையே சங்கராச்சாரிய சுவாமிகளுக்கு குருதட்சிணையாக வழங்கியது வரலாறு. அப்பொழுது அங்கிருந்த அனைவரும் ஆச்சரியத்தினால் அதிசயித்து நின்றனர். சுவாமிகளும் சில வினாடிகள் மௌனமாக இருந்தார். பிறகு, ''நல்லது மன்னரே! உங்களது விண்ணப்பத்தை அங்கீகரித்தோம்'' என பதில் சொல்லிவிட்டு, இளவரசர் ராஜராஜேஸ்வர முத்துராமலிங்கத்தை அவர் அருகில் வருமாறு அழைத்தார். அவர் அருகில் சென்று சுவாமிகளைப் பணிந்து நின்றார். ''இதோ! தங்கள் தந்தையார் எமக்குத் தானமாக வழங்கிய இந்த சமஸ்தானத்தை நாம் உமக்கு வழங்கி விட்டோம்'' எனப் புன்முறுவலுடன் கூறி, அரசரது அலங்காரத் தலைப் பாகையையும் உடைவாளையும் இளவரசருக்கு அணிவித்து ஆசிகள் கூறினார்[30].

சில நிமிடங்களில் நாடகம் போல் நிகழ்ந்த இந்த அற்புத நிகழ்ச்சியைக்காணும் பாக்கியம் பெற்று இருந்த அனைவரும் அதிசயமும் ஆனந்தமும் எய்தினர். இந்தச் சிறந்த நிகழ்ச்சியுடன் அந்த ஆண்டு நவராத்திரி விழா முடிந்தது. என்றாலும் மனநிறைவு பெறாத மன்னர், சங்கராச்சாரியார் அவர்களுக்கு புல்லங்குடி முதலிய ஆறு கிராமங்களை, பின்னர் வழங்கினார் எனத் தெரிகிறது. மற்றும், இராமநாதபுரம் நகரின் மேற்குப் பகுதி

---

30. நஞ்சன் கோடு ஸ்ரீ கண்ட சாஸ்திரிகள் - ஸ்ரீ சிருங்கேரி ஜகத்குரு சச்சிதானந்த அபிநவ நரசிம்ம பாரதி சுவாமி திவ்ய சரித்திரம் – பக்கம் 261-262.

யில் நொச்சி ஊரணி அருகே இருந்த சமஸ்தான கட்டிடத்தையும் ஸ்ரீ சிருங்கேரி மடத்தின் கிளையொன்றை தொடக்குவதற்காக அளித்தார்.

சமயப் பணிகளில் முழுமையான முனைப்புடன் ஈடுபட்டு இருந்த மன்னருக்கு ஏற்பட்ட இடர்ப்பாடுகளினால் அவர் சோர்வுறவில்லை யென்றாலும் அவைகளை ஓரளவு குறைத்துக்கொண்டு தமிழ்மொழியின்பால் தீவிர கவனம் செலுத்தத் தொடங்கினார். சைவ இலக்கியங்களின் பால் கொண்ட பற்று ஒரு காரணமாக, இருந்தாலும் அவரது உடன்பிறவாத தமையனார் பாண்டித்துரைத் தேவர், இந்த மாற்றத்திற்கு முழுக்காரணமாக இருந்தார். பாஸ்கர சேதுபதி மன்னரது ஒன்று விட்ட தமையனார் அவர். என்றாலும் உடன் பிறந்தவர்களைப் போன்று உள்ளத்தால்-உணர்வால் இருவரும் ஒன்றுபட்டவர்கள், சென்ற நூற்றாண்டின் இறுதியில் ஒரு நாள் பாண்டித்துரைத் தேவரவர்கள் மதுரையில் இருந்த பொழுது, திருக்குறள் ஒன்று பற்றிய சரியான விளக்கம் பெற திருக்குறள் நூலைப் பார்க்க விரும்பினார். மதுரை நகரில் பலரிடம் கேட்டுப் பார்த்ததில் திருக்குறள் நூல் கிடைக்கவில்லை தேவரவர்கள் மிகுந்த மன வேதனையுற்றார்கள். கண்ணுதல் பெருங்கடவுளும் கழகமோடமர்ந்து பண்ணுறத் தமிழாய்ந்த நான்மாடக் கூடலில் நாளும் தமிழ் மறையாகப் போற்றப்படும் திருக்குறள் இல்லை யென்றால் பிற நூல்களைப் பற்றி எப்படி எண்ணிப் பார்ப்பது? இயலாத ஒன்று!

இவ்வாறு தேவர் அவர்களின் சிந்தனை அமைதியற்றுச் சிறகடித்தது, ஏற்கனவே அவர் இராமநாதபுரத்தில் நிறுவியிருந்த தமிழ்ச் சங்கம்[31] போன்ற அமைப்பினை மதுரையிலும் நிறுவி மாண்புற்ற தமிழைத் தழைக்கச் செய்தல் வேண்டும் என்ற முடிவிற்கு வந்தார். இதனை அறிந்த மன்னர் தமது விருப்பமும் அதுவெனக் கூறி ஆதரவு நல்கினர். 1901ம் வருடம் மே திங்களில்

---

31. எஸ். எம். கமால் இராமநாதபுரம் மாவட்ட வரலாற்றுக் குறிப்புகள் (1984) பக்கம் 206

மதுரையில் நடைபெற்ற முதலாவது தென்னிந்திய அரசியல் மாநாட்டின் வரவேற்பு குழுத் தலைவர் என்ற முறையில் மாநாட்டின் (இரண்டாவது நாள்) நிறைவு விழாவில் அங்கு குழுமி இருந்த தமிழகத்தின் பல பகுதிகளைச் சேர்ந்த பிரதிநிதிகளிடம் மதுரையில் தமிழ்ச் சங்கம் நிறுவுவதான தமது முடிவினை அறிவித்தார். அவர்கள் அனைவரும் தேவரவர்களது தொண்டிற்கு ஆதரவுக் குரல் கொடுத்தனர். இதன் தொடர்பாக மதுரை மாநகரில் 14-9-1901 ல் நான்காம் தமிழ்ச் சங்கம் தொடங்கப் பெற்றது. மன்னர் பாஸ்கர சேதுபதி ஏற்கனவே நிறுவிய சேதுபதி உயர்நிலைப் பள்ளி அரங்கில் தமிழ் இலக்கியச் சுவடிகளைத் தேடித் திரட்டிப் பாதுகாப்புச் செய்யவும், அவைகளை அதன்மூலம் தமிழை வளர்க்க ஆவன செய்வதற்கும், இந்த அமைப்பு செயல்பட பாஸ்கர சேதுபதி மன்னர் பல்லாற்றலாலும் உதவி வழங்கினார்.

செந்தமிழ்ச் செல்விக்கு எடுக்கப்பட்ட இந்தச் சீர்மிகு தமிழ் விழா, திருவிழா பயனும் பொலிவும் பெற சிவகெங்கை, புதுக்கோட்டை தஞ்சை அரசர் பிரதிநிதிகள் கலந்து கொண்ட போதிலும் பாஸ்கர சேதுபதி மன்னர் அவர்கள் தமது பரிவாரம் சூழ முன்னதாகவே மதுரைக்கு வந்திருந்து விழா நிகழ்ச்சிகள் அனைத்திலும் நேரில் பங்கு கொண்டு சிறப்பித்தார். அந்த நிகழ்ச்சியின் பொழுதே, சங்கம் சிறப்புற ரூபாய் பத்தாயிரம் வழங்கித் தமது ஆதரவைத் தெரிவித்தார். இந்த இணையற்ற விழாவில் கலந்து கொண்டு மகிழ்ச்சிப் பெருக்கில் திளைத்த புலவர் பெருமக்களில் சிறந்த நாகூர் குலாம் காதிறு நாவலர் அவர்கள், சங்க இலக்கியத்தை நினைவூட்டும் வண்ணம், இந்த விழா நிகழ்ச்சியினை ஆற்றுப்படை இலக்கியமாகப் படைத்தார்.[32] இந்த நூலில், மதுரைச் சங்க அமைப்பிற்கு பாஸ்கர சேதுபதி மன்னர்.

---

32. மகாவித்வான் குலாம் காதிறு நாவலர்–புலவர் ஆற்றுப்படை (1968) வரி 155-59

"... ... ... .... ... ... ... ... ...
பொன்முடி கவித்து வெள்வே லேந்திப்
பாண்டி நாடளிக்கும் பண்பின் ஆண்டாக
இரவலர்க்கு அடையா வாயிற் புரவலன்
சேதுபதி யொடுக்கும் பாஸ்கர சேதுபதி
அருளொடு நிலைகுயர் பொருள்நனி உதவி ......"
... ... என மன்னரது உதவியை ...

"பொருள் நனி" உதவிய பான்மையைக் குறித்துள்ளார். அவர் பயன்படுத்தியுள்ள "நனி" என்ற தமிழ்வழக்கிற்கு "வரம்பு இல்லாதது" என்ற பொருள் போன்று, பாஸ்கர சேதுபதி மன்னரது தமிழ்ப்பணிக்கான தாளாத கொடைக்கும் எல்லை இல்லை என்பதே இப்பாடலில் புலவரது குறிப்பாகும். சேதுநாட்டு புலவர் சோதுகுடி எம். கே. எம். அப்துல் காதிரு ராவுத்தர் என்பவர், தமிழ் வரலாற்றின் தன்னேரில்லாத நிகழ்ச்சியான இதனை "மதுரைத் தமிழ்ச்சங்க மான்மியம்" என்ற இலக்கிய நூலாகப் படைத்தார். தமிழக வரலாற்றின் தனிப்பெரும் நிகழ்ச்சியாக அமைந்த தமிழ்ச் சங்கத் தொடக்கம், மன்னருக்கு மிகுந்த மகிழ்ச்சியை அளித்து தமிழ்த்தொண்டில் புதிய முனைப்பை ஏற்படுத்தியது.

★ ★ ★

இராமநாதபுரம் அரண்மனை வளாகத்தில்அமைந்து இருப்பது அருள்மிகு ராஜராஜேஸ்வரி அம்மன் ஆலயம். கி பி 1659-ல் இராமநாதபுரம் ரகுநாத திருமலைசேதுபதி மன்னர், மதுரை திருமலை நாயக்கரது வேண்டுகோளுக்கிணங்க மதுரையைக் கைப்பற்ற வந்த மைசூர் படைகளை தோல்வியுறச் செய்து துரத்தியடித்த பேருதவியைப் பாராட்டி நாயக்க மன்னர் வழங்கிய பரிசுப் பொருட்களில் ஒன்று இந்த ஆலயத்தின் அம்மன் சிலை[33] இது முற்றிலும் பொன்னால் செய்யப்பட்ட ஒன்று. இங்கு ஆண்டுதோறும் புரட்டாசித் திங்களில் பத்து நாட்கள் சிறப்பான பூசைகள் இதற்கு நடைபெறும். இது

33. Nagaswamy — Dr. R. — Ramanathapuram, An Archaelogical Guide (1978) p- 32.

நவராத்திரி விழா என அழைக்கப்பட்டது விழாவின் பொழுது இராமநாதபுரம் அரசர் தமது இராமலிங்க விலாசம் அரண்மனையில் கொலுவீற்று இருப்பார். இது கோவில் விழாவாக இருந்தாலும், ஒரு தமிழ் விழா வாகவே ஆண்டுதோறும் நடைபெற்று வந்தது. அப் பொழுது தமிழகம் முழுவதிலுமிருந்து புலவர்பெருமக்கள் அரசவையில் வந்து கூடுவர். தங்களது ஆழ்ந்த புலமை யையும் சேதுபதி வழியினரது சிறப்பு இயல்புகளை யும் அருங்கவிதைகளாக அமைத்து அரங்கேற்றுவர். இந்த நிகழ்ச்சி, திருமலை ரகுநாத சேதுபதி ஆட்சிச் காலம் முதல் அண்மைக்காலம் வரை நடந்த கலைவிழா வாகும். பாஸ்கர சேதுபதி மன்னரது ஆட்சிக் காலத்தி லும் இந்த நிகழ்ச்சி, சிறப்பாக நடைபெற்றது. சேதுபதி மன்னரது கொடையினைப் பெற்றுத் தங்களது திறமைக்கு "அரச முத்திரை" பெறுவதற்கென்றே நூற் றுக்கணக்கில் புலவர்கள் இந்த விழாவிற்கு வருகைதருவது வழக்கம். அவர்கள் தகுதிக்கும் திறமைக்கும் ஏற்ற பரிசில் களை அளித்துப் பெருமைப்படுத்தி அனுப்புவது மன்ன ரது பழக்கம்.

ஒருமுறை பழனியில் இருந்த பெரும் புலவர், மாம் பழக் கவிச்சிங்கம் பாஸ்கர சேதுபதியின் அவைக்கு வந்தார் பிறவிக் குருடரான அந்தப் பெரியவரது புலமை மிகுந்த பேச்சு மன்னரை வியப்பில் ஆழ்த்தியது. அவரது ஆழ்ந்த கவிநயத்திற்கும், கற்பனை வளத்திற்கும், புறக் கண்கள் இல்லாத பெருங்குறை அவருக்கு அணு அளவும் இடையூறாக இல்லை. ஏடாயிரங்கோடி எழுதாது தம் மனத்தே எழுதிப்படித்த தமிழ் விரகராக அந்தப்புலவர் மன்னருக்கு காட்சி அளித்தார். மகிழ்ச்சி மீக்கூர அணி யும், மணியும், பொன்னும், பூவும், நிறைத்த பொன் தட்டினை புலவரிடம் நீட்டினார் மன்னர். அந்தகரான புலவர் தடுமாற்றத்துடன் அதனைப் பற்றிப் பிடித்துக் கொண்டு "தட்டு இங்கேயா அல்லது அங்கேயா" என வினவினார். "தட்டு (பற்றாக்குறை) அங்கேதான்". சிலேடையாகவும், சாமர்த்தியமாகவும், குறிப்பிட்ட மன்னரது பதில் புலவரை திகைக்க வைத்தது. கருங்

காலிக் கட்டைக்கு நாணாத கோடாலி இருங்கதலிக்கு நாணுவது இயல்புதானே! பின்னர் அந்த தட்டு பொன்னாலானது என்பதைக் கேட்டு அறிந்த புலவரது திகைப்பு இன்னும் மிகுதி ஆயிற்று!

இத்தகைய நவராத்திரி விழா ஒன்றில் கலந்து கொண்ட டாக்டர் உ.வே. சாமிநாத ஐயர் அவர்கள், ''பத்து நாட்களிலும், பொழுது போனதே தெரியவில்லை. சேதுபதி மன்னரது உபச்சாரமும் கவர்ச்சியான பேச்சும் கொடைப் பெருமையும் எனக்கு வியப்பை உண்டாக்கியது. இந்த விழாவிற்கு இரண்டு லட்ச ரூபாய்க்கு மேல் செலவு ஆகியிருக்கும்'' என எழுதியுள்ளார்[34]. மேலும் பாஸ்கர சேதுபதி மன்னர் மீது ஐயரவர்கள் ஏராளமான வாழ்த்துப்பாக்கள் பாடியுள்ளார் அவைகளில் இரண்டு இங்கு கொடுக்கப்பட்டுள்ளது.

''அருளினால் பெருங்கடலை, ஈகையால்
பசுமுகிலை, அளவாக கல்வித்
தெருளினால் பணியரசைப், புரவினால்
திருமாலைச் சிறுபழிக்கும்
வெருளினால் அறக்கடவுள் தலைவென்று
நன்றுபிரி மேம்பா டுற்ற
பொருளினால் விளங்குறுபாஸ் கரசேது
பதிமகிழ்வு பூத்து வாழ்க.

''பண்ணிற் சிறந்த கவிவா
ணரைப்பரி பாலனஞ் செய்
தெண்ணிற் சிறந்த அறங்காத்
தெவர்க்கும் இத மளித்து
விண்ணிற் சிறந்ததொரு பாஸ்கரன்
நாளும் விளங்குதல் போல்
மண்ணிற் சிறந்தொரு பாஸ்கர
பூபதி வாழிய வே[35].''

---

34. சாமிநாதையர் உ. வே.—என் சரித்திரம் (1958) பக்கம் 474

35. சாமினாதையர் உ.வே. – தமிழ்ப்பா மஞ்சரி (1962) பக்கம் 187.

வேம்பத்தூர் வேம்பு ஐயர் என்ற பெரும்புலவர், தமிழில் இருபொருள்பட பேசுவதில், பாக்களைப் புனைவதில் சிறந்து விளங்கினார். இதனால் அவருக்குச் சிலேடைப்புலி என்ற பட்டமும் உண்டு ஒருநாள் அவர் மன்னரது அவைக்கு வந்தார். அப்பொழுது புலவர்கள் பகுதியில் இருந்த அனைத்து இருக்கைகளிலும் புலவர்கள் நிறைந்து இருந்தனர். செய்வது அறியாது ஒரு நிமிடம், அவர் மலைத்து நின்றார். அவரை ஏளனமாக ஒரு புலவர், "வேம்பு நிற்பதுதான் இயல்பு" என்றார். நிலைமையைப் புரிந்த மன்னர் புலவரை அழைத்து தமக்கு அருகில் இருந்த இருக்கையில் அமரச் செய்து அவரைப் பெருமைப் படுத்தினார். மகிழ்ச்சியால் திளைத்த புலவர், "அரசு அருகில் நான் வேம்பு இருக்கும்" என்று சிலேடையாகச் சொன்னார். (அரசமரமும் வேப்ப மரமும் அருகருகே வளரச் செய்வது தமிழக மரபு) புலவரது திறமையான பதில் அவையில் இருந்த அனைவரையும் மகிழ்வித்தது.

இந்த நவராத்திரி விழாவில் சேதுபதி மன்னர் வழங்கிய விலை உயர்ந்த "சாதரா" என்னும் சிறப்பான இரண்டு பட்டாடைகளைப் பின்னர் திருவாவடுதுறை ஆதினகர்த்தரிடம் கொடுத்து அதற்கு விலையாக ஆதினத்தார் அளித்த ரூபாய் முன்னூறையும்" சிலப்பதிகார" பதிப்புச் செலவிற்குப் பயன்படுத்தியதாக டாக்டர் உ. வே. சாமிநாதையர் அவர்கள் தமது வாழ்க்கைக் குறிப்பில் குறித்துள்ளார்கள்.[36]

யாழ்ப்பாணத்திலிருந்து வந்த சிவசம்புக் கவிராயர் என்ற பெரும்புலவர், இத்தகைய நவராத்திரி கலை விழாவின் பொழுது "பாஸ்கர சேதுபதி கல்லாடக் கலித்துறை", "பாஸ்கர பதிகம்" "பாஸ்கர சேதுபதி இரட்டை மணிமாலை", "சேதுபதி நான்மணிமாலை" ஆகிய சிற்றிலக்கியங்களைப் படைத்து அரங்கேற்றி மன்னரை அகமகிழும்படி செய்தார். புலவர் அகங்குளிரும் வண்ணம்

---

36. சாமினாதையர் உ.வே — என் சரித்திரம் (1958) பக்கம் 474, 475

அன்பளிப்புகளை வழங்கி, அவரை இலங்கைக்கு வழியனுப்பி வைத்தார் மன்னர். பிறிதொரு முறை, பரிதிமாற் கலைஞர் என்று தனித்தமிழ்ப் பெயரைத் தமது இயற்பெயராக சூடியிருந்த பேராசிரியர், சூரிய நாராயண சாஸ்திரி என்ற புலவர், தமது நாடகப் படைப்பான ''கலாவதி''யை மன்னரது அவையில் நிகழ்த்தி அரங்கேற்றியதற்காக அணியும் மணியும் பரிசிலாக வழங்கி பாராட்டப்பட்டார். மேலும், கலைக்கடலாக வாழ்ந்த சென்னை சூளை புலவர் சோமசுந்தர நாயக்கருக்கு தங்கத்திலான ''தோடா''வை வழங்கி ''சைவ சித்தாந்த சண்ட மாருதம்'' என்ற விருதையும் மன்னர் அவருக்கு அளித்தார். இவற்றிற்கெல்லாம் முத்தாய்ப்பான நிகழ்ச்சி ஒன்றினை மேற்கொண்டார் பாஸ்கரபூபதி ''தாயிற் சிறந்தவன் சேதுக்கதிபன் தமிழர் பிரான், வாயிற் சிறந்த புலவன்'' என்று தம்மை அடக்கமாகத் தெரிவிக்கும் மகாவித்வான் ரா. ராகவஐயங்காரை மதுரை மாநகரில் முத்துப் பல்லக்கில் வைத்து அவரைச் சுமந்து. புலவரைப் பெருமைபடுத்தினார். தமிழ் மொழிக்குத்தான் என்றும் தொண்டன் என்பதைப் புலப் படுத்தினார். வாரங்கல் மன்னன் இரண்டாம் பிரதாப ருத்திரன் மகாகவி கம்பனது பல்லக்கைச் சுமந்து அடைப் பம் அளித்த வரலாற்றை நினைவுபடுத்துகிறது. இந்த நிகழ்ச்சி, இத்துடன் அமையவில்லை. 9-11-1901-ல் மதுரை ஆவணப் பதிவு அலுவலகத்திற்கு அந்தப் புலவரை அழைத்துச் சென்று ஆண்டுதோறும் பல்லக்குச் செலவிற்கும் ஜீவியத்திற்கும் நிவேதனமாக ரூ. 635/- பெறும் உரிமைப் பத்திரத்தையும் கைச்சாத்திட்டு பதிவு செய்து கொடுத்தார்.

தமது ''சமஸ்தானம் தமிழையே தனக்கு தாய் பாஷையாகவுடையதாதலால், எமது முந்தைய ராஜாக் கள் எல்லாம் பரம்பரையாகத் தமிழ் வித்வான்களுக்கு ஏராளமான உபகாரங்கள் செய்துள்ளது பிரசித்தமானது. சேர, சோழ பாண்டியர்களுக்குப் பிறகு, சுத்த தமிழ் அரசர்களாக சேதுபதிகளே, தமிழ்பாஷா அபிவிருத்தி செய்பவர்களும், தமிழ் வித்வான்களை ஆதரிப்பவர்களும்

ஆகின்றனர். தமிழ் வித்வான்களுக்கு பரம்பரையாகப் பெற்றுவரக்கூடிய சாசுவத தர்மங்கள் செய்து வருவது இந்த சமஸ்தானத்தில் தொன்று தொட்டு வரும் வழக்கம். இக்காலத்து தமிழ் வித்வான்கள் மிகச் சிலராமையாலும், அச்சிலருக்கும் கவர்மெண்டார் தக்க உதவியொன்றும் செய்யாமையாலும் ... .... தங்களைப் போன்ற பண்டிதர் களையும், ஐவேஜி இல்லாத கோயில், சத்திரம், பாட சாலை, ஏழைகள் முதலியவர்களையும் பாதுகாப்பதற் கென்றே தொன்றுதொட்டு ஏற்பட்டுள்ள நமது சமஸ் தானத்து தர்ம மகமையில் இருந்து, தக்க தமிழ் வித்வா னான தங்களுக்கு......ஆயுட்காலம் வரை, (பசலிதோறும்) தங்களுக்கு கிடைக்க......'' ஏற்பாடு செய்து இருப்பதாக மன்னர் அந்த ஆவணத்தில் குறிப்பிட்டுள்ளார்.[37]

இதுகாறும், எந்த அரசரும் எந்தத் தமிழ்ப் புலவருக் கும் செய்யாத இந்தச் சிறப்பைப் பெற்றமகாவித்வான் மனம் நெக்குருகிப் போனார் மன்னரது 'கொடையை யும், தமிழ்த் தொண்டையும் எண்ணி எண்ணி பெருமித மும் பெருமகிழ்ச்சியும் அடைந்தார், இதனை.

''குவிகை தாங்கிக் குறையிரந்தார் முனம்
கொண்டல் எனப் பொழிதரு பாஸ்கரன்
சிவிகை தாங்கிட ஏறிய வீறுடைச்
சேதுகாவலர் தங்கவி யாகினேன் ...''

''சிவிகை தாங்கி புரந்தனன் பாற்கரன்
செய்ய பொற்களாம் பொருள்நல்கி
இப்புவியெல்லாம் புகழ்புரிந்து ஓம்பினன்....''

— என்ற அவரது கவிதை வரிகள்

மன்னரது இந்த அரிய செயலைக் காலமெல்லாம் சொல் லிக் கொண்டு இருக்கின்றன.

---

37. இந்த ஆவணத்தின் நகல் முழுமையாக, நூலின் இணைப்பில் சேர்க்கப்பட்டுள்ளது. இந்த நிகழ்ச்சி யையும் பாடல்களையும் தெரிவித்தவர் மகாவித்வா னது மகன் (அமரர்) பண்டித ரா. ராமானுஜம் அவர்கள்.

மற்றும் மன்னரது சென்னை வாழ்க்கையையும் என்றென்றும் நினைவுபடுத்தி கொள்ளத்தக்க அறக் கொடை ஒன்றையும் தமிழ்த்தொண்டாக அமைத்தார். அவர் பயின்ற சென்னை - தாம்பரம் கிறித்தவக் கல்லூரியில் அந்த அறக்கட்டளை இன்றும் உள்ளது. தமிழ கத்தில் ஆண்டுதோறும் இளநிலைப் பட்டப் படிப்பில் தமிழ்த்தேர்வில்-மாநில அளவில் சிறப்பாக தேர்ச்சிபெறு கின்ற கல்லூரி மாணவனுக்கு பொற்பூவை (Gold medal) அந்த அறக்கட்டளை வழங்கி சிறப்பித்து வருகிறது. பாஸ்கர சேதுபதி மன்னரது ''பொற்பூ பெற்றவன்'' என பெருமையுடன் சொல்லிக் கொள்ளும் பல மாணவர்கள் இன்று இருக்கின்றனர்.

# 5

## பாசமும் பொறுமையும்

சங்கர விலாசம், இந்த மாளிகை இராமநாதபுரம் அரண்மனையின் மேற்குப் பகுதியில் அமைந்துள்ளது. பிரிட்டிஷ் தளபதி மார்ட்டினது இல்லமாக இருந்த இந்த மாளிகையைச் செப்பனிட்டு, பாஸ்கர சேதுபதி மன்னர் தமது ஓய்வு விடுதியாகப் பயன்படுத்தி வந்தார். இந்த மாளிகையின் வடக்கிலும் மேற்கிலும் முகவை ஊரணி அமைந்து இருந்ததுடன் மாளிகையைச் சூழ்ந்த தோட்டத்தில் பல விதமான பயன்தரு மரங்களும் மலர்க்கொடிகளும் நிறைந்து, இந்தச் சூழல் மிகவும் ரம்மியமாக இருந்தது. அங்கு வாழ்ந்த ஏராளமான மயில்களும் குயில்களும், கண்ணுக்கு அழகும் கருத்துக்கு இனிமையும் சேர்த்தன.

மாளிகையின் முகப்பில் வரிசையாக பூந்தொட்டிகளில் பல விதமான வண்ண மலர்கள் புன்னகை செய்து கொண்டு இருந்தன. வாயில், ஜன்னல் கதவுகளில் சீனப்பட்டுகள் தொங்கின. சுவரில் பெரிய நிலைக்

கண்ணாடிகளும், அழகிய ஓவியங்களும் நிறைந்து இருந்தன. தரையில் விரிக்கப்பட்டு இருந்த காஷ்மீர் கம்பளங்கள் மீது ஆங்காங்கு சோபாக்களும், நாற்காலிகளும், மேஜைகளும் போடப்பட்டு இருந்தன.

ஒரு நாள் முற்பகல் வேளை. மன்னர் சோபா ஒன்றில் அமர்ந்தவாறு, அழகிய கூண்டில் அடைபட்டு இருந்த பஞ்சவர்ணக்கிளி குழறிப் பேசிய மழலையைக் கேட்டு மகிழ்ந்து கொண்டு இருந்தார். அப்பொழுது. பக்கத்து அறையில் ஏற்பட்ட சலசலப்பு ஓசை மன்னரது மகிழ்ச்சியைக் குலைத்தது. அவர் அங்கு திரும்பி பார்த்த பொழுது அவரது பணியாள் ஒருவன், நீண்ட இரட்டைக்குழல் துப்பாக்கியைப் பிடித்து மன்னரைக் குறி பார்த்தவாறு வந்து கொண்டு இருந்தான்.

''ஏண்டா நீலமேகம்! உனக்கு பைத்தியம் பிடித்து விட்டதா?'' மன்னரின் ஆரவாரமில்லாத குரல்,
''ஆம், மகாராஜா! எனக்கு பைத்தியம் பிடிக்க வைத்து விட்டீர்கள்''

''மடையா! என்ன காரியம் செய்கிறாய்'' என்ற மற்றொரு குரல் வந்த திக்கில் திரும்பினான் நீலமேகம். சிறிதும் அவன் எதிர்பாராத வகையில் அவனது வலது கையில் பலமாக விழுந்த உதை அவனை நிலை குலைந்து கீழே விழுமாறு செய்தது. அவனிடமிருந்த துப்பாக்கியைப் பறித்து அவனைக் கொல்வதற்கு ஆயத்தமானான் அந்த பணியாள்.

''சாமினாதா! வேண்டாம், துப்பாக்கியை இங்கே கொண்டுவா''. மன்னர் பதட்டத்துடன் சொன்னார்.

''உத்தரவு மகாராஜா'' சாமினாதன் துப்பாக்கியை எடுத்துப் போய் மன்னருக்கு அருகில் இருந்த மேஜையில் மிகப் பணிவுடன் வைத்தான்.

''டேய், நீலமேகம் எழுந்து வா!'' மன்னரது குரலில் அன்பு கலந்து இருந்தது. பைத்தியம் தெளிந்தவன் போல நீலமேகம் எழுந்து நின்றான். அவரது கண்களில் கலக்கம். கால்களில் நடுக்கம்.

''நீலமேகம், எனக்கு மரணம் ஒரு நாள் உண்டு. அது உன் கையில் அல்ல என்பது இறைவனது சித்தம். ஆமாம்! ஏன் இப்படி நடந்து கொண்டாய்!''.

''மகாராஜா, உங்கள் உப்பைத் தின்று வளர்ந்த நான் உங்களையே ... ... (பேசமுடியாமல் சிறிது நேரம் தாமதித்து விட்டு) சமூகத்திடம் பதினைந்து வருஷமாக சேவகம் பார்த்து வருகிறேன். பலன் எனது பெண்டு பிள்ளைகள் பட்டினி. உலகத்துக்கெல்லாம் அள்ளிக் கொடுத்து உதவுகின்ற தாங்கள், இந்த அரண்மனையை அண்டிக் கிடக்கின்ற ஏழையை ஏறிட்டுப் பார்க்கவில்லை. இந்த எண்ணம் என்னைப் பழிகாரன் ஆக்கி விட்டது. ஆத்திரத்தில் முட்டாளாகி விட்டேன். மகாராஜா! என்னை மன்னித்து விடுங்கள்.''

தேம்பித் தேம்பி அழுதான். சாஷ்டாங்கமாக தரையில் விழுந்தான்.

''நீலமேகம், எழுந்திரு, உனது கஷ்டத்தை இதுவரை ஏன் சொல்லவில்லை. நானும் உன்னைப்பற்றி விசாரிக்கவில்லை தான்''

மன்னரது பேச்சில் பரிவும் பாசமும் நிறைந்து இருந்தது.

''சாமிநாதா! நீலமேகத்தை தானாதிப்பிள்ளையிடம் அழைத்துச் சென்று இரண்டாயிரம் ரூபாய் வாங்கிக் கொடுத்து அனுப்பு.

''மகாராஜா! மன்னித்து விடுங்கள்'' மீண்டும் நீலமேகத்தின் கெஞ்சுதல். வேண்டுதலுடன் சென்றான்.

மன்னர் அங்கு எதுவும் நடக்காதது போல அமர்ந்து இருந்தார். தன்னை கொல்ல வந்தவனை குறையையும் கேட்டு நிறைவு செய்த மகிழ்ச்சி அவருக்கு. இன்னா செய்தாருக்கும் இனியவையே செய்து முடிக்கும் சால்பு, அவரிடம் இயல்பாக இருந்தது. அவரது வாழ்க்கையில் நிகழ்வுற்ற இன்னொரு நிகழ்ச்சியையும் இங்கு குறிப்பிடுவது பொருத்தமாக இருக்கும்.

இராமநாதபுரம் சமஸ்த்தான நிர்வாகம் ஆட்சிக்குழு விடம் இருந்தபொழுது ராஜாராம்ராவ் என்ற அரசு அலுவலரை, சமஸ்த்தான திவானாக பிரிடிஷ் அரசு நியமனம் செய்தது திவான் என்பது அமைச்சர் என்ற பொருளில் உள்ள பார்சீகச் சொல். பாஸ்கர சேதுபதி மன்னர் நிர்வாகப்பொறுப்பை 3-4-1889ல் ஏற்ற பிறகும் மன்னரது நேரடியான உதவியாளராகப் பணியாற்றி வந்தார். இந்த அலுவலர். ஆறு ஆண்டுகள் கழித்து மன்னர் நிர்வாகத்தில் இருந்து விலகிக்கொண்டு, தமது மைனர் மகன் முத்துராமலிங்க சேதுபதியை அவரது வாரீசாக நியமனம் செய்த பொழுதும் (12-7-1895) இதே திவானை மைனரது டிரஸ்டியாக மன்னர் நியமித்தார்

ஆனால் விரைவிலேயே இந்த திவானின் மீது மன்னருக்கு அதிருப்தி ஏற்பட்டது. மன்னரது நெருக்கமான நண்பர் தேவகோட்டை AL.AR இராமசாமி செட்டியார் என்பவர், இராமநாதபுரம் சமஸ்தானத்தைச் சேர்ந்த இரவிசேரி, திருமணவயல் மாகாணங்களை திவானிடமிருந்து குத்தகைக்கு பெற்றது சம்பந்தமான சில ஊழல்கள் நடந்து இருப்பதாகத் தோற்றுகிறது. இதனால் திவான் தமது பதவி விலகல் கடிதத்தை அரசுக்கு அனுப்பிய பொழுதும், அதனை ஏற்றுக்கொள்ளாது. அன்றைய அரசு அவரை பதவி நீக்கம் செய்து உத்திரவிட்டது. பதவி விலகலுக்கும் பதவி நீக்கத்திற்கும் மிகுந்த வேறுபாடு இருக்கிறதல்லவா!

அப்பொழுது இராமேசுவரத்தில் இருந்த மன்னருக்கு இந்தச் செய்தி தெரிவிக்கப்பட்ட பொழுது, மன்னர் அவலத்திற்குள்ளான அந்த அலுவலரது நிலைக்காக மிகவும் வேதனையடைந்தார். அப்பொழுது ராஜாராம் ராவிற்கு ஒரு கடிதம் எழுதி அனுப்பினார்.

"இந்த கடிதத்தை இங்கு தர்ம சேதுவில் இருந்து எழுதுகிறேன். உங்களுக்காக பச்சாதாபப்படுகிறேன். உங்கள் விசயத்தில்எந்த அளவிற்கு நான் குற்றவாளி என்பதை இந்த தர்ம சேது அறியும்."*

---

* 26-12-1891-ந் தேதி இராமேசுவரத்தில் இருந்து திவான் ராஜாராம் ராவிற்கு அனுப்பிய கடிதம்.

இந்தக் கடிதத்தில் இருந்து திவான் மீது வழக்கு கொடுக்க வேண்டிய அளவிற்கு அவர் தவறுசெய்து இருந்தார் என்பது புலனாகின்றது. என்றாலும் அவருக்கு ஏற்பட்ட தொல்லை மன்னரதுஇளகிய நெஞ்சை மிகவும் பாதித்து விட்டது என்பதை அறியமுடிகிறது. தம்மிடம் பணியாற்றிய அலுவலருக்கு இக்கட்டான நிலையொன்று ஏற்படும்பொழுது,அவருக்கு இயன்ற உதவியினைச்செய்து ஆறுதல் சொல்ல வேண்டும் என்ற மனிதாபிமானம் எத்தனை பேருக்கு உள்ளது? அத்துடன் பகைவனுக்கும் அருள வேண்டும் என்ற பரந்த மனப்பான்மை கொண்டவர் மன்னர் பாஸ்கரர். குணநலம் சான்ற கோமானாகிய அவர் இத்தகைய அரிய பண்பாட்டினை வளர்த்தார்— அதிலே வாழ்ந்தும் காட்டினார்.

இத்தகைய இனிய செயல்களினால் இளம் மன்னருக்கு ஏற்பட்ட இசையென்னும் புகழ்கண்டு புழுங்கியவர் சிலரும் அப்பொழுது இருந்தனர். "அழுக்கற்று அகன்றாரு மில்லை .." என்ற வள்ளுவத்தை உள்ளாத பேதைகள், பிணக்குகளை உருவாக்க முயன்றனர். வேறு வழி எதுவும் புலப்படாத நிலையில், அன்புத்தமையனுக்கு எதிராக அருமைத்தம்பியைத் தேற்றினர். அள்ளி அள்ளிக் கொடுக்கும் மன்னரது பண்பினை எள்ளி நகையாடி, கொள்ளையைத் தடுத்து சமஸ்த்தானத்தைக் காப்பாற்றும் குலபதியாக விளங்க வேண்டும் என இளவல் தினகரைப் போற்றிப் புகழ்ந்தனர். அவரும் ஏற்றம் பெரும் செயலாக எண்ணி, சமஸ்தானத்தில் பாகப்பிரிவினை கோரி மதுரை நீதி மன்றத்தில் வழக்கு தொடுத்தார். அளவிலாத அன்புடனும் மரியாதையுடனும் ஒழுகி வந்த ஒரே தம்பியின் ஓரவஞ்சனை கண்டு மன்னர் திகைத்தார். என்றாலும், வழக்கின் முடிவு சூதர்களின் சூழ்ச்சிக்கு முதல் அடி வழங்கியது. வழக்கினை ஆய்ந்து தீர்ப்புரை அளித்த ஆங்கில நீதிபதி, இராமநாதபுரம் சமஸ்தானம் எப்பொழுதும் பிரிவினைக்குரிய சொத்து அல்ல என்று முடிவு சொல்லி 18-1-1893 ந் தேதியன்று வழக்கினை தள்ளுபடி செய்தார். தோல்வியுற்ற மனுதாரரைத் தேற்றி ஆறுதல்அடையச் செய்த சுயநலமிகள், சென்னை உயர்நீதி மன்றத்தில் மேல் முறையீட்டைத்

தாக்கல் செய்யுமாறு செய்தனர். 5-9-1893-ந் தேதியன்று இந்தமுறையீடும் தோல்வியுற்றது. தோல்விமனப்பான்மையும் பகையுணர்வும் மேலிட்ட இளவல் தினகரர் பெருஞ் செலவு செய்து அப்பொழுது லண்டனில் இருந்த பிரிவி கவுன்சில் என்ற மிக உயர்ந்த பிரிட்டிஷ் நீதிமன்றத்தில், இறுதி முறையீட்டைத் தொடர்ந்தார். அதுவரை, இந்த வழக்கினில் வெற்றிகள் கிட்டியபொழுதும், தமது உடன் பிறப்பின் தவறான போக்கினுக்காக மன்னர் மனங்கலங்கினார். வீணான பொருட்செலவு மட்டுமல்லாமல், தமது நீடுபுகழ் சேது குடியினுக்கு ஏற்படும் பெரும்பழியாக இந்த வழக்கினை அவர் கருதினார். இதில் எவ்விதம் தீர்வு பெறுவது என்ற சிந்தனையில் அன்பும் பாசமும் நிறைந்த அவரது உள்ளம் அலைகடலாய் அமைதியற்றுக் குலைந்தது.

ஒருவகையாகத் தம்பியை அழைத்து நேரடியாக பேசித்தீர்ப்பது என்ற முடிவிற்கு வந்தார் பெரும்பாதிப்புக் குள்ளாகியிருந்த தம்பியும் அண்ணனது அழைப்பை ஏற்று மன்னரைச் சந்தித்தார். மீண்டும் அவர்களிடையே பாச உணர்வுகள் படர்ந்தன. உடன்பிறப்பு என்ற உறவு புத்தொளி பெற்றது. வழக்கினை திரும்பப் பெற தினகரர் இசைந்தார். மன்னரும் அவருக்குத் தேவையானவைகளைச் செய்வதற்கு ஆவலுடன் முன் வந்தார். இராமநாதபுரம் கோட்டைக்கு கிழக்கே தப்பிக்கு தனியாக மாளிகை அமைப்பதற்கு நூறு ஏக்கர் மனை நிலமும் மற்றும் செலவுகளுக்கு ரூபாய் இரண்டரை லட்சமும், மாதந்தோறும் செலவுகளுக்கு ரூபாய் இரண்டு ஆயிரமும் வழங்க மன்னர் முன்வந்தார். மன்னரது பெருந்தன்மையினால் உடன்பிறந்தே கொல்லும் பிணியாகத் தோற்றிய பிள்ளைமை பேருவகைதரும் உடன் பிறப்பாக மாறியது

இதனையொத்த இன்னொரு இக்கட்டான வழக்கிலும் மன்னர் சம்பந்தப்பட்டு சஞ்சலம் அடைந்தார். இராமநாதபுரம் சமஸ்தானம் தேவஸ்தானத்திற்குச் சொந்தமான பல திருக்கோயில்களில், கமுதி நகரில் உள்ள சிவன் கோயிலும் ஒன்று. அந்த ஊரின் மக்கட் பகுதியில் ஒரு

பிரிவினரான சாணார்கள்* அப்பொழுது (சென்ற நூற்றாண்டில்) இருந்த சமுதாயத்தில் தாழ்த்தப்பட்டவர்களாக, தீண்டத்தகாதவர்களாக கருதப்பட்டனர். ஏனைய இந்து சகோதரர்களைப் போல, திருக்கோயிலுக்குள் சென்று இறைவனை வணங்கும் உரிமை அவர்களுக்கு மறுக்கப்பட்டு இருந்தது. பஞ்சமா பாதகங்களில் ஒன்றான குடியை வளர்க்கும் கள்ளினை வடித்து வழங்கும் தொழிலை அவர்கள் பராம்பரியமாகக் கொண்டிருந்ததால் இந்து சமய ஆகமங்கள் அத்தகையதொரு சமூகத் தடையை இந்தப் பிரிவு மக்கள் மீது புகுத்தி இருந்தது. நூற்றாண்டுகள் காலமாக சமூகத்தாழ்வையும் பிரிவினையையும் ஆற்றாமையாக அனுபவித்து வந்த அந்த மக்கள் கால முதிர்ச்சியின் காரணமாக கிளர்ந்து எழுந்தனர். 14. 5. 1897-ல் கமுதியில் இந்த மக்கள் ஊர்வலமாகச் சென்றனர். அங்கிருந்த மீனாட்சி சுந்தரேசுவரர் ஆலயத்தில் புகுந்து அவர்களே வழிபாடு செய்தனர். திருக்கோயிலின் புனிதத்திற்கு தீட்டு ஏற்பட்டு விட்டதாக பக்தர்கள் துடித்தனர். ஆஸ்திகர்களும் அர்ச்சகர்களும் திரண்டு வந்து ஆலயக் கதவுகளை அடைத்து கிளர்ச்சி செய்தனர். அந்தக் கோயிலின் அறங்காவலரான பாஸ்கர சேதுபதி மன்னர் சார்பாக மதுரை நீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்தனர். இந்த வன்முறையான நுழைவிற்கு தடை விதிக்குமாறும், நடந்து விட்ட அடாத செயலுக்கு நஷ்டியாக ரூபாய் இரண்டாயிரம் வழங்கி உத்திரவிடுமாறும் வாதிகள் கோரி இருந்தனர்.

சைவசிந்தாந்தியும் சன்மார்க்க வாதியுமான மன்னர், இந்த வழக்கினால் மிகவும் சஞ்சலமடைந்தார். தமது குடிமக்களது ஒரு பகுதியினருக்கு சமூக நீதி மறுக்கப்படுவது அறிய மிகவும் வேதனையடைந்தார். அதே சமயம், தொன்று தொட்டு வருகிற நடைமுறைகளை

---

* இன்று நாடார் என அழைக்கப்படும் பிரிவினர்தான் இந்த நூற்றாண்டின் முற்பகுதி வரை சாணார் என வழங்கப்பட்டனர். அதற்கு முந்தைய ஆவணங்கள் சிலவற்றில் இந்த மக்கள் சான்றோர் எனவும் குறிப்பிடப்படுகின்றனர்.

தொடர்ந்து கடைபிடித்து வரும் பெரும்பான்மையான ஆஸ்திக மக்களது ஆதங்கமும் அவரது சிந்தனையை ஆட்டிப் படைத்தது பழமை, மனிதாபிமானம் என்ற இருபெரும் எண்ணங்களின் சுழற்சியில், ஆஸ்திகத்தை அடிப்படையாகக் கொண்ட மனித நேயம் வெற்றி பெற்றது ''பிறப்பொர்க்கும் எல்லா உயிர்க்கும்'' என்ற வள்ளுவர் வாக்கும், ''என்னப்பன் எல்லோர்க்கும் தாமீசன்'' என்ற வாதவூரடிகளது நோக்கும் மன்னரது சமரச முடிவிற்கு பக்க பலமாக இருந்தன. அந்த மக்களை 27-4-1901 ல் வரவழைத்துப் பேசி அவர்களது கோரிக்கையை ஏற்று அவர்களுடன் உடன்பாடு கண்டார். அரண்மனையில் உள்ளவர்களுக்கும் கமுதியில் உள்ள ஆஸ்திக மக்களுக்கும் இதனால் பெரும் அதிருப்தி ஏற்பட்டது சென்னை உயர்நீதிமன்றமும் லண்டனில் உள்ள பிரிவு கவுன்ஸிலும், சாணார் மக்களது முறையீடுகளைப் புறக்கணித்து இந்து ஆகம முறைகளைப் அடியொற்றி இந்த வழக்குகளில் தீர்ப்புகளை வழங்கின. அந்த மக்களது சமுதாய சமத்துவத்தையும் பொது வழிப்பாட்டு உரிமைகளையும் ஏற்க மறுத்தன.

ஆனால், தமிழகத்தில் அன்னிய ஆதிக்கம் ஒழிந்து தீண்டப்படாத மக்களது ஆலயப் பிரவேசம் சட்ட பூர்வமாகச் செயல்படுவதற்கு முன்னால் ஒரு நூறு ஆண்டுகளுக்கு முன்னர், தாம் ஒரு முன்னோடி மனிதர்-மனிதாபிமானி-என்பதை பாஸ்கரர் நிரூபணம் செய்துள்ளார். இந்து சனாதனிகள் பின்பற்றிய தீண்டாமை நோய் இந்திய சமுதாயத்திலிருந்து அகற்றப்பட வேண்டிய ஒன்றும் என்பதையும் அது மக்களது ஆன்ம நேய ஒருமைப்பாட்டிற்கு உகந்தது அல்லது என்பதையும் உணர்ந்து செயல்பட்ட சாதனையாளர் அவர்.

இத்தகைய ஆன்மநேய உணர்வுகள் மன்னரிடத்தில் மிகுந்து இருந்த காரணத்தினால், பொறுமை, அன்பு, சமரசம், ஆகிய பண்புகள் அவரது அனைத்துச் செயல்களிலும் பிரதிபலித்தன. அவருக்கென சொந்த விருப்பு. வெறுப்புகள் இல்லாமல் இல்லை. ஆனால் அவைகள் அவருடைய சொந்தசெயல்களில் மட்டும் ஒட்டி இருந்தன

அன்றாட வாழ்விலும் தமது ஆன்மீக நெறியைப் பிரதி பலிக்கும் செயல்களை விரும்பி மேற்கொண்டார். சைவ சமயத்தில் எப்பொழுதும் திளைத்து நின்றது, அவர் தமது அந்தரங்க பணியாளர் அனைவரது இயற்பெயர் களையும் மாற்றி, சிவநாமங்களையே சூட்டி, அந்தப் பெயர்களில் அவர்களை அழைத்து மகிழ்ந்தார். அப்பூதி அடிகளாரின் வாழ்வை நினைவுபடுத்தும் இவரது அற வாழ்வு, இவரைச் சைவராக மட்டுமின்றி, சித்தாந்த, சமரச நன்னிலை கண்ட சான்றோராகவும் எடுத்துக் காட்டுகிறது.

வைணவத்திலும் சைவமே சிறந்ததென வாதிடும் இவர். வைணவச்சான்றோரான மகாவித்வான் ரா ராகவ ஐயங்காரை தமது அன்புநேசராகவும் ஆன்மீக ஆசானாக வும் கொண்டு இருந்தார். அவரிடத்தில் மட்டற்ற மரியா தையுடன் பழகி வந்தார். மகாவித்வானும். தம்மை மாற்றுச் சமயத்தினர் என்று சிறிதும் எண்ணாமல், மன்னரிடத்திலும் மன்னரது தயாரான முத்தாத்தாள் நாச்சியாரிடத்திலும் மிகுந்த வாஞ்சையுடன் நடந்து வந்தார். மன்னரும் மாதேவியாரும் அவரை "சுவாமிகள்" என்ற சிறப்புப் பெயரால் மரியாதையுடன் அழைத்து வந்தனர். சிறந்தஅன்பளிப்புகளையும் அவருக்கு அடிக்கடி வழங்கி பெருமைப் படுத்தினர் மகாவித்வானுக்கு இராம நாதபுரத்தில் நல்ல இல்லம் ஒன்றைஅமைத்துக் கொடுத்த துடன், இராமநாதபுரம் நகருக்கு அண்மையில் வைகை யாற்றுப் பாசனத்தில் விளைநிலங்களையும் அற்கொடை யாக வழங்கினார்.[33] மற்றும், மகாவித்வான் அவர்கள் மன்னரைச் சந்திக்க அரண்மனை வந்து போவதற்கு, தந்தப் பல்லக்கு ஒன்றையும அளித்தார்.

ஒருமுறை புதிதாக வெளியிடப்பட்ட "கந்தபுராணச் சுருக்கம்" என்ற நூலை படித்து முடித்தவுடன் அதன் முகப்பில் "நாற்கலையும் தேர்புலவர் நாணுவரே, நீள்நி லத்தில் பாற்கரனைச் சாருமொரு ராகவனைப் பார்த் தலுமே", என்ற கவிதைத் தொடரினை எழுதிக் கை

---

38. இந்த விளைநிலங்கள் பரமக்குடி வட்டம் புகலூரி லும், சிரகிக்கோட்டையிலும் உள்ளன.

யெழுத்திட்டு புலவருக்கு அனுப்பி வைத்தார். தம்து சமஸ்தானப் புலவர் பால் மன்னர் கொண்டிருந்த பெரு மதிப்பைப் புலப்படுத்துகின்ற இந்த இருவரிகள், அவர் பற்றி யொழுகிய சைவத்தையும் கடந்த நின்ற அன்புள் ளத்தை கோடிட்டு காட்டுகின்றன.

இவரது குலதெய்வமான கொற்றவை ராஜராஜேஸ்வரி யின் ஆலயத்திற்கு பெரிய மணி இல்லாதது பெருங்குறை யாக இருந்தது. அதற்காக இத்தாலி நாட்டு மிலான் நக ரில் இருந்து மூன்று வெங்கல மணிகளை வரவழைத் தார். அவற்றில் ஒன்றை அரண்மனை அம்மன் ஆலயத் திலும், மற்றொன்றை திருஉத்திரகோச மங்கை ஆலயத் திலும், மற்றொன்றை இராமநாதபுரத்தில் உள்ள கத்தோலிக்க கிறித்துவ ஆலயத்திலும் நிறுவும்படி செய் தார். இன்றளவும் அந்த ஆலயமணிகள் நாள்தோறும் எழுப்புகின்ற இனிய நாதம் இறையுணர்வை நெஞ்சில் நிறைக்கும் அருஞ் சாதனமாகப் பயன்படுகின்றது.

மேலும், இராமநாதபுரம் கோட்டைக்குள் உள்ள கோதண்ட இராமசாமி ஆலயத்தை திருப்பணி செய்தார். இதனைத் தெரிவிக்கும் கல்வெட்டு இணைப்பில் கொடுக் கப்பட்டுள்ளது. இந்த பெருமாள் ஆரோகணித்து அழகு பவனி வரும் தேரோட்ட திருவிழாவிற்கும் மன்னர் ஏற்பாடு செய்தார். வரட்டு வேதாந்தியாக மட்டும் வாழாமல் நடராஜ மூர்த்தியையும், நாராயணசுவாமி யையும் ஒரு சேர, ஒன்றிணைந்த பரப்பிரம்மமாக, பாவித்த அவரது மனப்பக்குவத்திற்கு இதைவிட சிறந்து எடுத்துக்காட்டு இருக்க முடியாது.

மேலும், அவர் பிற சமயத்தாரைப் பேதமுடன் பார்க்காத பண்பாளர் என்பதை அவரது வாழ்க்கை நிகழ்ச்சிகள் சில புலப்படுத்துகின்றன. மிஸ் பிரீத் என்ற ஆங்கில கத்தோலிக்க பெண்மணிக்கு சென்னையில் நடைபெற்ற திருமணத்தில் கலந்து சிறப்பித்தார். இந்த மணவிழா தொடர்பாக தேவாலயத்தில் நிகழ்ந்த இரவு நேர பிரார்த்தனையிலும் அவர்கலந்துகொண்டார். இன் னொரு சிறப்புச் செய்தி. அந்த திருமணம் நிகழ்ந்த இரவு சிவராத்திரி இரவாகும். எனவே மன்னர் அன்று அந்த

திருமணத்தில் முழுப் பட்டினியுடன் கலந்து கொண்டதாகும் அதே ஆண்டு நாட்குறிப்பில், மன்னரது பொருளுதவியினால் இங்கிலாந்தில் பார் - அட்லா படிட்பை முடித்து சென்னை திரும்பிய, தானியல் (தஞ்சை) என்ற இளைஞர் சென்னையில் மன்னரைச் சந்தித்து நன்றி தெரிவித்ததும், காணப்படுகின்றது திருமதி ஹெச் சி. ஜில்வா என்ற ஆங்கிலப் பெண்மணி இராமநாதபுரம் அரண்மனையின் கண்காணிப்பாளராக இருந்து தமது அறுபத்தைந்தாவது ஆண்டில் மரணம் அடைந்த பொழுது மன்னர் மிகுந்த மனவேதனை அடைந்ததுடன், அந்தப் பெண்மணி மீது கொண்டிருந்த பாசத்தின் அடையாளமாக அவரை அடக்கம் செய்த இராமநாதபுரம் சி எஸ் ஐ. தேவாலய கல்லறையில் நினைவுக்கல் ஒன்றையும் நாட்டி வைத்தார்.[39] அந்த தேவாலயத்திற்கு அழகிய சரவிளக்கு ஒன்றையும் ஏற்கனவே மன்னர் வழங்கி இருந்தார். இன்றும் அந்த அழகிய விளக்கு உபயோகத்தில் உள்ளது.

''ஒக்கனாத்தொழ யாவையும் பூத்துக் காய்த்து ஒக்க நின்று ஒன்றாய் நிறைவானதே'' என்ற முகவையில் சித்திபெற்ற தாயுமான அடிகளது பொதுமை நோக்கு, இந்த முகவை அரசருக்கும் பொருந்தி ஏனைய சமய நெறிச் சார்பாளருக்கும் உதவி நின்றது.

இராமநாதபுரம் சமஸ்தானத்தில் இன்னொரு பூர்வ குடிகளான இசுலாமியர்களும், இத்தகைய இனிய பண்பாளரிடம் பெருமதிப்பு கொண்டு இருந்ததில் வியப்பு இல்லை. ஏற்கனவே வள்ளல் சீதக்காதி காலம் முதல், வானது நாணக்கொடையால் உலகை வ்ளர்த்தருளிய சோனகர்களுக்கும் சேதுபதி மன்னர்களுக்கு மிடையில் நிலவிய நேச உணர்வுகள் இந்த மன்னர் காலத்திலும் நீடித்தன. இரு பெருஞ் செல்வத்தில் இணையற்று விளங்கிய இராமேசுவரம் இபுராகிம் மரைக்காயர் என்பவர்

39. இந்த நினைவுக்கல் சி.எஸ் ஐ. தேவாலய வளாக கல்லறையின் தெற்குச் சுவற்றில் பதிக்கப்பட்டுள்ளது

இந்த மன்னரது இனிய நேசராக விளங்கினார். இவர் "வரமுறுஞ்சித்தாந்த வேதாந்த காவிய மதித்திணைத் தினி துணர்ந்தோன்" என யாழ்ப்பாணம் சிவசம்புப் புலவரால் பாடிச் சிறப்பிக்கப்பட்டவர்[40] இராமேசுவரம் நெடுஞ்சாலையில் உள்ள மண்டபம் கிராமத்தின் செல்வச் சீமானாக விளங்கிய அப்துல் காசீம் மரைக்காயர், இந்த மன்னரது அன்புத் தளையால் பிணிக்கப்பட்டு அவரது குடும்பத்தில் ஒருவராக விளங்கினார். சேதுபதி மன்னர் மண்டபம் தோணித்துறையில் இருந்து படகில் இராமேசு வரம் செல்லும்பொழுதும், அங்கிருந்து திரும்பும் பொழுதும், வழியில் உள்ள தமது இருப்பிடமாகிய மண்டபத்தில் மன்னருக்கு மிகப்பெரிய வரவேற்பும் மரியாதையும் வழங்கி, பெருவிருந்து செய்வதைப் பெரும் பேறாக கருதி வந்தார் அந்த மரைக்காயர்.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் இடைப்பகுதி நமது நாட்டில் ஆங்கிலேயரின் ஆதிக்கப்பிடி இறுகத் தொடங்கியது. ஆங்கிலக் கல்வி, கலாச்சாரம், சட்ட திட்டங்கள் என்று பல முகங்களில் அந்த ஆதிக்கம் இந்திய சமுதாயத்தை பயமுறுத்தியது வடமாநிலங்கள் இவற்றில் எதிரொலித்த (1857 ஆம் ஆண்டு) சிப்பாய்க் கலகம், அதன் தாக்கமாக அமைந்தது. இதனையடுத்து, இந்து சமயத்தின் பழம் பெருமையைப் பறைசாற்ற சுவாமி தயானந்த சரசுவதியும், அந்த சமயத்தின் அடிப்படைகளை அரித்துக் கொண்டிருக்கும் தீமைகளைக் களைந்து மறுமலர்ச்சி காண ராஜாராம் மோகன்ராயும் பாடுபட்டனர். ஆனால் இத்தகையதொரு விழிப்பும் எழுச்சியும் இணைந்த இயக்கம் எதுவும் தெற்கே இந்த கால கட்டத்தில் தோன்றவில்லை. கேரளத்தில் நாராயணகுருவும், தமிழகத்தில் வடலூர் வள்ளலாரும் இந்து சமயச் சீர்திருத்தத்திற்காக வாழ்ந்தவர்கள்தான் என்றாலும், இன்று அவர்களை எண்ணிப் பார்க்கும் வகையில், அவர்களது பணியும் பெருமையும் அப்பொழுது பரவி இருக்கவில்லை.

---

40. சிவசம்பு புலவர் - சிவசம்பு புலவர் பாடல் திரட்டு (இலங்கை)

நமது மன்னரைப் பொறுத்த வரையில், அவர் ஒரு சமய மறுமலர்ச்சியின் மடலவிழ்ந்த மலராக வாழ்ந்தார். முதலில் தமது சமஸ்த்தானத்தின் கட்டுப்பாட்டில் இருந்த திருக்கோயில்களின் நிர்வாகத்தை தூய்மைப் படுத்தினர். அடுத்து தமிழகத்தின் ஏனைய திருக்கோயில் களுக்கு பொன்னும் பொருளும் வழங்கி அவைகளின் நித்ய கட்டளை, திருவிழாக்கள் சிறப்பாக நடைபெற உதவி வந்தார். இதன் மூலம் சமய அறிவும் தெளிவும் மக்கள் பெறுவர் என்பது மன்னரது முடிவு சமஸ் தானாதிபதி என்ற முறையில் இவை தமது ''ராஜ தருமம் என எண்ணி வந்தார்.

இந்த சமயத்தில் அமெரிக்க நாட்டில் அனைத்துச் சமயங்களின் பேரவை கூடவிருக்கிறது என்ற செய்தி மன்னருக்கு கிடைத்தது. தாம் மேற்கொண்டுள்ள தெய் வீகத் திருப்பணிகள் அனைத்திலும், இந்தப் பேரவை யில் கலந்து கொண்டு இந்து சமயச் சிறப்பையும் இந்திய நாட்டின் பண்பாட்டுக் கலப்பையும் மேநாட்டார் புரிந்து கொள்ளச் செய்வது தமது கடமையெனக் கருதினார். இந்திய நாட்டின் எந்த மாடாதிபதியும், சமஸ்தான பதி யும், சனாதனவாதியும் எண்ணிப் பார்க்காத செயல் இது. மதுரை ஜில்லா கலெக்டராக இருந்த திரு. கரோல் என்ற வெள்ளையர் மூலமாகத் தமது பயணத்திற்கு ஏற்பாடுகளைச் செய்தார்.[41]

இதற்கிடையில் கன்னியாகுமரிக்கு யாத்திரையாகத் வந்த சுவாமி விவேகானந்தரை (நரேந்திரர்) சென் னை நண்பர் ஜஸ்டிஸ் சுப்பிரமணிய ஐயர் மூலமாக கேள்வியுற்றுச் சந்தித்தார். அவருடன் ஆன்மீக சிந்தாந்தச் செய்திகளை அளவளாவி, பரிமாறிக் கொண்ட பின்னர், தமது பயணத் திட்டத்தை மன்னர் மாற்றிக் கொண்டார். எவ்வளவுதான் சமய சித்தாந்தங் களைக் கற்றுத் தெளிந்து, எளிதாக எடுத்துச் சொல்லும் தகுதிகள் பெற்று இருந்தாலும், இல்லறத்தில் இருக்கும்

41 Raja Baskara Sethupathy Diary entry dated 3-1893

தம்மைவிட ஒரு துறவி மூலமாக அந்தக் கருத்துக்களை ஆங்கிலமொழியில் உலகப் பேரவையில் வெளியிடுவது இன்னும் பொருத்தமானதாகவும் பயனுள்ளதாகவும் இருக்கும் என்று எண்ணினார். அவரது எண்ணத்தை சுவாமிகளிடம் வெளியிட்ட பொழுது அவர் தயங்கினார். பத்தாயிரம் மைல் தொலைவு கடற்பயணம். முற்றும் புதிய சூழ்நிலையில், அறிமுகம் இல்லாத மக்கள் கூட்டத்தினர் இடையில் சொற்பொழிவாற்றுவது ... ஒரு கடினமான, புதிய அனுபவம்; என்றாலும் தமது தல யாத்திரை முடிந்தபிறகு அமெரிக்கப் பயணம் பற்றிய முடிவைத் தெரிவிப்பதாக சுவாமிகள் தெரிவித்தார். கொந்தளிக்கும் அலைகடலின் ஆரவாரத்திற்கிடையில், குமரிமுனையில், சிந்தையை அடக்கி, வந்தனை செய்து, நீண்ட தியானத்துடன், சுவாமிகள் தமது நாலாண்டுக்கால தல யாத்திரையை முடித்துக் கொண்டு திரும்பினார். வழியில் சென்னையில் பாஸ்கர சேதுபதி மன்னரைச் சந்தித்து அமெரிக்கப் பயணம் மேற்கொள்ளுவதற்கான ஒப்புதலை அளித்தார். மிகவும் மகிழ்ச்சியடைந்த மன்னர் சுவாமிகளது பயணத்திற்குப் பொன்னும் பொருளும் வழங்கி பயண ஏற்பாடுகளையும் செய்தார். சுவாமிகளும் பம்பாய்த் துறைமுகத்திலிருந்து (Peninsular) என்ற கப்பலில் 31-5-1893-ல் அமெரிக்கப் பயணத்தை தொடங்கினார். ஜுலை கடைசி வாரத்தில் சிகாகோ போய்ச் சேர்ந்தார்.[42]

சிகாகோ நகரில் அனைத்துச் சமயங்களின் பேரவை நடவடிக்கைகள் 12-9-1893 தேதியன்று தொடங்கின. அதில் கலந்து கொண்ட பேச்சாளர்கள் தாங்கள் ஏற்கெனவே தயாரித்துக் கொண்டு வந்த உரைகளைப் படித்தது சுவாமிகளுக்குப் புதிய அனுபவமாகத் தோன்றியது.[43] தாமும் தமது உரையை ஏற்கனவே எழுதித் தயாரித்து வரத் தவறிவிட்டதற்காக சுவாமிகள் சஞ்ச

---

42 NATESAN M. S — Swami Vivekanantha. a sketch (1913) p. 12)

43. Swami Nikilananda - Swami Vivekananda a Biography (1953) pp 107, 111

லம் அடைந்தார். என்றாலும், மனம் தளராது அந்தப் பேரவையில் இந்து சமயசாரம் பற்றிய உரையைச் சிறப்பாக நிகழ்த்தினார் செம்மையும் மென்மையும் நிறைந்த அவரது செழுமையான சொற்பொழிவு அங்கிருந்தோருக்கு ஒரு புதிய இனிய விருந்தாக அமைந்தது சிவப்பு மஞ்சள் நிற அங்கியும் இந்திய நாட்டுத் தலைப்பாகையும் கொண்ட அவரது எடுப்பான தோற்றம் அமெரிக்க மக்களைப் பெரிதும் கவர்ந்தது.

இவைகளுக்கெல்லாம் மேலாக, சிக்காகோ நகரின் மிக்சிகன் சதுக்கத்தில் அமைந்திருந்த கலை அரங்கில் அவர் தமது கன்னிப் பொழிவினை, ''அமெரிக்க நாட்டு சகோதர, சகோதரிகளே'' என்று அன்புடன் தொடங்கிய உரை, அங்கு குழுமியிருந்த மக்களுக்கு மிகுந்த மகிழ்ச்சியை அளித்தது. அதன் வெளிப்பாடான அவர்களது ஆரவாரம், கரவொலி,கடல் ஒலியாக அதிர்ந்தது. பொதுவாக, பொது மேடைகளில் சொற்பொழிவாற்றும் பேச்சாளர்கள் தங்களது பேச்சினை ''சீமான்களே, சீமாட்டிகளே'', ''கற்றுணர்ந்த சான்றோர்களே'' என தொடங்குவதுதான் அன்றைய மரபாக இருந்தது. சுவாமிகளது, தொடக்கம் மாறுபாடாக இருந்தாலும் மனத்தைத் தொடுவதாக அமைந்தது. அங்கு குழுமியிருந்த சான்றோர்கள் அனைவரையும் விட இந்தச் சாமியார், மேதாவிலாசம் மிகுந்தவர் என்பது அவரது உரையினைக் கேட்ட மக்களது தீர்ப்பாக இருந்தது. ''நியூயார்க் ஹெரால்டு'' போன்ற சிறந்த அமெரிக்க நாளிதழ்கள் சுவாமிகளை மிகப்பெரிய மேதையென வருணித்து வரைந்தன. சுவாமிகளும் அந்தப் பேரவையில் பதின்மூன்று நீண்ட சொற்பொழிவுகளை நிகழ்த்தினார்.[44]

ஆன்மீகத் தத்துவங்களின் திருவுருவாக நடமாடிய சுவாமிகளுக்கு அமெரிக்க நகரங்கள் எங்கணும் ஆதரவும் இந்திய நாட்டு வேதாந்த தத்துவங்களின்பால் ஈடுபாடும்

---

44. French and Arvind Sharma — Religious Firmentation modern India (1981) 60

ஏற்பட்டன. அதனால், இராமகிருஷ்ணா மிஷன் என்ற பெயரில் இந்து சமயத் தொண்டு நிலையங்களை தமது ஆன்மீக குரு இராமகிருஷ்ண பரமஹம்ஸர் பெயரில் நிறுவிட பொன்னான வாய்ப்பு அவருக்கு கிட்டியது, நான்கு ஆண்டுக்கால வெற்றிப் பயணத்தை மேனாடுகளில் சிறப்பாக முடித்து விட்டு நரேந்திரர் சுவாமி விவேகானந்தராகத் தாயகம் திரும்பினார். கொழும்புத் துறைமுகத்தை அடைந்த சுவாமிகள், யாழ்ப்பாணம் சென்று அங்கிருந்து தென்மேற்குத் திசையில், இராமநாதபுரம் சேதுபதி மன்னரது துறைமுகமான பாம்பனுக்கு 20-1-1897 அன்று வந்து சேர்ந்தார். முன்னதாகவே அந்த ஊருக்கு வந்து இருந்து சுவாமிகளுக்கான வரவேற்பு ஏற்பாடுகளில் முனைந்து காத்து இருந்த பாஸ்கர சேதுபதி மன்னர் பாம்பன் துறையில் தமது பரிவாரங்களுடனும், பக்த கோடிகளுடனும் பிரம்மாண்டமான வரவேற்பு ஒன்றை வழங்கினார்.[45] பரிதியின் ஒளியும் சென்றிடாத பரங்கியர் நாடுகளில் பாரதத்தின் மெய்யொளி பரப்பி வந்த, அந்தத் தத்துவ வித்தகரது வரலாற்றுச் சிறப்புமிக்க வருகையைக் குறிக்கும் நினைவுச் சின்னம் ஒன்றையும் மன்னர் அங்கு திறந்து வைத்தார்[46]

படகில் இருந்து கரையிறங்கிய சுவாமிகளது புனித பாதங்களை தமது தலையிலே வைத்து கரையிறங்குமாறு மன்னர் வேண்டிக் கொண்டார். இந்தியத் திருநாட்டின் சாந்தியும் சமாதானமும் நிறைந்து ஆன்மீகச் செய்தியினை சப்த சாகரங்களுக்கும் அப்பால் எடுத்துச் சென்று, பாரத நாட்டின் ஆன்மீகச் சிறப்பை மேலை நாடுகளில் செழித்து வளரச் செய்த திருவடிகள் அவை என போற்றிப் பணிந்தார்.[47]

---

45 V.R and Sons. Madras-Almorah (1923) P.49
46. — do —
47. BASU. S.P And Ghush. S.B. Vivekananda in Indian News papers (1969) p.134.

ஓம் : சத்தியமேவ ஜெயதி :

''வேதாந்த நெறியை மேலைநாட்டில் பரப்பிய பெரு வெற்றிப் பரணியுடன் வருகைதந்த சுவாமி விவேகாநந்தரது புனித பாததூளி இந்திய மண்ணில், முதலில் பட்ட இடம் என்பதன் நினைவாக, மன்னர் சேதுபதிபால் நிர்மாணிக்கப்பட்டது இந்த நினைவுச் சின்னம்''. என்ற வாசகங்கள் வடித்த வெள்ளைப் பளிங்குக்கல் ஒன்று கடற்கரையில் நிறுவப்பட்டது, சுவாமிகளது இராமநாதபுரம் சமஸ்த்தான வருகை, மன்னரை எலலையில்லாத இன்பக் கடலில் திளைக்கச் செய்தது என்பதை இந்த நினைவுச் சின்ன வாசகம் நினைவூட்டுவதாக உள்ளது. 'வாய்மையே வெல்லும்'' என்ற பொருளில் ''சத்தியமேவ ஜெயதே'' என்ற உபநிடத வாக்கினை, மங்கலச் சொல்லாக தேர்வு செய்த இந்த மன்னரது சிந்தனையையும் சீலத்தையும் எங்ஙனம் போற்றுவது? இந்த நிகழ்ச்சிக்கு ஐம்பது ஆண்டுகளுக்கு பின்னர், கி.பி. 1947ல் இந்திய குடியரசும் தமிழக அரசும் தங்களது அரசு இலச்சினையில் அதே மங்கலச் சொற்களை இணைத்து வழங்குவர் என யாரும் அன்று எதிர்பார்த்திருக்க மாட்டார்கள். செம்மையான சிந்தனையையும் செயலையும், எழுச்சி கொள்ளச் செய்ய, வாய்மையின் வலிமையை விட வேறு என்ன இருக்கிறது என்பதை கண்டறிந்த கல்விக் கடல் அல்லவா மன்னர் பாஸ்கரர்.

பின்னர் அலங்காரம் செய்யப்பட்ட பொட்டு வண்டியில் சுவாமிகள் ஏறி அமர்ந்தவுடன் அதில் பூட்டப்பட்டிருந்த மாடுகளை அவிழ்த்துவிடுமாறு உத்திரவிட்டு, அந்த வண்டியை அவரும் அவரது பரிவாரங்களும் பாம்பன் அரண்மனைக்கு இழுத்துச் சென்றனர். சுவாமிகளிடம் மன்னர் கொண்டிருந்த மட்டற்ற அன்பையும் மரியாதையையும் புலப்படுத்த இதைவிட வேறு நிகழ்ச்சி எதனையும் குறிப்பிடத் தேவையில்லை. அங்கே மூன்று நாட்கள் சுவாமிகள் ஓய்வாகத் தங்கி இருந்தார். தமது அமெரிக்க பயணத்தை மேற்கொள்ளச் செய்து, இந்திய நாட்டுத் தொன்மையையும், இந்துமதப் பெருமையையும் புகழேணிக்கு உயர்த்திய புரவலர் பாஸ்கர சேதுபதி மன்ன

ரையும் அவரது பேருபகாரத்தையும் மறக்காமல் பாம்பன் துறைமுக வரவேற்புரையில் மனம் நெகிழ்ந்தவராக குறிப்பிட்டுப் பேசினார் சுவாமிகள்.

"......... .. இராமநாதபுரம் அரசருக்கு எனது இதயம் நிறைந்த நன்றியினைத் தெரிவிப்பது இயலாத காரியமாகும் இந்த அடியவனால் ஏதாவது தொண்டு நிறைவேறி இருக்குமானால், அதற்கு இந்த நாடு, இந்த நல்ல மனிதருக்கு மிகவும் நன்றிக் கடன்பட்டுள்ளது ஏனெனில் சிகாகோவிற்கு நான் செல்ல வேண்டும். என்ற கருத்தை எனது சிந்தனையில் திணித்து அதனை அடிக்கடி வலியுறுத்தி, என்னை ஏற்றுக் கொள்ளுமாறு செய்தது அவர் தான். இவரைப் போன்று இன்னும் ஐந்தாறு அரசர்கள் நமது அருமைத்தாய் நாட்டின்மீது அக்கரை கொண்டு ஆன்மீகத் துறையின் சீரமைப்பிற்குப் பாடுபடவேண்டும் என விழைகிறேன்."

ஆன்மீக வைதிக வாதங்களில் மன்னரும் சுவாமிகளும் ஈடுபட்டு இருந்தனர். பாம்பனிலும், இராமேசுவரத்திலும் அளிக்கப்பட்ட வரவேற்புகளைவிடப் பன்மடங்கு சிறந்த வரவேற்பு சுவாமிகளுக்கு இராமநாதபுரத்தில் அளிக்கப்பட்டது. சுவாமிகள் திருப்புல்லாணி ஆதிஜெகந்நாதப் பெருமாள் ஆலயத்திற்குச் சென்றுவிட்டு மாட்டுவண்டியில் பயணம் செய்து சக்கரக் கோட்டை கண்மாயை படகில் கடந்தும் (25 1-1897) தேதி மாலையில் இராமநாதபுரம் வந்து சேர்ந்ததார் கோட்டையில் பீரங்கிகள் முழங்கின. வாணங்கள் விண்ணில் வெடித்தன, மன்னரைப் போல மக்களும் மிகுந்த உற்சாகத்துடன் கலந்து கொண்டு சுவாமிகளை ஊர்வலமாக சங்கர விலாசம் மாளிகைக்கு அழைத்து வந்தனர். இராமநாதபுரம் பொதுமக்கள் சார்பாக சங்கர விலாசத்தில் ஆங்கில வரவேற்பு மடலினை சுவாமிகளுக்கு மன்னரது இளவல் தினகர் வாசித்து அளித்தார். அதற்குப் பதிலுரைக்கும் பொழுது, முன்னர் பாம்பனில் கூறிய புகழுரைகளை மீண்டும் சுவாமிகள் குறிப்பிடத் தவறவில்லை. "மேலை நாடுகளில் நமது சமயத்திற்கும், நமது தாய்நாட்டிற்கும், இந்த அடியவனால் ஏதாவது தொண்டுகள் தொடரப்பட்டு இருக்குமானால் அந்த

நாடுகள் இந்த இராமநாதபுரம் அரசருக்கு நன்றிக்கடன் பட்டுள்ளன.. முதன் முதலில் சிகாகோ பேரவைக்கு நான் செல்ல வேண்டும் என்ற கருத்தை என்னுள் புகுத்தியவர் நீங்கள். தொடர்ந்து என்னை அதற்காக வலியுறுத்தி வற்புறுத்தி வந்தவரும் நீங்கள்தான். அதனால் எத்தகைய விளைவுகள் ஏற்படும் என்பதைத் தீர்க்க தரிசனத்துடன் உணர்ந்து, எனது கரங்களைப் பற்றி இதுவரையிலும் என்னை ஊக்குவிப்பதற்கும் நீங்கள் தவறவில்லை. ஆதலால் எனக்கு எய்தியுள்ள வெற்றிகளுக்காக முதலில் மகிழ்ச்சியடைபவர் நீங்களேதான். இந்தக் காரணத்தினால், தாயகம் திரும்பும் வழியில் தங்களைச் சந்திப்பதற்காகவே உங்களுடைய நாட்டில் முதலில் கால் வைத்துள்ளேன்'' என்று சுவாமிகள் தமது கனிவினை மன்னரை நோக்கி வெளியிட்டார்.

ஆடம்பரமில்லாது, மிகுந்த அடக்கத்துடன் எளிய வாழ்க்கையில் தொய்ந்து வாழும் சிறந்த பணியாளரும் பெருங்கொடையாளியுமான பாஸ்கரசேதுபதி மன்னரை யாரும் பாராட்டுவது இயல்பு. ஆனால் மன்னர்களைத் துரும்பாக மதிக்கும் துறவியொருவர் இவ்வளவு ஆழமான அன்பு உணர்வுகளுடன், நன்றிப்பெருக்கு மேலிட, பாசத்துடன் பாராட்டிப் புகழ்வது என்பது உண்மையை வெளிப்படுத்துவது என்பதைத் தவிர வேறு என்னவாக இருக்க முடியும்? இந்திய நாட்டின் ஏற்றத்திற்கு, இந்து சமயத்தின் சிறப்பிற்கு இன்றைக்கு நூறு ஆண்டுகளுக்கு முன்னர், பொன்னையும், பொருளையும் அள்ளி அள்ளி வழங்கியவர்—இந்த பாஸ்கர சேதுபதி மன்னர் ஒருவர் தானே; நூற்றுக்கணக்கான சுதேச மன்னர்கள் பெரும் புகழ் பெற்று வட இமயம் முதல் தென்குமரி வரை வியாபித்து இருந்த பொழுதும், செயற்கரிய இந்தச் சாதனையைச் செய்தவர் இராமநாதபுரம் மன்னர்தானே கேளிக்கைகளிலும் கேடு விளைவிக்கும் களியாட்டச் செயல்களிலும் பெரும்பாலான மன்னர்கள் ஈடுபட்டு பெறுவதற்கரிய வாழ்வை பயனற்ற விளையாட்டாக கழித்துக் கொண்டு இருந்த பொழுது, நமது பாரத நாட்டையும் அதன் பழம் பெருமையையும் நிலைநாட்ட, நினைத்து முனைந்தவர், இந்த நல்ல மனிதர் ஒருவர்தான் என்பது வரலாறு.

அதனால்தான் மனம்விட்டு இந்த உண்மையை மறக்காமல், சுவாமிகள் மீண்டும் பாம்பனிலும், இராமநாதபுரத்திலும் மதுரைமாநகரிலும் சொற்பொழிவுகளிளெல்லாம் மக்களிடையே தெரியப்படுத்தினார் தெளிவுபடுத்தினார். மன்னருக்கு ''ராஜரிஷி'' என்ற சிறந்த விருதையும் வழங்கினார். திரேதாயுகத்தில் இந்தப் பெயருக்குப் பொருத்தமாக விஸ்வாமித்திர முனிவர் இருந்ததைப் புராணங்கள் கூறுகின்றன இந்தக்கலியுகத்து ''ராஜரிஷி'' பாஸ்கர சேதுபதி என்பது சுவாமி விவேகாநந்தரது கணிப்பு, வசிஷ்டரது வாயினால் மகரிஷி என்பது போல, விவேகானந்தர் இராமநாதபுரம் மக்களிடம் உரையாற்றும் பொழுது, பாஸ்கரரை ராஜரிஷி என்றே வர்ணித்து புகழுரை ஆற்றினார்.

கி.பி 1903 புத்தாண்டு பிறந்தது. ஆனால் பாஸ்கர சேதுபதி மன்னர், தெம்புடனும் மகிழ்ச்சியுடனும் காணப் படவில்லை. ஏற்கனவே அள்ளி அள்ளிக் கொடுத்துப் பழக்கப்பட்டுப்போன அவருக்கு, மேலும், மேலும் வழங்கி மகிழத்தக்க வசதி இல்லை என்ற கவலை போலும்! அத்துடன் முந்திய ஆண்டு இயற்கை எய்திய சுவாமி விவேகானந்தரைப் பற்றிய சிந்தனைகள், அவரது உள்ளத்தில் ஓயாமல் வேதனையை நிறைத்து வந்தன நெல்லை மாவட்டத்தில் உள்ள தமது மாமனார் ஊர்க்காட்டு ஜமீன்தார் கோட்டிலிங்க சேதுராயர் மாளிகைக்குச் சென்றார்[48]. அமைதியாகச் சில நாட்களை கழிப்பதற்கு ஜமீன்தார் மகளைத் திருமணம் செய்து ஏழு வருடங்கள் ஆகியும் மாமனார் வீட்டிற்கு அப்பொழுது தான் முதன் முறையாகச் சென்றார் ஏன்? கடைசிமுறையும் அதுதான்! ஆனால் விரும்பிய மன அமைதி அந்த மாளிகை வாசத்திலும் கிடைக்கவில்லை. அதனால் ஊர்க்காட்டிற்கு எதிரே தாமிரபரணி ஆற்றின் கரையில் அமைந்து உள்ள கல்லிடைக்குறிச்சி திருவாவடுதுறை

---

48. V.R. and Sons, Madras — Colombo to Almora (1923) pp. 45, 45

ஆதீன மடத்தில் தங்கினார். ஆம்! திருமடத்தில் மகாராஜா தங்கி வாழ்ந்தார். அவர் விரும்பிய. நிறைவான, நிரந்தர அமைதி அங்குதான் கிடைக்கும் என்பதை அவரது உள்ளுணர்வு அவருக்கு உணர்த்தி இருத்தல் வேண்டும்.

அமைதி தவழும் சூழ்நிலையல் அமைந்துள்ள கல்லிடைக் குறிச்சி மடத்தில், மவுனமாகப் பொழுது போக்கிக் கொண்டிருந்த மன்னருக்கு முதுகில் பிளவை எனப் படும் கட்டியொன்று ஏற்பட்டது. சிறிது சிறிதாக அதனால் வலியும் வேதனையும் அதிகமாகிக் கொண்டிருந்தது கடவுள் சிந்தனையிலும். தியானத்திலும் மிகுதியாக ஈடுபட்டிருந்த மன்னர் இந்த சிறு உபாதையை ஒரு பொருட்டாக மதிக்கவில்லை. அதற்கான வைத்தியத்திலும் ஈடுபடவில்லை. ஆனால், அந்தச் சிறுகட்டி அவரது பொன்னான புகழ் வாழ்வை அழித்து விடும் வாளாக அமைந்து விட்டது! அற்பம் எனக் கருதியதால் விளைந்த பேரிழப்பா? அல்ல. விதியின் விளையாட்டா!

அன்று மார்கழி - ஆருத்திரா தரிசனத் திருநாள், மிகுந்த சிரமத்துடன் காலைக் கடன்களை முடித்த பாஸ்கர சேதுபதி மன்னர், படுக்கையில் சாய்ந்து அமர்ந்து இருந்தார். அப்பொழுது மன்னரது உடல் நலிவைக் கேள்வியுற்ற ஹரிகேசநல்லூர் முத்தையா பாகவதர் என்ற இசைப் புலவர் மன்னரைப் பார்ப்பதற்காக திருமடத்திற்குள் வந்தார். அன்புடன் வரவேற்ற மன்னரை, அவரது உடல் நலிவு பற்றி அக்கரையுடன் அவர் விசாரித்தார். பலமுறை இராமநாதபுரம் அரண்மனையில் மன்னரைக் கண்டு மகிழ்ச்சியுடன் அளவளாவியும், தமது இசைத் திறமையை காட்டித் பரிசில்களையும் பெற்று வந்த பாகவதருக்கு மன்னரது நிலை மிகுந்த வேதனையை அளித்தது. மன்னர் பாகவரது பேச்சை இசையின் பால் திருப்பினார். மன்னரது வேண்டுகோளின்படி பாகவதரும் மோகனராகத்தில் கீர்த்தனம் ஒன்றை மிகவும் உருக்கமாகவும் இனிமையாகவும் பாடி முடித்தார். மன்னருக்கு ஏற்பட்ட மகிழ்ச்சிக்கு அளவே இல்லை.

உடனே தமது கழுத்தில் அணிந்து இருந்த நவகண்டி மாலையைக் கழற்றிப் பாகவதருக்கு அன்பளிப்பாக வழங்கினார்.

அவரது கரங்கள்தான் அந்த மாலையைக் கொடுத்ததே தவிர, அவரது உயிர் ஏற்கனவே பாகவதர் பாடிய அந்த மோகன ராகத்தில் இழைந்து, குழைந்த இசையில் கலந்து விட்டது "பாட்டகத்து இசையாகி" எனத் தேவாரம் பாடுகின்ற உயிர் ஊட்டும் தெய்வீகக் கலையான இசை, பாஸ்கர சேதுபதி மன்னரைப் பொறுத்த வரையில் அவரது புனித உயிரைத் தெய்வீக நிலைக்கு எடுத்துச் சென்ற உந்து கருவி என்றுதான் குறிப்பிட வேண்டியதாக உள்ளது.

மரணமில்லாப் பெருவாழ்வு வேண்டும் என விழைந்தார் வடலூர் வள்ளலார் அவ்விதமே சித்தி வளாகத்தில் முத்தி பெற்றார் அந்தப் பெருஞ்சித்தர். ஆனால் மன்னர் மற்றவர்களைப் போலத் தம்மையும் சாதாரண மனிதராகவே கருதினார் தமது 1893ம் ஆண்டு நாட்குறிப்பில் தமது வாழ்க்கை இலக்குகளைக் குறிக்கும்பொழுது எவ்வித உபாதையுமின்றி மரணத்தில் தமது வாழ்வை முடித்துக்கொள்ள வேண்டும், அதுவும் தமது அளவிடற்குரிய அன்புக்கும் மரியாதைக்குமுரிய அண்ணன் வள்ளல் பாண்டித்துரைக்கு முன்னர் இறந்துவிட வேண்டும் என்ற விருப்பங்களைக் குறித்து வைத்து இருந்தார் அல்லவா? இறைவனது கருணையினால் அவரது இரு விருப்பங்களும் அங்கு நிறைவேறி விட்டன. மன்னரது மறைவைக் கேள்வியுற்ற சிங்கம்பட்டி ஜமீன்தார் முருகதாஸ் தீர்த்தபதி அவர்கள் திருமடத்திற்கு விரைந்து சென்று, மன்னரது மறைவிற்கு இரங்கல் தெரிவித்ததுடன், மன்னரது உடலை சிங்கம்பட்டி மாளிகைக்கு எடுத்துச் சென்றார் பின்னர், உரிய பக்குவத்துடன் இராமநாதபுரத்திற்கு அனுப்ப ஏற்பாடு செய்தார் பாஸ்கர சேதுபதி மன்னரது உடல் கல்லிடைக் குறிச்சியில் இருந்து மதுரைக்குக் கொண்டு வரப்பட்டது விரைவாக இராமநாதபுரத்திற்கு எடுத்துச் செல்லும் சாதனம் இல்லாத காலம் அது அப்பொழுது

மதுரைக்கும் மண்டபத்திற்கும் இடையில் அமைக்கப்பட்டிருந்த ரயில் பாதை வழியாக முதல் ரயில் மன்னரது உடலை இராமநாதபுரத்திற்கு எடுத்து வரப் பயன்படுத்தப்பட்டது. இந்த அளவிற்கு அன்றைய அன்னிய அரசாங்கம் விரைவாகச் செயல்பட்டு மன்னருக்குத் தமது கடைசி அஞ்சலியை இந்த உதவி மூலம் செலுத்தியது, அன்றிலைப் பிரிந்த துணை போல வள்ளல் பாண்டித்துரைத் தேவரும் தமது உடன்பிறவாத தம்பி பாஸ்கர சேதுபதியின் மறைவால் துடியாய்த் துடித்தார். கதறிக் கண்ணீர் விட்டு அழுதார். முடிசார்ந்த மன்னரும் மற்றுள்ளோரும் முடிவில் பிடிசாம்பலாவது உறுதிதான். என்றாலும், மனித இதயத்திற்குரிய இயல்பான வேதனையும் கவலையும் அவரது உள்ளத்தின் அடித்தளத்திலிருந்து அன்பின் முதிர்ச்சியால் பீறிட்டுக் கவிதைகளில் கொப்பளித்தன. இதோ அவரது இரங்கற்பாக்கள்,

சேதுபதி மன்னர் குலக்கடல் தோன்றி
அருணனையோ சேர்ந்தோ ராம்
மேதினி எங்கனும் செலுத்தி இரவொழிந்த
புகழொளியை விரித்துத் தேன்போற்
ஓது பிரசங்க மழை உவந்து உதவு
பாற்கர; நீயொடுக்கும் காலம்
ஈதுகொலோ இன்னமும் நீ எய்துவையோ
இரங்கி எமக்கு இசைத்திடாயே

''என்னாவி உளங்குளிர அண்ணாவென்று
அன்போடு இனி எனை யார்சொல்வார்
மன்னா; மன்னா; மன்னா! எனயாரை
யான் இனிமேல் மதித்துச் சொல்வேன்
பொன்னாடுந் தொழும் சேது நன்னாடு
புரந்தளிக்கப் போந்த நீ வேறு
என்னாடு சென்றனையோ. எங்கள் குல
மணி விளக்கே! இசைத்திடாயே![49]

---

49. மகாவித்வான் மு. ராகவஐய்யங்கார் - தமிழ்வளர்த்த தேவர்கள் (162) பக்கம்

இனித் தமிழகத்தில் மாண்புக்குரிய மன்னர் என அழைக்கத்தக்க மன்னர் எங்கே உள்ளார்? இல்லவே இல்லை

மன்னரது பெரும்மதிப்பிற்குரிய நண்பராக விளங்கிய மகா வித்வான் ரா ராகவ ஐயங்கார் அவர்கள், பாரிவள்ளல் மறைந்த பொழுது மனங்கலங்கிய கபிலரைப் போல மாளாத வேதனையில் ஆழ்ந்தார். அவரது வேதனை விரவிய கவிதை,

''பாட்டும் உரையும் பயிலாப் பதடிகள்தம்
ஓட்டைச் செவியுள் உகுப்பேனோ!- நீட்டுக்கொடை
செங்கையாய்! பாற்கரனே! செந்தமிழ்பாவின் சுவையை
எங்கையா சொல்வேன் இனி!''

என்று அங்கலாய்த்து அகம் உருகினார். எங்கே ஐயா! எங்க ஐயா!

செந்தமிழ்க் கவிதைகளைப் புலவர்கள் இனி யாரிடத்து எடுத்துச் சொல்வர். செவியுணர்வு இல்லாத சென்மங்களிடம் புலவர்கள் செந்தமிழைச் சொல்வதற்கு வாய்ப்பு ஏது?

சேது சமஸ்தானத்தின் செவ்வானத்தில் சீரும் சிறப்புமாகத் திகழ்ந்த சுடர்மிகு பாஸ்கரன் அஸ்தமித்து விட்டான்.

சேதுமன்னர் செழுங்கொடியின் கொழு கொம்பு வேரோடு சாய்ந்துவிட்டது

கலை பல பயின்று, கட்டுரை தெளிந்தது, தத்துவம் தோய்ந்த வித்தகர்.

சென்றவிடமெல்லாம் சீதளம் பரப்பிய கலைக்குரிசில்,

பண்ணும் பனுவலும் - பல தோன்றப் பெருங்கொடை வழங்கிய பாரி.

எண்ணும் எழுத்தும் கண்ணாகக் கொண்டு விளங்கிய ஏந்தல்.

இரவலரின் ஏழ்மை நீக்கிய புரவலர்,

ஏழிசையாய் இசைப் பயனாய்,இன்தமிழாய் விளங்கும் இறைவனது பாதையில் எண்ணிறந்த பணிகளை இயற்றிய திருத்தொண்டர்,

குறை இரந்தாருக்கு கொடையின் திருவுருவாக விளங்கிய காவல் தெய்வம்-

காலவெளியில் கலந்துவிட்டது.

இதயத்திலே இரக்கமும், ஈரமும், மாண்பான சிந்தனைகளும் செயல்திறனும், பசுமையாக படர்ந்து இருக்கும் வரை, மன்னர் பாஸ்கரர் பற்றிய எண்ண இழைகளும் அலைகளின் பின்னணியில் இதே.வள்ளலது எண்ண வடிவமும் வாழ்ந்து கொண்டே இருக்கும்

அத்துடன் அந்த தெய்வத் திருமேனியின் புகழ்வடிவு, எட்டாத தொலைவில் உள்ள துருவ நட்சத்திரம் போல உயர்ந்து பரந்து காலமெல்லாம் சுடரொளி பரப்பிக் கொண்டு இருக்கும்.

# 6

## மன்னரது குடும்பம்

### மாலை சூடிய மனைவியர்

இந்திய சமூகத்தில் மன்னர்களும் குறுநிலக்கிழார்களும்பலதாரமணங்களை மேற்கொள்ளுதல் நீண்ட நெடுங்கால வழக்கமாக இருந்து வந்துள்ளது. சமுதாய நலன் கருதியும் மற்றும் அரசியல் சூழ்நிலைகளுக்கு ஏற்றதாகவும் இந்தத் திருமணங்கள் அமைந்திருந்தன. சோழர்களது வழியினரான செம்பி நாட்டுக் கிளையைச் சேர்ந்த சேதுபதிகளும் அந்த மரபினைப் பின்பற்றி பல மங்கையரை மனைவிகளாக ஏற்றனர். மன்னர் பாஸ்கரர் இராமநாதபுரத்திற்கு அண்மையிலுள்ள களரி. துரைசிங்கத் தேவர் மகள் மங்களேஸ்வரி நாச்சியாரையும் தூவல் கண்ணுச்சாமித் தேவர் மகள் சிவபாக்கியம் நாச்சியாரையும் ஒரே நாளில் திருமணம் செய்து கொண்டார்.

மன்னருக்கு ஏற்ற இந்த மனைவிகளில் மங்களேஸ்வரி நாச்சியாருக்கு மகப்பேறு கிட்டவில்லை. என்றாலும் இரண்டாவது மனைவி

சிவபாக்கியம் நாச்சியார் இரு ஆண்மக்களையும் ஒரு பெண் மகவையும் பெற்றுக் கொடுத்தார். சேதுபதி மன்னர் தமது இருபத்துயெட்டாவது வயதில் ஊர்க்காடு ஜமீன்தார் கோட்டிலிங்க சேதுராயரது மூத்த மகளான சிவகாம சுந்தர நாச்சியாரையும் மணந்து கொண்டார். ஊர்க்காடு ஜமீன்தாரும் அவரது குடிகளும் பல நூற்றாண்டுகளுக்கு முன்னர் இராமநாதபுரம் சீமையிலிருந்து தெற்கே நெல்லைச் சீமைக்குக் குடிபெயர்ந்தவர்கள் பெரிய தாலியினை மங்கள அணியாகக் கொண்ட கோட்டை மறவர் என்ற கிளையைச் சேர்ந்தவர்கள் இவர்கள். சேது நாட்டிலிருந்து குடிபெயர்ந்ததால் தங்களது இயற்பெயரின் விகுதியாக சேதுராயர் என்ற பட்டத்தையும் இணைத்துக் கொண்டனர். பல ஆண்டுகளுக்கு முன்னர் விடுபட்ட உறவினை மீண்டும் தொடரும் முகமாக இந்தத் திருமணம் நடைபெற்றது.

ஆனால் விதியின் விளையாட்டு வேறு விதமாக இருந்தது. இந்த மங்கையர்க்கரசியும், மகப்பேறு எய்தவில்லை. மேலும் அவரது ஏழு ஆண்டுகால மணவாழ்வினுக்கு இறுதியும் ஏற்பட்டது. மன்னர் பாஸ்கரர் மறைந்த சில மாதங்களுக்குள் மனம் நிறைந்த கணவர் இல்லாத கைம்மை வாழ்வினைக் காலமெல்லாம் தொடர விரும்பாத இந்த மங்கை நல்லாள் தன்னையே மாய்த்துக் கொண்டார். இராமநாதபுரம் அரண்மனை வரலாற்றில் முன்னும் பின்னும் நிகழாதது இந்த அவல நிகழ்ச்சி!

### பெரிய தந்தையார்

இராணி பர்வதவர்த்தினி நாச்சியாரின் கணவரும் இராமநாதபுரம் சமஸ்தானாதிபதியுமான இராமசாமி சேதுபதி ஆண்வாரிசு இல்லாமல் அகால மரணமடைந்தார். ராணியார் தமது தங்கையின் மக்களான இளவல் முத்துராமலிங்கத்தை சுவிகார புத்திரனாகவும் அவரது தமையன் பொன்னுச்சாமியை தமது நிர்வாகியாகவும் நியமனம் செய்தார். பொன்னுச்சாமித் தேவர் கி.பி. 1857ல் இருந்து 1868 வரை சமஸ்தானப் பணியை ஏற்றிருந்தார் இவர் பாஸ்கரரது பெரிய தந்தை ஆவார்.

ஆங்கிலத்திலும் தமிழிலும் அரிய புலமைபெற்று இருந்ததால் இராமநாதபுரம் சீமை அரசியலை மிகச் சிறப்பாக நிர்வகித்து வந்தார். இளவல் முத்து ராமலிங்க சேதுபதியின் சுவிகாரம் பற்றிய வழக்குகள், உறவினரது சூழ்ச்சிகள் ஆகியவைகளுக்கிடையில் தமிழ் புலவர்களை வரவேற்று மகிழும் சிறந்த பண்பும் அவருக்கு இருந்தது. இதனால் மக்கள் இவரது அவையை போஜராஜனின் சபையாகவே கருதி வந்தனர் புலவர்களை சாதுர்யமான வினாக்களின் மூலம் வியப்படையச் செய்து அவர்களது புலமையை சோதிப்பது போல, அவர்களது வறுமையையும் உணர்ந்து, அவர்களுக்குப் பொன்னும் பொருளும் வழங்கி உதவினார். அஷ்டாவதானம் சரவணப் பெருமாள் கவிராயர், பழனி மாம்பழ கவிச்சிங்க புலவர், மகா வித்துவான் திரிசிரபுரம் மீனாட்சிசுந்தரம் பிள்ளை, திருவாவடுதுறை தாண்டவராய சுவாமிகள், மகாமகோபாத்தியாய இராஜு சாஸ்திரிகள், தில்லையம்பூர் சந்திர சேகரக் கவிராயர், ஆகிய பெரும் புலவர்கள் அவரது கொடையிலே குளிர்ந்து மகிழ்ந்தவர்கள். சைவ சமய சூடாமணியான யாழ்ப்பாணம் ஆறுமுக நாவலர் அவர்களைக் கொண்டு திருக்குறள் பரிமேல் அழகர் உரை, திருக்கோவையார் உரை, சேது புராணம், இலக்கணக் கொத்து, இலக்கண விளக்கம் ஆகிய நூல்களை ஏட்டுச் சுவடிகளில் இருந்து முதன்முறையாக அச்சில் பதிப்பித்து உதவினார். இராமநாதபுரம் வைத்தியர் முத்துக்கருப்ப பிள்ளையைக் கொண்டு ஆயுர்வேத மருத்துவ முறைகளைத் தொகுத்து வைத்திய சார சங்கிரகம் என்ற பெயரில் பதிப்பிக்கச் செய்தார். மேலும் பல்வேறு சமயங்களில் புலவர்கள் பாடிய தனிப்பாடல்களை தில்லையம்பூர் சந்திரசேகர கவிராயரைக் கொண்டு திரட்டி "தனிப் பாடல் தொகுதி" களாக முதன்முறையாக வெளியிட்டார். தமிழ் புலவர்களது பாடல்களின் தொகுப்பாக மட்டும் இல்லாமல் தமிழகத்தில் புலவர், புரவலர்களை தமிழ் மக்கள் புரிந்துகொள்வதற்கும் உரிய சிறந்த நூலாக இந்த திரட்டு விளங்குகிறது.

இவ்விதம் பொன்னுச்சாமித் தேவர் அவர்கள் நிர்வாகியாக, தமிழ் புலவராக, பதிப்பாளராக, வள்ளலாக, மட்டுமல்லாமல் சிறந்த இசை மேதையாகவும் திகழ்ந்து

வந்தார். அவர் இயற்றிய இசைப்பாடல்கள் கி.பி. 1880ல் ''ஸ்வர கீர்த்தனைகள்'' என்ற தலைப்பில் வெளி வந்துள் ளன. இவரது திறமையை அங்கீகரிக்கும் முறையில் இராணி பர்வத வர்த்தினி நாச்சியார் பாலையம்பட்டி, பாலவநத்தம், பகுதிகள் உள்ள சில கிராமங்களைக் கொண்ட புதிய ஜமீனை தோற்றுவித்து அவருக்கு வழங் கினார். ஜமீன்தாரான பொன்னுச்சாமித் தேவரவர்கள் இராமநாதபுரத்தில் கி.பி. 1870 ல் இயற்கை எய்தினார்.

## உடன் பிறந்த தம்பி

மன்னர் பாஸ்கரரது உடன்பிறந்த ஒரே சகோதரர் இராஜா தினகர் ஆவார். தமது தமையனைப் போன்றே இவர் சகல கலைகளிலும் சிறந்து விளங்கினார். குறிப பாக இலக்கியம், இசை, ஓவியம், சிற்பம், ஆகிய நுண் கலைகளிலும், துப்பாக்கி சுடுதல், குதிரை ஏற்றம் ஆகிய வல்லமைக் கலைகளிலும் தனக்கு ஒப்பாரும், மிக்காரும், இல்லை என்னும் அளவில் உயர்ந்து நின்றார். மேலும் இவர் நல்ல எழுத்தாளருங்கூட. ஆங்கிலத்தில் அழகும், சுவையும் சொட்ட எழுத வல்லவர் 25-1-1897 ல் இராமநாதபுரத்திற்கு வருகை தந்த சுவாமி விவேகானந் தருக்கு பொதுமக்கள் சார்பாக வழங்கப்பட்ட ஆங்கில வரவேற்பு மடல் இவரால் வரையப்பட்டது. ஆங்கில கவிதைகளைப் பாடி இன்புறுவதிலும் கேட்போர் மகி ழும் வண்ணம் பியோனோவை இசைப்பதிலும் இவருக்கு பெரு விருப்பு இருந்தது. தமது சிறந்த சமஸ்கிருத மொழிப் பயிற்சியினால் வியாகரணம், தர்க்கசாஸ்திரம் ஆகியவைகளுக்கு பொருத்தமான புதிய விளக்கங்களை சொல்லும் பண்டிதராகவும் திகழ்ந்தார்.

1926 ல் இராமநாதபுரம் நகருக்கு வருகை தந்த சென்னை கவர்னர் கோசனிடம் நினைவுப் பரிசாக இவரே புனைந்த The Ballad of Boer war என்ற ஆங்கில கவிதை நூலை வழங்கினார் இவரதுமொழி பாண்டியத் துக்கு ஏற்ற சான்றாக இந்த நூலும் மற்றும் The Divine Tragedy. The Hidden Truth of Valmeeki, என்பன அமைந் துள்ளன. தமிழிலும் ''இந்துமத சூட்சமம்'' என்ற நூலை எழுதியுள்ளார்.

பத்து ஆண்டுகள் இராமநாதபுரம் சமஸ்தானத்தின் கௌரவ திவானாக திறமையாற்றிய பின்னர், கிறிஸ்த்தவ சமயத்தைத் தழுவி தமது எழுபத்திரண்டாவது வயதில் இயற்கை எய்தினார்.

தோற்றம் : 26-4-1871 மறைவு : 11-8-1942

உடன்பிறவாத தமையனார்

மன்னர் பாஸ்கரரது பெரிய தந்தையான பொன்னுச்சாமித்தேவரது மைந்தர் வள்ளல் பாண்டித்துரைத்தேவர் பாஸ்கரரை விட வயதில் ஓராண்டு முதியவர். எனினும் உள்ளத்தால், உணர்வால், உத்தமமான செயல்களினால் இருவரும் ஒற்றுமை உடைய இயல்பினராக விளங்கினர். கலை, இலக்கிய ஈடுபாடு இசைப் புலமை. மொழிப் பற்று சைவ சித்தாந்தம், வள்ளண்மை, ஆகிய அனைத்தும் இருவருக்கும் பொதுவானவை. பாண்டித்துரைத் தேவர் தமிழ் ஆராய்ச்சியில் மிகுந்த ஈடுபாடு கொண்டிருந்தார். இரவு, பகல் என்ற பேதமில்லாது தேவர் அவர்களது சோமசுந்தர விலாச மாளிகை இசைக் கலைஞர்களாலும், இன்தமிழ் புலவர்களாலும், நிறைந்து வழிந்தது.

கந்தபுராணம், கம்பராமாயணம், பெரியபுராணம், திருவிளையாடற்புராணம் என்று எத்தனையோ தமிழ் இலக்கியங்கள் பற்றிய வித்தகர்களது ஆராய்ச்சித் திறனையும் அருந்தமிழ் தேர்ச்சியையும் நயந்து கேட்டு வியந்து போற்றும் வண்ணம் இலக்கிய விருந்து அடிக்கடி அங்கு பரிமாறப்பட்டது. பட்டணம் சுப்பிரமணிய ஐயர், மகா வைத்தியநாத அய்யர், திருக்கோடிக்கா கிருஷ்ண அய்யர். தஞ்சை நாராயணசாமியப்பா, பூச்சி சீனிவாச ஐயங்கார் ஆகியோர் வள்ளல் அவையில் தேவகானம் பொழிந்துமகிழ்வித்தனர். வள்ளல் அவர்களால் இவர்கள் அனைவரும் பாராட்டும், பரிசும் பெற்றனர்.

பாண்டித்துரைத் தேவர் அவர்களது தன்னேரில்லாத தமிழ் பணியாக அமைந்தது 14-09-1901ல் மதுரையில் நிறுவிய தமிழ்ச்சங்கம். அந்நியர் ஆட்சியில் அவலத்துக்

குள்ளாயிருந்த தமிழ் மொழிக்கு இத்தகைய அரியாசனம் வழங்கிய பெருமை தேவர் அவர்களையே சாரும். தமிழகத்தின் பல பகுதிகளிலும் சிதலை வாய்க்குத்தப்பி சிதறிக் கிடந்த தமிழ் இலக்கிய ஏட்டுச் சுவடிகளை திரட்டி தமிழ்ச்சங்க வெளியீடாக அச்சில் கொணர்ந்தார். டாக்டர். உ. வே. சுவாமிநாதய்யர் போன்ற பெரும் புலவர்களது பதிப்புப் பணிக்கும் பாண்டித்துரைப் பெருமகனாரது பொருளுதவி பக்கபலமாக அமைந்திருந்தது. குறிப்பாக உ. வே. சா அய்யர் அவர்கள் பதிப்பித்த புறநானூறு, புறப்பொருள் வெண்பா மாலை, மணிமேகலை ஆகிய அரிய தமிழ் இலக்கியங்கள் நமக்குக் கிடைத்தமைக்கு தமிழ் உலகம் என்றும் தேவர் அவர்களுக்கு நன்றிக்கடன் பட்டுள்ளது. இன்னும் தமிழில் வந்துள்ள கலைக் களஞ்சியமான அபிதான சிந்தாமணி வெளிவருவதற்கு உதவியதும் தேவர் அவர்கள்தான்.

இவை தவிர்த்து தேவர் அவர்களே பல இலக்கியங்களிலிருந்து சிறப்பான பாடல்களைத் தொகுத்து பன்னூல்திரட்டு, சைவமஞ்சரி என்னும் இரண்டுதொகுதிகளாக வெளியிட்டுள்ளார். சிவஞானபுரத்தில் எழுந்தருளியுள்ள குமரைய்யா மீது காவடிச்சிந்து ஒன்றும் பாடியுள்ளார். அப்பொழுது மிகவும் பிரபலமடைந்திருந்த சென்னிகுளம் அண்ணாமலை ரெட்டியாரது காவடிச் சிந்துவுக்கு ஈடாக எளிமையும் இனிமையும் இணைந்த இசைப் பெட்டகமாக இந்தநூல் திகழ்கிறது.

> ''மாநூல் துகளறத் தேர் உக்கிர பாண்டியத்துரை
> தன்வாக்கால் சொன்ன
> தேனூரு காவடிச் சிந்துக்கு இணைவேறு எக்கவிஞர்
> செப்புவரே''

என்ற இந்த நூலின் பாயிரத்துக்கு ஏற்ப படிப்போர், கேட்போர் கிளர்ச்சி பெறுமாறு உள்ளது அந்தப் பாமாலை. தமது தந்தையைப் போன்றே தேவர் பெருமான் சிறந்த இசைக் கலைஞராகவும் விளங்கினார்.

தமது பள்ளித் தோழரான சீனிவாசன் இசைஞானச் செல்வம் கைவரப் பெற்றவராக இருப்பதை அறிந்து அவரை தமதுசெலவில் திருவையாறில் இருந்த பட்டணம்

சுப்பிரமணிய அய்யரிடம் அனுப்பி வைத்து இசைக் கலையை முறையாக கற்கச் செய்தார். பிற்காலத்தில் இந்த மாணவர் இசை உலகில் மிகச்சிறந்த லட்சண வித்துவானாக உயர்வு பெற்று பூச்சி சீனிவாச அய்யங் கார் என பேரும் புகழும் பெற்றதுடன் சேதுபதி மன்ன ரது அவையின் வித்துவானாகவும் விளங்கினார்.

இவ்விதம் பல துறைகளிலும், முன்னோடி மனித ராகத் திகழ்ந்த தேவர் அவர்கள், நாட்டுப் பணியிலும் தமது முத்திரையைப் பதித்துள்ளார். வெள்ளையரின் ஆதிக்கக் கொள்ளையை முறியடிப்பதற்கு அவர்களுக்கு எதிராகக் கொளும்பு - தூத்துக்குடி இடையில் சுதேசி கப்பல் போக்குவரத்தினை நடத்த திட்டமிட்ட வ.உ. சிதம்பரம் பிள்ளையின் உன்னத முயற்சிக்கு உறுதுணை யாக இருந்து ஒன்றரைலட்சம் ரூபாயை அவருக்கு வழங் கினார். இதன் காரணமாக கி.பி. 1906ல் சுதேசிக் கப்பல் தூத்துக்குடியிலிருந்து கொழும்புக்குப் புறப்பட்டது. வெள்ளையராட்சிக்குக் கட்டுப்பட்ட ஜமீன்தாராக இருந் தும் நாட்டுப்பற்று காரணமாக மிகத் துணிச்சலாக ஈடு பட்ட இந்தப் பெருமகனை விடுதலை வரலாறு புறக் கணித்துவிட்டது வேதனைக்குரியதாகும்.

பெறுதற்குரிய மானுடப் பிறவியை பல்லாற்றானும் பயனுள்ளதாக அமைக்க வேண்டும் என்ற குறிக்கோளில் நாட்டு மக்களுக்கும், மொழிக்கும் இசைக்கும், இடை விடாது முனைப்புடன் தொண்டாற்றிய இந்தத் தமிழ் மகன் தமது நாற்பத்து நான்காவது வயதில் புகழுடம்பு எய்தினார்.

| | |
|---|---|
| தோற்றம் : | மறைவு : |
| 21-3-1867 | 2-12-1911 |

## மன்னரது மக்கள்

பாஸ்கர சேதுபதிக்கு இரண்டு ஆண் மக்கள் பிறந்தனர். மூத்தவர் இராஜேஸ்வர முத்துராமலிங்கம், இரண்டாமவர் இராஜாராம் பாண்டியன்.

இராஜேஸ்வரர் பாஸ்கரருக்குப் பின்னர் இராமநாதபுரம் சமஸ்தானாதிபதியானார். ஆங்கிலம், தமிழ் ஆகிய இரு மொழிகளிலும், வல்லவராக விளங்கிய அற்புத மனிதர் இவர் கம்பீரமும் கவர்ச்சியும், இவரது தோற்றத்தில் கலந்து இணைந்திருந்தது. இவரைக் காணப் பெற்றவர்கள் ''மூவேந்தர்களில் ஒருவர் இவர்தானோ'' என எண்ணுமாறு அழகும் அருளும் பொருந்தியவராக விளங்கினார். தந்தையைப் போல சிறந்த வள்ளலாகவோ, சைவ சித்தாந்தியாகவோ இல்லாவிட்டாலும், சிறந்த தமிழ் புலவராகவும், புலவர்களைப் போற்றும் புரவலராகவும் விளங்கினார். மகாவித்துவான் ரா. ராகவ அய்யங்கார், மகாவித்துவான் உ. வே. சுவாமிநாதய்யர் ஆகியோர் சேதுமன்னரது சீதளக் கொடையால் செந்தமிழைச் செழிக்கச் செய்தனர். சிலப்பதிகார நூல் பதிப்பிற்கு இவர் உதவியதை, அந்த நூலின் முகவுரையில் உ. வே. சா. அய்யர் அவர்களது நெஞ்சின் நிறைந்த நன்றியினைக் காண முடிகிறது. மகாவித்துவான் இராகவ அய்யங்கார் தமது வஞ்சிமாநகர், என்ற ஆய்வு நூலினை மன்னருக்கு அர்ப்பணம் செய்துள்ளதிலிருந்து மன்னர் அவருக்கு உதவியதைத் தெரிந்துகொள்ள முடிகிறது இதே புலவர் இந்த மன்னரைச் சிறப்பித்து ஒருதுறைக் கோவை என்ற செந்தமிழ் இலக்கியத்தையும் யாத்துள்ளார். தமது தந்தையான பாஸ்கரரைப் போன்று நவராத்திரி விழாவினை ஆண்டுதோறும் கலைவிழாவாக இராமநாதபுரத்தில் சிறப்பாக நடத்தி புலவர்களுக்கும் கலைஞர்களுக்கும், பொன்னாடைகளும், பரிசுகளும் வழங்கி வந்த அந்த மன்னர் மதுரையில் உள்ள தமிழ்ச்சங்கத்தின் புரவலராக இருந்து பல்லாண்டுகாலம் தமிழ் வளர்ச்சிக்குப் பாடுபட்டார்.

மற்றும் இராமநாதபுரம் மாவட்டக் கழகத்தின் தலைவ ராகவும், பிராமணர் அல்லாதார் இயக்கத் தலைவராக வும், சென்னை மாநில ஜமீன்தார்கள் சுங்கப்பிரதிநிதி யாகவும் தமிழ்நாடு மேல்சபை உறுப்பினராகவும் இருந்து சிறப்பாக செயல்பட்டு வந்தார். 1914-18ல் நடந்த முத லாவது உலகப் போரில் நேசக் கட்சியினருக்கு உதவி யாக, "Ramnad" -என்ற பெயர் சூட்டிய விமானம் ஒன்றினை அன்பளிப்பாக வழங்கினார். தமது முப்பத் தைந்தாவது வயதில் காலமானார்.

தோற்றம் : 21-02-1873. மறைவு : 04-08-1929

## சில முக்கிய நிகழ்ச்சிகள்

| | | |
|---|---|---|
| பாஸ்கரரது தந்தை முத்துராமலிங்க சேதுபதி (இரண்டாவது) பிறப்பு | ... | 7-9-1841 |
| "முத்துராமலிங்க" சேதுபதி சுவீகாரம் | .... | 24-5 1847 |
| பாஸ்கரரது பிறப்பு | ... | 3-11-1868 |
| மன்னரது இளவல் தினகரர் பிறப்பு | ... | 26-04-1871 |
| தந்தை (இரண்டாவது) முத்துராமலிங்க சேதுபதி மறைவு | ... | 21-02-1873 |
| இளைஞர் பாஸ்கரர் இலங்கைச் சுற்றுலா முடித்து திரும்புதல் | .... | 27-02-1883 |
| மன்னரது மணவிழா இராமநாதபுரம் அரண்மனையில் | ... | 13-05-1888 |
| இராமநாதபுரம் சமஸ்தான நிர்வாக ஏற்பு | ... | 3-04-1889 |
| முதல் மகன் (மூன்றாவது) முத்துராம லிங்கம் என்ற ராஜராஜேஸ்வரன் பிறப்பு | ... | 3-06-1889 |
| இந்திய அரசு மன்னருக்கு மகாராஜா என்ற விருது வழங்கி சிறப்பித்தது | ... | 1891 |
| சுவாமி விவேகானந்தரை சிக்காக்கோ மாநாட்டிற்கு அனுப்பி வைத்தது. | ... | 1893 |
| இரண்டாவது மகன் ராஜாராம் பாண்டியன் பிறப்பு | ... | 7-08-1893 |
| நீதி மன்றம் இராமேசுவரம் இராமநாத சுவாமி ஆலய நிரந்தர நிர்வாகியாக மன்னரை நியமனம் செய்தது | ... | 22-09-1893 |
| சிவகாமு சுந்தர நாச்சியாருடன் மூன்றா வது திருமணம் | | 1896 |
| சுவாமி விவேகானந்தரை பாம்பன் துறை முகத்தில் வரவேற்றல் | ... | 20-01-1897 |
| சுவாமிகளுக்கு இராமநாதபுரத்தில் அரச வரவேற்பு வழங்கி தர்பாரில் கௌரவித்தல் | ... | 25-01-1897 |

| | |
|---|---|
| மதுரையில் வள்ளல் பாண்டித்துரைத் தேவர் தொடங்கிய நான்காவது தமிழ்ச் சங்க விழாவில் பங்கேற்பு .... | 14-09-1901 |
| மகாவித்வான் ரா. ராகவ ஐயங்கார் சுவாமிகளை மதுரை மாநகரில் பல்லக்கில் சுமந்த தமிழ்ப்பணி ... | 4-11-1901 |
| ஜகத்குரு சிருங்கேரி சங்கராச்சாரிய சுவாமிகளுக்கு இராமநாதபுரம் சமஸ்தானத்தை தானம் வழங்கியது | 1894 |
| கல்விடைக்குறிச்சி திருவாடுதுறை திருமடத்தில் மன்னர் மரணம் ... | 27-12-1903 |
| இராமநாதபுரத்தில் மன்னரது பூத உடல் தகனம் | 30-12-1903 |
| மன்னரது மனைவி சிவகாம சுந்தரி நாச்சியார் மரணம் ... | 1904 |
| மன்னரது உடன்பிறவாச் சகோதரர் பாண்டித்துரைப் பெருமன்னர் மறைவு .... | 2-12-1911 |
| மன்னரது தயார் முத்தாத்தாள் நாச்சியார் மறைவு .... | 1916 |
| மன்னரது சகோதரர் ராஜா. தினகரர் மறைவு .... | 11-08-1942 |

★ ★ ★

**நொச்சிவயல் ஊரணி மேற்குக் கரையில் உள்ள ஸ்ரீ பிரம்ம புரீசுவரர் கோயில் - கோபுரம் (இடப்பக்கக்) கல்வெட்டு.**

1) உ
2) சுபமஸ்து
3) சிவமயம்
4) ஸ்ரீமது ஹிரண்ய கெர்ப்ப யாஜி ரவிகுல
5) முத்து விஜய ரெகுநாத ராமநாதபுரம்
6) சமஸ்தானம் ராஜா சேதுபதி மஹாராஜா
7) ராஜஸ்ரீ பாஸ்கர சேதுபதி மகாராஜா
8) அவர்களது ஸ்ரீ மஹாராஜ ராஜஸ்ரீ ராணி
9) முத்துத்தாய் நாச்சியாராகிய முத்துத் திருவாயீ
10) நாச்சியாரவர்கள் ஆலயம் கட்டி 18
11) 91 ஸ்ரீ ஜூன் மீ 24 தேதி கர ஸ்ரீ ஆனி மீ
12) 10 உ புதவாரம் கிருஷ்ண பக்ஷம் திருதி
13) யும் உத்திராட நட்சத்திரத்தில் பகல் 12½
14) நாழிகைக்குமேல் 15 நாழிகைக்குள் கன்
15) யா லக்னம் கூடிய சுப முகூர்த்தத்தில்
16) இந்தப் பரமேசுரசுவாமி பிறதிஷ்டை
17) யும் கும்பாபிஷேகமும் நடப்பிவிக்கலாயிற்று உ

**இராமநாதபுரம் கோதண்ட ராமர் கோயில் கருவறைத் தென் சுவர்க் கல்வெட்டு :**

1) ஸ்வஸ்திஸ்ரீ சாலிவாகன சகாப்தம் 1825 ௵ சோப கிருது ௵
2) இராமநாதபுரம் சமஸ்தானம் ஆதி ஜெகநாதப் பெருமாள் கோவிலின் அபிமான
3) ஸ்தலமாகிய மேல்படி இராமநாதபுரம் ஸ்ரீ கோதண்ட ராம ஸ்வாமி கோவில் இந்த
4) கெற்பக் கிரகம் அர்த்த மண்டபம் செங்கல் கட்டிடமாகவும்
5) ஜீர்ணமாகவும் இருந்ததைப் பிரித்து கல்த்திருப் பணியாக ௸ இராமநாதபுரம்
6) சமஸ்தானம் ராஜா சேதுபதி ஸ்ரீமது ஹிரண்ய கெர்ப்ப யாஜி ரவி குல முத்து விஜய
7) ரெகுநாத மஹாராஜா ராஜஸ்ரீ ராஜ ராஜா பாஸ்கர சேதுபதி மஹாராஜா அவர்கள் சொந்த
8) பொருளுதவியால் செய்யப் பெற்றது.

**இராமநாதபுரம் அரண்மனை ஸ்ரீ ராஜராஜேஸ்வரி அம்மன் கோயில் விமானத்தில் உள்ள கல்வெட்டு[O].**

**சுபமஸ்து**

ஸ்வஸ்தி ஸ்ரீ சாலிவாகன சகாத்தம் 1815 விஜய துலா கிருஷ்ண பக்ஷம் பஞ்சமி பானுவாரம் மிருக சீரிஷ நட்சத்திரத்தில் ராஜா பாஸ்கர சேதுபதி மகாராஜா அவர்கள் ராஜராஜேஸ்வரிக்கு ஸ்வர்ண விமான பிரதிஷ்டை

---

O கி. பி. 1893ல் இந்தக்கோயில் விமானம் தங்க தகட்டால் வேயப்பட்டதை குறிப்பது.

## இராமநாதபுரம் சமஸ்தானம் மகாராஜா
## பாஸ்கர சேதுபதி அவர்கள்
## சமஸ்தான மகாவித்துவான் ரா. இராகவையங்கார்
## அவர்களுக்கு அளித்த உரிமை பத்திரம்

1901 ஞு நவம்பர் மீ 4உ மதுரை ஜில்லா இராமநாதபுரம் சமஸ்தானம் லேட் ராஜா முத்துராமலிங்க சேதுபதி மகாராஜா அவர்கள் புத்திரர் மறவ ஜாதி சிவமதம் ராஜா அந்தஸ்துள்ள ஸ்ரீமத் ஹிரண்ய கர்ப்பயாஜி ரவிகுல முத்து விஜய ரகுநாத ராஜா பாஸ்கர சேதுபதி மகாராஜா அவர்கள் இராமநாதபுரத்தில் இருக்கும் லேட் ராமானுஜ அய்யங்கார் புத்திரர் பிராமண ஜாதி வைஷ்ணவ மதம் வித்வத் ஜீவனம் சேது சமஸ்தானம் தமிழ் வித்வான் ஆர். இராகவ அய்யங்காருக்கு எழுதிக் கொடுத்த செட்டில் மெண்டு தஸ்தாவேஜு. ஒருவன் இவ்வுலகிற் செய்ய வேண்டிய தர்மங்கள் பலவற்றிலும் தனது தாய்ப்பாஷையின் பொருட்டுச் செய்யும் தருமம் அதிகம் சிறந்ததாகும். நமது சமஸ்தானம் தமிழையே தனக்குத் தாய் பாஷையாகவுடைத்தாதலால் எமது முந்திய ராஜாக்களெல்லாம் பரம்பரையாகத் தமிழ் வித்துவான்களுக்கு ஏராளமான உபகாரங்கள் செய்துள்ளது பிரசித்தமானது. சேர சோழ பாண்டியர்கட்குப் பின் சுத்த தமிழ் அரசர்களான சேதுபதிகளே தமிழ் பாஷாபிவிருத்தி செய்பவர்களும் தமிழ் வித்வான்களை ஆதரிப்பவர்களும் ஆகின்றார்கள் தமிழ்வித்துவான்களுக்குப் பரம்பரையாகப் பெற்றுவரக்கூடிய சாசுவத தர்மங்கள் செய்து வருவது இந்த சமஸ்தானத்தில் தொன்று தொட்டு வரும் வழக்கமே. இக்காலத்துக்குத் தக்க தமிழ் வித்வான்கள் மிகச் சிலரானமையாலும் அச்சிலருக்கும் கவர்மெண்டார் தக்க உதவியொன்றும் செய்யாமையாலும் நமது, புராதன தமிழ் பாஷையானது விருத்தியடையாது குறைகின்றது. இவ்வாறு நமது அருமைத் தாய்பாஷை குறைந்து கெடாதபடி பாதுகாக்குமிடத்து அப்பாஷையை நன்றாய்க் கற்றுத் தேர்ந்த வித்துவான்களே முதலில் பாதுகாக்கத் தக்கவர்களாகின்றார்கள். அவர்களாலேதான் அப்பாஷையின் உயர்வும் அருமையும்

பெருமையும் இனிமையும் புலப்படுவதோடு அப்பாஷை வளர்ந்து நிலைபெறுதலும் உண்டாவது ஆதலால் நமது சமஸ்தானத்தில் பிறந்து வளர்ந்து நமது சமஸ்தானத்து அன்ன பிரபாவத்தினாலேயே தமிழ்க் கல்வியில் பூரண பாண்டித்தியமுடையவராய் ராவ்பகதூர் பி அரங்கநாத முதலியார் முதலிய பல கல்வியில் பெரியோர்கள். மிகச் சிறப்பித்து எழுதிய மகாவித்துவானாய் அனேக வருடங் களாக நமது சேது சமஸ்தானத்துத் தலைமைத் தமிழ் வித்துவானாய் உள்ள தாங்கள் தமிழ் நூலுரைகள் முதலியன செய்கின்றதனாலும் தமிழிலுள்ள அரிய பெரிய விஷயங்களைப் பலர்க்கும் உபந்யசித்தலாலும் அனேகர்க் குப் பூர்வீகத் தமிழ் பாஷையைப் போதித்து வருதலா னும் கிடைத்தற்கருமையாயுள்ள பழைய தமிழ் நூல் களைத் தேடிச் சேர்த்தலானும் அவற்றைப் பரிசோதித்த லானும் வெளியிடுதலாலும் இன்னும் பல நன்முயற்சி களாலும் தமிழ் பாஷையை நன்றாய் வளர்ப்பவர்களா யும் நமது சமஸ்தானத்துச் செந்தமிழ் பரீக்ஷாதிகாரத் தலைவராயும், நமது சமஸ்தானத்து வித்வத் அங்கத்தில் பரம முக்கியராயும், இருத்தலை யாலோசித்து தங்கள் போன்ற பண்டிதர்களையும் ஐவேஜி இல்லாத கோவில் சத்திரம் பாடசாலை ஏழைகள் முதலியவர்களையும் பாதுகாப்பதற்கென்று தொன்றுதொட்டு ஏற்பட்டுள்ள நமது சமஸ்தானத்துத் தர்மமகமை ஐவேஜியினின்று தக்க தமிழ்வித்வானான தங்களுக்கு காலக்ஷேபாதிகளுக்குச் சௌகரியமாகத் திரவிய சகாயம் செய்து கொடுக்க வேண்டுவது இச் சமஸ்தானத்தின் முக்கிய தர்மமும், அதுவே. நமது முந்திய சேதுபதிகள் வழக்கமுமாதலால் தங்களுக்கு மாதம் 1–க்கு ரூ.50க்குக் குறையாமல் கிராண்ட் ஏற்படுத்தி ஷை தர்மமகமை ஐவேஜியில் தங்கள் ஆயுட் காலப் பரியந்தம் மாற்றப்படாத முக்கிய ஸ்திரமான ஐட்டமாக வைத்துத் தங்களுக்குச் செல்லாக்கி வரும்படி 1900 ஷு பிப்ரவரி மாதம் 21உ யில் நம்மால் ஷை தர்ம மகமைக்குப் ப்ரொஸீடிங்ஸ் எழுதப்பெற்று தாங்களும் மாசம் 1-க்கு 50ஆக மேற்படி மகமை ஐவேஜியில் பெற்று வருகின்றீர்கள். இப்போது நாம் நமது சமஸ்தான தர்மமகமை சம்பந்தமாக ஸ்திரமான ஏற்பாடுகள்

செய்து வருவதில் தாங்கள் ஷை மகமை ஐவேஜியின் தர்மத்தில் முக்கிய ஸ்திரமான ஐட்டத்தில் சேர்ந்தவர்கள் ஆதலாலும் தாங்கள் நமது சேது சமஸ்தான வித்வானாக இருத்தலைத் தவிர வேறு எந்த சமஸ்தானத்திலும் கல்விச் சாலையிலும் தங்கள் ஆயுள் கால பரியந்தம் சர்வீஸுக்குப் போகப்படாதென்று நம்முடைய உத்தரவுக்குத் தாங்கள் கட்டுப்பட்டு ஒப்புக் கொண்டிருப்பதினாலும் ஷை ப்ரொஸிடிங்ஸை அனுசரித்து மேல்கண்ட மாசமொன்றுக்கு ரூ. 50ஆக உள்ள கிராண்டினை பசலி ஒன்றுக்கு ரூ. 600ஆக வைத்து நம்முன்னோர் முறைமையை அனுசரித்து நம்மால் தங்கள் வித்தியா கௌரவத்தைப் பாராட்டித் தங்களுக்குச் சம்மானிக்கப்பட்ட பல்லக்கின் செலவுக்காக ஷை தர்ம மகமை ஐவேஜினின்றும் தங்களுக்கு கொடுத்துவர ஏற்பட்டபடி வருஷம் 1க்கு ரூ 35-ம் சேர்த்து ஆக பசலி ஒன்றுக்கு ரூ 635. அறுநூற்று முப்பத்தைந்து வீதம் ஷ்1311ம் பசலி முதல் தங்கள் ஆயுள் காலம் வரை தங்களுக்குச் செல்லாக்கி வரவேண்டிய ஸ்திரமான சம்மானமாக ஷை தர்மமகமை ஐவேஜியில் இதன்மூலம் ஏற்படுத்தியிருப்பதனாலே அதை ஷ் 1311ம் பசலி முதல் பசலி தோறும் தங்கள் ஆயுள் காலம் வரை மதுரை டிஸ்டிரிக்ட் ராமநாதபுரம் சமஸ்தானம் ராமநாதபுரம், பரம்பக்குடி பாம்பன் இந்த டிஸ்டிரிக்ட்களுக்குச் சேர்ந்த கஸ்பா ராமநாதபுரம் தாலுகா தர்ம மகமை ஐவேஜியினின்று சமஸ்தானம் திவான் டிரஸ்டி அவர்களிடம், சமஸ்தானத்தை அனுபவிக்கிறவர்களிடமும் சமஸ்தானம் லெஸ்ஸீகளிடமும், தாங்கள் நேரில் வசூலித்து உபயோகித்துக் கொள்ளத் தாங்களுக்குச் சர்வ வித அதிகாரமும் இப்பத்திரத்தின் மூலம் நம்மால் கொடுக்கலாயிற்று. ஷை தாலுகா ஐவேஜியினின்று தங்கள் தர்மமகமை ஆயுள்காலம் வரை பசலிதோறும் தங்களுக்குக் கிடைக்கவேண்டிய இந்த ரூ 635 ம் தாங்கள் வசூலித்துக் கொள்ளுகிற விஷயத்தில் சட்டப்படிக்குள்ள சகல நடவடிக்கைகளையும் தாங்களே நடத்திக் கொள்ள சர்வ வித அதிகாரமும் தங்களுக்கு இதன் மூலம் கொடுத்திருக்கின்றோம். ஷ் பசலி முதல் பசலி தோறும் ஷை தாலுகா தர்ம மகமை ஐவேஜியில் ரூ. 635 தங்கள் ஆயுள் கால பரியந்தம் தங்களுக்கு முந்தின ஸ்திர பாத்தியமாய் இருக்க

வேண்டியது. இந்த சம்மானம் யாராலும் தங்கள் ஆயுள் காலம் வரை மாற்றப்படாது ஸ்திரமாக ஷை தாலுகா தர்ம மகமை ஐவேஜியில் ஏற்படுத்தப் பெற்றிருக்கிறது. ஷை பசலிக்கு ஜூலை ஆகஸ்டு இந்த இரண்டு மாசங்களுக்கும் மாசம் 1க்கு ரூ. 50 வீதம் நமது சமஸ்தானம் ராஜசிங்க மங்கலம் தாலுகா தர்ம மகமை ஐவேஜியினின்று ஷை 1311-ஆம் பசலிக்கு ரூ 535ம் இனி வரும் பசலிகளுக்கு பசலி 1க்கு 635ம் ஆகத் தாங்கள் சமஸ்தானம் திவான், டிரஸ்டி ஆகியவர்களிடமும் சமஸ்தானத்தை அனுபவிக்கிறவர்களிடமும் சமஸ்தானம் லெஸ்ஸீகளிடமும் பெற்று வருகிறது. தங்கள் ஆயுள் காலம் வரை நமது சேது சமஸ்தான வித்துவானாக இருத்தலுடன் நமது முதன்மையான சகாயத்தினால் ஏற்படுத்தப்பெற்றிருக்கிற மதுரைத் தமிழ்ச்சங்கத்தில் தங்களுக்கு இஷ்ட காலம் வரை நம்முடைய அனுமதியின் பேரில் எடிட்டராக இருப்பதில் அவ்வேலைகளையும் தங்கள் வித்தையின் பிரகாசத்திற்கும் தமிழ் அபிவிர்த்திக்கும் ஏதுவாகிய இதர வேலைகளையும் பார்த்து அவைகளுக்குரிய பிரதிபிரயோஜனங்களையும் சம்மானங்களையும் ஷை சங்கத்திலும் பிறரிடத்திலும் தாங்கள் அடைவதில் இதனால் யாதொரு தடையுமில்லை நமது சமஸ்தானம் திவான் டிரஸ்டி அவர்கட்கும் மேற்குறித்த விவரங்களைக் கண்டு தங்களுக்குப் பத்திரம் எழுதிக் கொடுத்துவிட்டதைத் தெரிவித்து ஷை யார்களை இனிமேல் நேரே ஷை பசலி முதல் பசலி தோறும் ஷை தொகையைத் தாலுகா தர்ம மகமையினின்று முதன்மையாகத் தங்கள் ஆயுள் காலம் வரை தங்களுக்குச் செல்லாக்கி வரும்படிக்கு யாதாஸ்துகளும் எழுதி அனுப்பியிருக்கிறோம்' இந்தப் படிக்கு நாம் நமது மனோராஜியில் எழுதிக் கொடுத்த செட்டில்மெண்டு தஸ்தாவேஜு.

# பாஸ்கர சேதுபதி மன்னர் இயற்றிய பதிகம்

# திரு ஆலவாய்ப்பதிகம்

பூமிநான் முகனும் புனிதமா லவனும்
போற்றிநின் றடிதொழும் பரம
சோமசுந் தரனே சுருதியின் முடிவே
சூழ்வினை தீர்த்தெமை யாள்வாய்
வாமியின் பாகா வழித்துணை மருந்தே
வானவா வளர்பிறை சூடி
ஆமையோ டுடனே ஏனக்கோ டணியும்
ஆலவா யமருமென் னரசே. 1

கற்பகக் கனியே கருணையங் கடலே
கயல்விழி யுமையொடு கலந்து
பொற்புற வுலக மதனினைப் புரக்கும்
பூரண புராதன முதலே
சிற்பர வெளிக்குச் செழுஞ்சுடர் மயமாய்த்
திகழும்நற் றேவுனை யறிய
அற்பமாம் அறிவோர்க் காகுமோ அறைவாய்
ஆலவா யமருமென் னரசே. 2 ✓

வருடமுப் போகம் வளருமா மதுரை
மன்னவா மாகர்நா யகனே
குருடனும் ஒருவன் குணதிசை யுதிக்கும்
குவலய வொளியினைக் காண
மருடனால் வருந்தும் வகையினை யடைந்தே
வள்ளலே மகிழவுறக் காணேன்
அருள்தர வேண்டும் அடியேனா னுய்ய
ஆலவா யமருமென் னரசே. 3

மெய்யதாம் நின்னை மறந்துமே வீணாய்
வேள்மலர் பாணத்தால் வெந்து
பொய்யதாம் மாதர் புலைமயக் காழ்ந்து
புகலிட மின்றிமற் றொன்றுஞ்
செய்யவே நினையாத் தீமையை மறவாச்
சிந்தையைச் செய்வதென் றுரைப்பாய்
அய்யனே அமரர் அனுதினம் பரவும்
ஆலவா யமருமென் னரசே. 4

மாமனாய் வந்து மருமகன் றனக்கு
வழக்கினை யுரைக்குமென் வாழ்வே
மாமனாய் இருந்தும் மற்றவ ரிடத்தில்
வழக்கது வழங்குத லழகோ
மாமனா யிருந்த வணிகனைப் போலிவ்
வறியனை மதித்திடல் வேண்டும்
ஆமனே அரியே அசுரர்க ளறியே
ஆலவா யமருமென் னரசே. 5

மீனலோ சனியை மேவுமென் பரனே
மேன்மையாம் வழுதியன் வேண்ட
கானகத் துறையும் பாம்புடன் புலியும்
காணவே தூக்கிய காலைத்
தானமே மாறத் தந்திடு மீசன்
தரணியோர் புகழ்தடா தகையாள்
ஆனன மலருக் கருக்கினே னப்பா
ஆலவா யமருமென் னரசே. 6

மந்திர மாகும் நின்றிரு நீற்றை
மதியுடன் னணிபவர் மகிழ்ந்து
சுந்தர நின்னைத் துரியமுந் துரியா
தீதமு மாகவே துணிந்து
கந்தரந் தன்னிற் கறைதனை நிறுத்தும்
கடவுளே களவிள ராசி
அந்தியும் பகலும் போற்றவே யருள்வாய்
ஆலவா யமருமென் னரசே. 7

பழமறை தேடும் பரமனே பரவும்
பத்தர்கட் கருளுந் தற் பரனே
தழற்பிழம் புருவாய்த் தாமரைக் கண்ணன்
தருக்கினைத் தணித்ததோர் தருவே
கழற்றொழு துய்யக் கடையனேன் கவலை
கொள்வதைக் கடைக்கணித் தருள்வாய்
அழலுமே யரக்கன் றன்றனக் கிரங்கும்
ஆலவா யமருமென் னரசே. 8

மாணிக்க மலையே மரகதப் பிழம்பே
மறையவர் மகிழும்நற் கொழுந்தே
காணியின் னரசி நாணவே செய்த
காட்சியே கவுனியின் மதலை
வாயாற் சுட்டி பகர்ந்திடும் பரம
பாண்டியன் புதல்வியென் றறிய
ஆணிமுத் துயரும் அணிகளு மீந்த
ஆலவா யமருமென் னரசே 9

வேதியாம் வேய்மாலைதான் தான்சூடும்
வேந்தனே வீரனே விமலா
ஓதியே உந்தன் உயர்வுறும் நாமம்
உய்யவே உறுதியாய் உணர்ந்தேன்
சோதியே சுடரே தூய்மைசேர் சுருதி
தொடரொணாத் தோடுடைச் செவியா
ஆதியே அரசே ஆனந்த மலையே
ஆலவா யமருமென் னரசே[0]. 10

---

0 பாடல்களை உதவியர் திரு. க. சி. கமலையா அவர்கள்
சென்னை-90

## டாக்டர். உ. வே. சாமிநாதையரவர்கள்

(அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்)

பயன்மிகுந்த தமிழ்வளர்க்கும் பாண்டியபூ
 பதியேதற் பரனைப் போற்றும்
செயல்மிகுத்த திடமனத்துச் சிவபத்த
 சிகாமணியே செல்வம் ஓங்கி
இயல்மிகுத்த முகவையிற்பாஸ் கரசேது
 பதியரசே யானின் றோதும்
மயல்மிகுத்த மொழிவினவி மனமகிழ
 எனக்கபயம் வழங்கு வாயால் (1)

சீர்பூத்த மணிமுடிநீ அணிதினத்தை
 வரைந்திடுபத் திரிகை என்பால்
நேர்பூத்த நினதன்பி னொடுமுறப்பெற்
 றகமகிழ்வு நிறைந்தேன் அந்நாள்
பேர்பூத்த அவண் அடையச் செயுங்காலம்
 எனையணுகாப் பெற்றி யாலும்
ஏர்பூத்த விடுமுறைநாள் இன்மையினும்
 துயரமொடீண் டிருந்தேன் மன்னோ. (2)

ஆனாலும் மன்பதைகள் முகவனசங்
 களைமலர்த்தி அமைதி சான்ற
தேனாலுங் கவிவலவர் இரவகற்றி
 ஒளியெங்கும் சிவண வீசி

---

1-32 ஒரு கடிதப்பாடல்கள். முகவை - இராமநாதபுரம்

2. பாஸ்கர சேதுபதியவர்களுக்குப் பட்டாபிஷேகம் நடைபெற்றபோது ஐயரவர்களால் அதற்குப் போக முடியவில்லை. அதைக் குறிப்பிட்டுச் சொன்னது இது.

3. மன்பதைகள்-மக்கள் தேன் ஆலும் - தேன்பரவிய, இரவு-இரத்தல்; இராத்திரி என்பது தொனிப் பொருள். சிவண-பொருந்தபான் நாலு.

மீனாலும் பொழில்முகவை வேந்தேநீ
வீற்றிருந்து விளங்கும் தன்மை
யானாலு திசையினரும் சொலக்கேட்டுக்
கண்டவன்போல் இருந்தேன் மாதோ (3)

குலமுதல்வ னோபருதி ரகுநாத
சேதுபதிக் கோமா னாதிப்
பலமுதல்வ ரோநின்றன் முன்னோர்பாஸ்
கரசேது பதிவேந் தேஇத்
தலமுதலாம் முகவைபதி நிகரருளு
னாகரன்நீ தாணு வாய
நலமுதல்நீ வழிபடுந்தே வெனினின்சீர்
எவராலும் நவிறற் பாற்றோ. (4)

உரவலரும் எழுபரிசேர் ஒருருளை
இரதமொன்றூர்ந் துழிதந் தென்றும்
இரவலரை வருத்திமதி யொளிகுறைக்கும்
வெங்கதிர்நிற் கிணையாங் கொல்லோ
புரவலர்சி காமணியே புலவர்கள்சிந்
தாமணியே புகழின் வைப்பே
விரவலர்தம் கோளரியே பாஸ்கரசா
மிப்பெயர்கொள் விறற்செவ் வேளே. (5)

---

4 பருதி-சூரியன். முகவை பதி-நின் ஊர் இராமநாத புரம். தாணு-சிவபெருமான்.

5. உரவு வலிமை. ஒரு உருளை – ஒற்றைச்சக்கரம். உழிதந்து-திரிந்து இரவலரை வருந்தி-இரவில் ஒளியை மறைத்து, தாமரையை வருந்தச் செய்து; இரப்போரை வருந்தச் செய்து என்பது தொனிப்பொருள் மதி-சந்திரன்; அறிவு என்பது தொனிப் பொருள், வெங்கதிர். வெவ்விய சூரியன், விரவலர்-பகைவர்.

பாராமல் இருந்தனனென் னெனைநினையேல்
இவண்வந்து பார்ப்பான் என்றுன்
ஏராரும் உளத்தினிடை எண்ணுகயான்
நினக்கனுப்பும் இணையிலாத
சீராரும் ஒருபத்துப் பாட்டிரண்டும்
வந்தசெய்தி தெரிந்திலேனால்
கூராரும் படைக்கரபாஸ் கரசேது
பதிஇரவி குலச்சிங் கேறே. (6)

முன்னர்மகிழ்ந் தியானனுப்பும் கடிதங்கள்
அவண்போதா மூறைமை யானோ
பின்னரவற் றினைப்பார்க்க அவகாசம்
சிறிதுமிலாப் பெற்றி யானோ
நன்னரெழு தியனுப்பா திருந்தனைமற்
றென்றேனும் நான்எண் ணாது
மன்னர்புகழ் அரசேநீ மறுவிரவா
மொழியையென மதித்திட் டேனே. (7)

அகவையின்நீ இளமையயா யினும்அறிவின்
முதியையென ஆன்றோர் சால
உகவையினோ டியம்புறக்கேட் டகமகிழ்ந்து
குறையனைத்தும் ஒழித்திட் டேனால்
முகவைநகர் வீற்றிருந்து செங்கோலுய்த்
துயிர்வருக்கம் முழுது மன்பால்
மகவையளித் திடுந்தாயிற் புரந்திடுபாஸ்
கரசாமி மன்ன ரேறே. (8)

---

6. பத்துப்பாட்டு இரண்டு - பத்துப்பாட்டு என்னும் நூலின் இரண்டு பிரதிகள்.

7. எழுதிய கடிதத்துக்கு விடை வராமையைக் குறித்த படி, மறுமொழி அனுப்பவில்லை; மறுவிரவா மொழியை உடையாய் நீ என்று தெரிந்துகொண்டேன்; மறு-குற்றம்.

8. அகவையின் - பிராயத்தில், உகவை - மகிழ்ச்சி.

நக்காலம் நுகர்ந்தும்பர் தமைக்காத்த
அமரனடி நளினத் தன்பு
முக்காலத் தினுமுடையாய் அரசாட்சி
கொளத்தொடங்கும் முதனா ளாய
அக்காலத் தனுப்பின்நினக் கவகாசம்
இராதெனவீ தனுப்பி லேனால்
எக்காலத் திலுமெனைப்போல் வாரிடத்தன்
புடையையென்ப தெனக்குண் டன்றே (9)

என்பாட்டைப் பலபாட்டால் இசைப்பதனுக்
கெனக்கெண்ணம் இருந்தும் சால
இன்பாரும் நினதமையம் எப்படியோ
எனவஞ்சும் ஏது வாலே
முன்பான்ற பெரியரருள் ஒருபத்துப்
பாட்டுரையை முறையின் உய்த்தேன்
பின்பாடல் ஒருபஃதே அனுப்பினனால்
நோக்கிமகிழ் பெறுவை யென்றே (10)

அருளினால் பெருங்கடலை ஈகையால்
பசுமுகிலை அளவாக் கல்வித்
தெருளினால் பணியரசைப் புரவினால்
திருமாலைச் சிறுப மிக்கும்
வெருளினால் அறக்கடவுள் தனைவென்று
நன்றுபுரி மேம்பா டுற்ற
பொருளினால் விளங்குறுபாஸ் கரசேது
பதிமகிழ்வு பூத்து வாழ்க. (11)

---

9 நக்கு — மகிழ்ந்து. ஆலம் - நஞ்சை, அமரன் - சிவ பெருமாள், என்பது - என்னும் எண்ணம்.

10. என்பாட்டை — என் உழைப்பை உய்த்தேன் - அனுப்பினேன், பாடல் ஒருபஃது என்றது, இந்தக் கடிதப் பாடல்கள் பத்தையும்.

11 இதுமுதல் 640 வரையில் உள்ளவை என்று ஒரு கடிதப்பாடல் பணியரசை — ஆதிசேடனை, புரவு - காக்கும் தொழில், வெருள் - அச்சம்.

பூமணக்கும் பொழில்முகவைப் புரிமணக்கும்
தவப்பேறாய்ப் போந்து கற்றோர்
தாம்மணக்கும் பெருமையுடைச் சபைமணக்கும
பிரசங்கம் சாற்றல் மேவிப்
பாமணக்கும் சுவைத்தமிழ்ப் படிமணக்கும்
படிபரிபா லனஞ்செய் தான்றோர்
நாமணக்கும் புகழ்மிகுத்த நலமுறுபாஸ்
கரசாமி நரேந்த்ர கேண்மோ (12)

வேண்டுவார் வேண்டுவன அளித்திடுபே
ரருளாளன் விழையத் தோன்றி
வேண்டுவார் வேண்டுவன அளித்திடுபாஸ்
கரசாமி வேந்தர் வேந்தே
ஈண்டுவார் கடலுலகம் முழுதுமதித்
திடும்பெருமை ஏந்த லேயின்
றீண்டியான் சிலமொழிசற் றியம்பிடுதற்
கவகாசம் ஈவாய் மன்னோ (13)

மாமேவு பலகலைகள் வாய்ந்துமறு
வின்றிவளர் மதியோ டுற்றுத்
தேமேவு பல்லுயிரும் இனிதுபுரந்
தளிக்குமொளி சிவண லாலே
நாமேவு பருதியினை வென்றிடுபாற்
கரசாமி நரேந்தி ராவின்
பாமேவு தொடையுமலர்த் தொடையுமணி
புயச்சேது பதியே கேண்மோ (14)

---

12. இப்படி - இந்தப் பூமியில்
13-14 இவை மற்றொரு கடிதப் பாடல்கள்.

கலைகள், சாத்திரங்கள், சந்திர கலை, மறு-குற்றம், களங்கம், மதி-அறிவு, சந்திரன், சிவணலால்-பொருந்துவதால், பருதியினை-சூரியனை, சூரியன், சில கலைகள் வாய்ந்து மறுவோடு வளர்தலும் தேய்தலு முடைய மதியேற்றுவதால் அதனை இவன் வென்றவனானான் என்றபடி. பாமேவு தொடை-பாமாலை.

வலம்பூத்த திருவால வாயுடையா
 ரொடுந்தமிழின் வகைமை ஆய்ந்த
புலம்பூத்த நக்கீர னார்முதலோர்
 நவின்றருளும் பொலிவு பெற்ற
பலம்பூத்த முருகாற்றுப் படையாதி
 ஒருபத்துப் பாட்டை யுஞ்சீர்க்
குலம்பூத்த புகழ்நச்சி னார்க்கினியர்
 உரையுடனே குலவ ஆய்ந்தே (15)

(கட்டளைக் கலித்துறை)

கார்பெற்ற தொகையும் பன்னாள்
 பிரிந்திட்ட காதலன் றன்
தேர்பெற்ற கற்புடை மங்கையும்
 செய்ய செழுஞ்சுடரை
நேர்பெற்ற தாமரை யும்போல்
 மகிழ்வு நிறைந்தனமால்
சீர்பெற்ற பாஸ்கர சாமி
 மகீப சிகாமணியே! (16)

வணங்கா முடியினை என்றே
 நிதமும் மகிழ்ந்தறிஞர்
கணங்கா தலித்துச் சொலுமால்
 நினைஉட் கசிந்துபல்கால்
உணங்காது நித்தம் பணியாற்
 பணிவுற் றெழுகுவைநீ
குணங்காத வித்திடு பாற்கர
 சாமி குலோத்துங்கனே (17)

---

15. இதற்குமேல் உள்ள பாடல்கள் கிடைக்கவில்லை.
புலம்-அறிவு

17. அறிஞர் கணம் நீ வணங்கா முடியை உடையாய் என்று சொல்லும்; ஆனால் நீயோ நாள்தோறும் சிவ பெருமானை வணங்குகிறாய்.
உணங்காது வருந்தாமல், பணியான்-பாம்பை அணிந்த சிவபெருமானை.

## அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

சீர்பெற்ற நினதிசைமுன் கேட்டுவிழி
　　களைப்பழித்த செவிகள் இந்நாள்
நார்பெற்ற நினைக்கண்டவ் விழிகள் மகிழ்
　　வடைந்தபின்நீ நவிலும் தூய
கீர்பெற்று மகிழபெற்றவ் விழிகளினந்
　　குணம்வியக்கும் கெழுமு வாசத்
தார்பெற்ற விறற்புயப்பாற் கரசாமி
　　மகிபநலஞ் சான்ற கோவே. (18)

## (கட்டளைக் கலித்துறை)

பண்ணிற் சிறந்த கவிவா
　　ணரைப்பரி பாலனஞ்செய்
தெண்ணிற் சிறந்த அறங்காத்
　　தெவர்க்கும் இதமளித்து
விண்ணிற் சிறந்தொரு பாற்கரன்
　　நாளும் விளங்குதல்போல்
மண்ணிற் சிறந்தொரு பாற்கர
　　பூபதி வாழியவே. (19)

## (பதினான்குசீர் ஆசிரிய விருத்தம்)

சீர்பெற்ற பலகலைகள் தேர்ந்தவர்கள் குழுமியே
　　சிந்தையில் மகிழ்ந்து மேவும்
திருவார்ந் தவற்றினது தெய்வவுரு மேவிடல்
　　சிவணவிசை வீணசாலப்
பேர்பெற்ற புத்தகம் எழுத்தாணி இவை நன்கு
　　பெய்தொடிக் கையில் மேவ
பெருமைகொள் மகாநவமி ஏழாந் தினத்தழகு
　　பெற்றபக லிடைமு கலையின்

---

18. முதலில் நின்புகழைக் கேட்ட செவிகள் உன்னைப் பாராத விழிகளைப் பழித்தன. இசை புகழ் நார்-அன்பு கீர்-மொழி.

19 1892-ஆம் ஆண்டு நவராத்திரி விழாவுக்கு இராமநாதபுரம் போயிருந்தபோது பாடியவை. இது முதல் மூன்று கவிகள்.

ஏற்பெற்ற கல்விவளம் எளிதருள்செய் யக்காட்சி
. இயைந்தருளும் அமல வாழ்வே
இராசரா சேச்வரி எம்போலி யர்க்கெய்ப்பி
னிடைவைப்பை அனைய சுகுணன்
தார்பெற்ற திண்புயன் சாதுஜன பாலகனு
தாரமந் தார மனையான்
தனைநிகரில் பாஸ்கரச் சாமிமகி பதியினும்
தழைத்தோங்க அருள்செய் வையே (20)

(அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்)

முற்காட்சி யாழ்நிகழ்ந்த இன்பமதற்
கொப்புயர்வு மொழியி னில்லை
பிற்காட்சி யால்நிகழ்ந்த இன்பமுமற்
றேயெனினும் பேசிரண்டு
நற்காட்சி தம்முளொன்றும் மற்றொன்றை
ஒக்குமென நவில லாமல்
சொற்காட்சி உறுமுகவை வாழ்வுறுபாஸ்
கரசாமிச் சுகுண மாலே. (21)

மாசிகந்த பெரியருறை துறைசையிலம்
பலவாண வள்ள லாய
தேசிகனீ இவண்விசயம் செய்வை இனன்
வாரமெனத் தெரிப்ப யான்போந்
தேசிகந்த விருப்பினொடும் நின்வரவை
எதிர்நோக்கி இருந்தேன் அம்மா
ஆசிகந்த புலவர் தமைப் புரந்திடுபாஸ்
கரசாமி அரச ரேறே.

---

22. இது முதல் எட்டுப் பாடல்கள் சேதுபதி மன்னர் திருவிடை மருதூருக்கு வந்தபோது பாடியவை.

இவான் வாரம் - ஞாயிற்றுக்கிழமை.

அருளாளன் அருளாளன் கண்மணிகண்
மணிபூதி அமைந்த பூதி
வெருளாத சிவசமயஞ் சிவசமயம்
என்றியிலும் மேன்மை பூண்ட
தெருளாளா முகவையிற்பாஸ் கரசாமிச்
சேதுபதிச் செல்வா இன்று
பொருளாரும் குணதிசைநின் றுறலினறிந்
தேனின்பேர்ப் பொருளி தென்றே (23)

(கட்டளைக் கலித்துறை)

நின்னாட்டை ஆண்ட வரகுண
தேவரிந் நீள்பதியில்
அந்நாள் இருந்தர சாண்டனர்
என்பர்மற் றுகையினால்
இந்நாள் இதனிடை நீயுறல்
சால இயைபுடைத்தே
எந்நாடும் போற்றுறு பாஸ்கர
சாமி இறையவனே. (24)

(அறுசீர்க் கழிநெடிலடு ஆசிரிய விருத்தம்)

வலம்பூத்த இடைமருதம் வாழ்ந்தருளும்
பெருங்கருணை வாரி தன்னை
நலம்பூத்த புகழ்மிகுபாஸ் கரசாமி
சேதுபதி நரேந்தி ரன்றான்

---

23. அருளாளன் அருளாளன்–அருளாகிய சக்தியை ஆள்பவனே கிருபையையுடைய கடவுள், கண்மணி கண்மணி-ருத்திராட்சமே கண்ணிலுள்ள மணியைப்போன்றது பூதி அமைந்த பூதி – விபூதியே பொருத்தமான செல்வம். சிவ சமயம் சிவ சமயம்-சிவனை வழிபடும் சமயமே மங்கலமான சமயம் குணதிசை-கிழக்கு. கிழக்கிலிருந்து வருதலால் சூரியன் என்னும் பொருளையுடைய பாஸ்கரன் என்பதன் பொருளைத் தெரிந்து கொண்டேன்.

24. இந்நீள் பதி என்றது திருவிடைமருதூரை இயைபு பொருத்தம்,

புலம்பூத்த அன்பினொடு போற்றிவழி
படற்குநிகர் புகலின் முன்னம்
பலம்பூத்த வரகுணபூ பதியன்பின்
வழிபடலைப் பகர லாமால். (25)

அன்றியும்பாஸ் கரசாமி அண்ணலிடை
மருதமடைந் தன்பிற் போற்றல்
துன்றிவர குணன்பெரும்பே றுற்றதையெண்
ணுபுதருக்கித் துலங்கு திங்கள்
ஒன்றியவுள் மகிழ்ச்சியறிந் தொருபருதி
இவண்மருவி உயிர்கட்கெல்லாம்
இன்றியமை யாதநலம் அருண்முதலை
வழிபடலென் றியம்ப லாமால். (26)

பின்னுமஃ தொருமதனை மதனழித்தோ
னதுகருணைப் பிழம்ப தாகி
மன்னுமெழில் திருமேனி முழுதையுமா
டியினன்றி மற்றை யோர்பால்
முன்னுநல முறக்காண்டல் தனக்கரிதா
தலைப்பருதி முன்னி முன்னி
மின்னுமுரு வேறுகொடப் பெயர்கொடுவந்
தானெனவும் விளம்ப லாமல். (27)

திருவால வாயதனில் உயர்ந்ததிடை
மருதெனவே தெளிந்தோர் சொல்லும்
பொருவாத உரையுண்மை யானுமறிந்
தேனெனினும் பொருவில் நின்னோ

---

26. பாஸ்கரன் என்பது சூரியனைக் குறிப்பது. அதனை எண்ணிப் பாடியது இது.

27. மதனை மதன் அழித்தோன் - காமனது வலிமையை அழித்த பெருமான். இறைவனுடைய கண்ணாக உள்ள சூரியன் சிவபெருமானது திருஉருவத்தை அப்பெருமான் கண்ணாடியின் முன் நின்றபோது காணமுடியுமேயன்றி வேறு வகையில் காண முடியாது; ஆதலால் உருவத்தைத் தரிசிக்கத் தனியே ஒருருவெடுத்து வந்தது போல் இவ்வரசர் இருந்தார்.

டொருவாது நெடுநேரம் இருந்தளவி
மகிழ்ந்திடவீ துளுற்று மாற்றால்
தருவாருங் கொடைக்கரப்பாஸ் கரசாமி
சிவபத்தி சான்ற கோவே. (28)

பயன்மருவு திருத்துறைசை மாநகரும்
அதைச்சூழ்ந்த பல்லூர் தாமும்
நயன்மருவு மத்தலத்தில் உறையரனும்
பெறுநாம நலத்தை நோக்கின்
இயன்மருவு நீவருதற் கியைபுடைய
எனத்துறைசை இருக்கும் எங்கள்
புயன்மருவு கொடையுறுமம் பலவாண
தேவனன்பிற் புகன்றான் மன்னே. (29)

திருத்தில்லை தனைப்புண்ட ரீகபுரம்
எனவெவரும் செப்பல் மெய்யே
மருத்துன்றும் அலங்கலணி புயமுடைப்பாற்
கரசாமி மன்ன வாஎம்
கருத்தொன்றும் நினைக்கண்டு நகரமிது
மிகவிளங்கும் கவினாற் சால
உருத்துன்றும் இதைப்புகழ்கோ இதைவயக்கும்
நினைப்புகழ்கோ உரைப்பாய் நீயே. (30)

(வெண்பா)

ஆண்டின் இளையை அறிவின் முதியையென
ஈண்டறிந்தேன் தென்முகவை ஏந்தலே - பூண்டதிறல்
வேற்கர தில்லை விளங்குமர னைப்போற்றும்
பாற்கர சாமிமகி பா. (31)

---

30. பாஸ்கரன் வருதலால் புண்டரீகபுரம் சிறப்படைந்தது: புண்டரீகம் - தாமரை.

இதுவும் அடுத்த செய்யுளும் சேதுபதி மன்னர் சிதம்பரத்திற்கு வந்த சிறப்பைப் பாராட்டியவை.

(அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்)

பொருவாத நயசுகுணம் மிகுத்திடுபாற்
கரசாமி பூபன் என்றும்
ஒருவாத வளமிகுத்த பெருந்துறையின்
அருட்கடலை உவந்து போற்றல்
திருவாத வூரரெனும் அமைச்சரைமுன்
பிவராண்ட திறத்தை எண்ணி
உருவாரும் ஒருவழுதி தானுமடைந்
துவந்தேத்தல் ஒக்கும் மன்னோ. (32)

## சோதுகுடி புலவர்
## எம். கே. எம் அப்துல் காதிர் ராவுத்தர்

1) அறந்தழைப்பத் தமிழ்தழைப்ப அருள்தழைப்ப
தெருள் தழைப்பச்
சிறந்தமுத்து ராமலிங்க சேதுபதி செயுந்தவத்தால்
கறந்த செழும் பாலனைய கரங்குலவும் இளங்கதிர்
போல்
பிறந்தனனோர் குமரன் அவன் பெருமையெவர்
பேசாரே !

2) பவப்பனியும் புலவர்கலிப் பகையிருளும்
பயந் தொளிப்பத்
தவச்சலசச் செழுமலரும் தமிழ்மாதின் அகமலரும்
உவப்புடனே விரிந்து இலங்க உதித்த அதன் சிறப்பு
அனைத்தும்
எவர்க்கும் அறிவுறுத்தும் வகை இசைத்தனர்
பாற்கரன் எனும் பேர்.

3) ஆங்கிலமும் ஆரியமும் ஆந்திரமும் அறியினமா
ஓங்கிய செந்தமிழமுதை உட்கொண்டு வளர்வுற்றான்
வீங்கியபூப் புயம்தாங்கி விண்ணவரும் மண்ணவரும்
பாங்குறச் செய்தான் முறையப்பாற்கர பூபதியம்மா.

4) குடமுனியோ அவன்பால் நூல்கொண்டு அமர்தொல்
காப்பிய னோ
படமுடைய பணி இறையோ பாரதம்பாடிய
தவனோ
மிடலுறு அன்னவன் கல்வி விளம்புவ தென் என
வியப்பக்
கடலமுதப் பெருக்கென்னக் கவிபிரசங்கம் புரிவான்.

5) இரவலராய் முற்கணத்தினோர் பிற்கணத்திற்
புரவலராப் பொலியும் வகை புரிகின்ற பெருங்
கொடையான்
இரவலராயினும் புகலு மென்மொழியால்
வசமாக்கும்
கரவலராம் மெய்யன் உயர் கருணைநிறை
கண்ணுடையான்

**மு. ரா. அருணாசலம் கவிராயர்**

1) மேனாட்டுத் தேவகுலத் துப பேந்திரனா
வருமொரு மால்வேந்தர் மெய்க்கப்
பூநாட்டுத் தேவகுலம் தன்னில் பாற்
கரவிறையும் புகழும் வாய்மை
தானாட்டுஞ் சுந்தர தாசரகுமா
மாவுதிததற்கோர் சான்றே தென்னின்
மாநாட்டுஞ் சேதுபதி வடமலைத்தி
ருவனெனப் பேர் வாய்ந்த தாமே.

2) எங்குமாஞ் சிவத்தின் வியா பகமுமுயிர்
பாசமெனும் இரண்டும் கூடி
தங்கும் வியாத்தியு மவைகள் சிவத்தின்வியாப்
பியமாகுந் தன்மை யுஞ்சொல்
பொங்கு பன்னு லாலுணர்ந்து மெய்ஞ்ஞானச்
சனகனைப்போல் புவியைக் காக்கும்
துங்கன் பாற்கர சேதுமன்னனைப் போல்
புவியிலெவர் சொல்லுங்காலே.

# பாஸ்கரசாமி சேதுபதியவர்கள்
# திருமணவூசல்.

சென்னை கிறித்தவக்கல்லூரி தமிழ்ப் பேராசிரியர் சின்னசாமிப் பிள்ளையவர்கள் பாடியது. (1888)

## காப்பு

1. திருமருவு மார்பன்முன மியற்றிப் போற் றி
தேவிதனக் குனாத்தவெழில் மான்மியங்க ள்
மருவுமுயுர் சேதுநக ரொருகோலோச்சு ம்
மன்னவனாம் பாஸ்கர சாமிக் கோமன்ற ன்
திருமண வூசற்பாடல் செப்புதற்கு த
திருநாரையூர் நம்பியாண்டார் நம்பி க்
கருள்புரி பொல்லாப் பிள்ளையார் பொற்பாத ம்
அன்புடனே பூமலர்கொண் டருச்சிப்போ மே.

## நூல்

2. ஐங்கரனார் திருவடித்தா மரைகள் போற் றி
ஆலவா யெந்தையுமை மலர்த்தாள் போற் றி
அங்கந்த வேள்கழற் சேவடிகள் போற் றி
அன்னையரா மோரிருவர் சரணம் போற் றி
தங்குபுகழ் விஜயரகு நாதவேந்த ல்
தன்னிகராஞ் சேதுபதி குலவிளக்கா ம்
பைங்கழலோய் தேவியுட னாடிரூச ல்
பாஸ்கர சாமிக்கோவே யாடிரூச ல்

3. நந்தியெழிற் செம்பதும் விணைகள் போற் றி
நாளுமவன் றன்னடியார் பதங்கள் போற் றி
சந்ததமுஞ் சம்பந்த ரடிகள் போற் றி
தாண்டக வேந்திணை மலர்த்தாட் கமலம் போற் றி
சுந்தரனார் தூயகஞ்ச விணைகள் போற் றி
தொன்ஞான வாதவூ ரிறைதாள் போற் றி
பந்துபயில் தேவியுட னாடிரூச ல்
பாஸ்கர சாமிக்கோவே யாடிரூச ல்.

4 மன்னுமறு பான்மூவர் வனசம் போற் றி
மாகாளி மாவிலட்சுமிதாள் போற் றி
தன்னிகர்மா சரஸ்வதிதண் ணடிகள் போற் றி
சதாவருள் ஸ்ரீராஜ ராஜேஸ்வரிதாள் போற் றி
துன்னியசீர்ச் சேதுமா காளியோ டு
தொல்வீர மாகாளி துணைத்தாள் போற் றி
பன்னுபுகழ்த் தேவியுட னாடிரூச ல்
பாஸ்கர சாமிக்கோவே யோடிரூச ல்.

5. சீரோங்கு தாசரதி யருளைப்பூண் ட
சேதுபதி விஜயரகு நாதச்செம்ம ல்
பேரோங்கு மரபின்வந்த பெருமான் கீர்த் தி
பிறங்குமுத்து ராமலிங்க ப்ரபலவேந்த ல
ஏரோங்கு தவமுருக்கொண் டீண்டுதித் த
தெனாவெவரு மேத்துவள்ளால் தேவியோ டே
பாரோங்கு களிதுளங்க வாடிரூச ல்
பாஸ்கர சாமிக்கோவே யாடிரூச ல்.

6. தாமமணி முடிசிரத்தில் தகதகென் ன
தண்மதிநேர் முகங்கருணை பொழியநாளு ம்
பூமகளும் மண்மகளும் பொருந்திவாழு ம்
புஜகிரியில் வாகுவலயங்கள் மின் ன
நாமநூற் பொருள்விழையொண் செவியிற்சோ தி
ஞாயிறிரண்டனைய குண்டலம் வில்வீ ச
பாமமா கடல்விழியொ டாடிரூச ல்
பாஸ்கர சாமிக்கோவே யாடிரூச ல்.

7. ஆரகேயூர கடகங்கள் மின் ன
அழகுசெறி விரல்களில் மோதிரங்கள் மின் ன
தாருலாங் குருவிந்த மார்பின் மின் ன
ஜாஜ்வல்ய வுதரபந்தனமு மின் ன
பேருலா மிடையரைஞாண் பளபளென் ன
பெருமிதஞ்சேர் பதவிணையிழ் கழல்கள் துன் ன
பாரிமங்க ளேஸ்வரியாம் ராணியோ டு
பாஸ்கர சாமிக்கோவே யாடிரூச ல்.

8. தற்புரை ஸ்ரீ ராஜராஜேஸ்வரி தாட்கஞ்ச ந்
தனைமறவா விரதநின் கைக்கமலப்போதி ல்
பொற்புயமர் மாதுலனார் புரிவொடூன் ற
புத்ரிமங்களேஸ்வரி நாச்சியார் கைக்காந்த ள்
அற்பொடுசேர்த் தாசிபல நவின்று வாழ்த் தி
அரும்புனல்நல் கிடப்பெற்றா யவனிபோற் ற
பற்பலவா யிரவாண்டவ் விராணியோ டு
பாஸ்கர சாமிக்கோவ யாடிரூச ல்

9. வண்மைதிக ழைந்தருநேர் தருவிளிழ ல்
வாளொளிசேர் பவளத்தாற் கால்கள் நாட் டி
திண்மைபெறு வயிரத்தால் விட்டஞ் சேர்த் து
செம்பொன்னா லியற்றுசங் கிலிகளகோத் து
ஒண்மர கதத்தமைத்த பலகைமீதி ல்
உம்பர்மலர் மழைபொழிய வுவந்துநாளு ம்
பண்மொழியார் தேவியுட னாடிரூச ல்
பாஸ்கர சாமிக்கோவே யாடிரூச ல்

10. வானிலகு முடுக்களெனத் தரளங்கோத் த
மாவிந்த்ரப் பட்டுவிதானம் விளங்க த்
தானவிருஞ் சந்த்ரவட்டக் கவிகையோங்க த்
தண்ணிலவு பொழிவதெனக் கவரிவீ ச
கானமரு முல்லையந்தார் மார்பிலங் க
கவினுலா மரகதப்பைம் பலகைமீ து
பானனைநேர் முறுவலமர் தேவியோ டு
பாஸ்கரசா மிக்கோவே யாடிரூச ல்

11. பூசுரர்க ளாசிமொழி புகலவானி ல
புத்தேளிர் மலர்மாரி பொழியநாளு ம்
வீசுபுகழ் ப்பாவலர்பா மாலைசூட் ட
மேன்மைசெறி யிந்திரதுந்துபி நின்றார்ப் ப
தேசுலா மாதர்கள் பல்லாண்டுபா ட
ஜெயவீர வன்னிதுரைச் சிங்கமால்சே ய்
பாசிழையார் மங்களேஸ்வரிப் பொன்னோ டு
பாஸ்கர சாமிக்கோவே யாடிரூச ல்

12. மாமனெனு மாதுல்னோர் வடந்தொட்டாட் ட
மாமியெனு மாமியொரு வடந்தொட்டாட் ட
காமனெனு மைத்துனரோர் வடந்தொட்டாட் ட
கவினுறுசோ தரிகளொரு வடந்தொட்டாட் ட
ஆமெழில்கூ ரன்னையர்சோதரர் சுற்றத்தா ர்
அவனிபரன் பினரெவருங் கண்களிக் க
பாமலிசீ ரிறைமகளோ டாடிரூச ல்
பாஸ்கரசா மிக்கோவே யாடிரூச ல்

13. மடங்கலுயர் கருடனநு மான்செங்கா வி
மன்னுகொடியாடத்தண் கவிகையா ட
தடங்குலவு மார்பின்முல்லை மாலையாட த்
தரியலரை வணக்கும்வளை தடியுமா ட
பிடிநடையார் கரகமலக் கவரியா ட
பேரொளிசேர் குண்டலங்க ளிருகாதா ட
படிபுகழுந் தேவியுட னாடிரூச ல்
பாஸ்கரசா மிக்கோவே யாடிரூச ல்

14. கன்னன்மொழி மாதரெழி னடனமா ட
கவினுலாந் திருமுகத்திற் குறுவேர்வா ட
மின்னனைய மாதர் மங்களங்கள்பா ட
மேதினியு ளாரெவருங் களிகொண்டா ட
மன்னரெல்வா முத்தரியம் வீசியா ட
வானவருங் கண்டு களித்துக் கூத்தா ட
பன்னிமங்க ளேஸ்வரிமா ராணியோ டே
பாஸ்கர சாமிக்கோவே யாடிரூச ல்.

15. உரைபெருகு சேதுநக ரிறையுன்றாய ர்
ஒண்மைதி கழிராணி முத்தாத்தாள் * நாச்சியாரும்
திருராணி துரைராஜு நாச்சியாரு ம்
தெருள் ராணி மங்களேஸ்வரி நாச்சியாரு ம்
தரைபுகழி ராணிகாமு நாச்சியாரு ம்
தன்னிகராம் விஜயலட்சுமி நாச்சியாரு ம்
பரிவொடுகண் களிகூரத் தேவியோ டு
பாஸ்கரசா மிக்கோவே யாடிரூச ல்.

---

* நாய்ச்சியார் என்பது நாச்சியாரென மருவி நின்றது.

16. இருநிலங்கொண் டாடுபுகழ்ச் சேதுவள்ள ல்.
இணையில்ரகு நாதமுத்து ராமலிங்க த்
திருவாளன் மதலாய் நின்னிளவலென்னு ந்
தினகர சாமிக்கோவும் பெரியதந் தை
தருபுதல்வர் கோட்டைசாமிக் கோமானு ம்
தண்மையார் பாண்டிதுரை சாமிமாலு ம்
பரிவொடுகண் களிகூரத் தேவியோ டு
பாஸ்கர சாமிக்கோவே யாடிரூச ல்.

17. ஒன்னலரும் பணிவேள் சோதரிகளாகு ம்
உயர்வள்ளி மயில்நாச்சியார் வேலுநாச்சியா ர்
பொன்னிகராம் துரைராஜு நாச்சியா ர்
பொருந்து சுந்தரநாச்சியார் விஜயலட்சு மி
எண்ணு நாச்சியார் பானுமதியா நாச்சியா ர்
எழில் சூரியகாந்தி நாச்சியாருங்கண் டு
பன்னரிய களிமூழ்கத் தேவியோ டு
பாஸ்கர சாமிக்கோவே யாடிரூச ல்.

18 வயல்வளஞ்சேர் சேதுநக ராசுசெய்யு ம்
வள்ளால்நின் மாளிகைமாப் பிளைகளென்னு ம்
புயற்கர மங்களசாமிக்கோ மான்வீ சு
புகழ்கொண்ட ஜெயபால சாமியண்ண ல்
இயல்கந்த சாமிமால் பெரியசா மி
யேந்தலிணை யில்ராம ராஜுவேள்க ண்
பயனார்ந்தோ மெனக்களிக்கத் தேவியோ டு
பாஸ்கர சாமிக்கோவே யாடிரூச ல்.

19. ஜெயவீர வன்னிதுரைச் சிங்கவேளு ம்
திருத்தேவி குஞ்சரநாச்சியாரும் நாஞ்செ ய்
நயவிரத தவபுத்ரி மகிழ்நனோ டு
நானிலத் தாடுதல்கண்டு களிக்கப் பெற்றோ ம்
வியன்களிப்பி யாதிதனினென்னாவிழைந்து நோக்க
மெல்லியலாள் மங்களேஸ்வரி நாச்சியாரா ம்
பயணிலகு ராணியுட னாடி ரூச ல்
பாஸ்கர சாமிக்கோவே யாடிரூச ல்.

20 தென்னவநின் குலராணி யுடனுதித் த
ஜெயவீர வன்னிவன்னி துரைசாமிக் கோ
சென்னியென வளனோங்கு சீர்த்தியாள ன்
ஜெயவீர வன்னிவச்சி ராங்கபாண்டிய ன்
இன்னவர்க ளிருமருங்கு மலர்ச் செண்டோச் ச
இனிதிருந்து தேவியுட னாடீரூச ல்
பன்னகவேந் துளநாணுங் கலைவலா ள
பாஸ்கர சாமிக்கோவே யாடீரூச ல்

21 நிமலனார் திருவிழியிற் றோன்றுமெங்கோ ன்
நெடும்புவன மிமைப்பொழுதின் வலமாய்வந் த
அமலமா மயிலுகைக்குஞ் செவ்வேள்பாத ம்
அநுதினமு மறவாத விரதசீ ல
கமலைவாழ் சேதுநக ரரசுசெய்யு ங்
காவலகா வலர்மாலை கமழுமார் ப
பமரமுரல் கோதையுட னாடீரூச ல்
பாஸ்கர சாமிக்கோவே யாடீரூச ல்

22 பைம்பொன்மணி யிலகுபணி யணிநின்மே னி
பற்றாசு தனையுமணி பான்மைபோ ல
செம்பொருள் நூற்பலவுணர்ந்த சீரியோர்க ள்
செம்மையுறத் தொடுத்தணிபா மாலையோ டு
அம்புவியி னேழையே னார்வுமீக்கொ ண்
டமைத்த புன்சொற் பாமாலை தனையும் நாளு ம்
பம்புவிழை வொடுதரித்துப் பாவையோ டு
பாஸ்கர சாமிக்கோவே யாடீரூச ம்

வாழி

23 மண்டலேஸ்வரரொவரும் வணங்கிப் போற்று ம்
மஹாராஜ ராஜகெம் பீரனா ன
திண்டிறலார் ஸ்ரீ ஹிரண்ய கர்ப்பயா ஜி
சிரிரவி குலமோங்கப் புவியின்வந் த
அண்டர்புகழ் விஜயரகு நாதசே து
அண்ணல் மரபினில்வரு பாஸ்கர சாமிக் கோ
எண்டரவே நீடுழி வாழிவா ழி
இராணிமங்க ளேஸ்வரி நாச்சியாரும் வா ழி

24 தாரணி பாஸ்கரசாமிக் கோவையின் ற
தாய்மார்க ளைவருநீடுவா ழி
நாருறுபா ரியுஞ் சகோதரரும்வா ழி
நன்மதிதோய் மாளிகைமாப்பிளைகள்வா ழி
நீரிலகு பெரியதந்தை பொன்னுசா மி
நெடும்புகழ்மால் தருதனையர் வாழிவா ழி
காரனைய கரதலமா துலனும் வா ழி
கற்பிலகு மாமிமைத்துனரும் மா ழி

25 சேதுவெனு மாதலமெந்நாளும் வா ழி
திண்மையுற வன்னதொரு குடையிலாளு ம்
ஸ்ரீதரனேர் பாஸ்கரசாமிக் கோமானு ம்
ஸ்ரீராணி மங்களேஸ்வரி நாச்சியா ரு
மேதினியில் நீடுழி வாழிவா ழி
மேன்மையுறு மன்னர்செங் கோலும் வா ழி
ஓதுமவர் கிளைஞர்நட்டோ ரெவரும் வா ழி
யுற்றபரி சனங்களெல்லாம் வாழிவா ழி

## திருமணவாழ்த்து

கன்னல்கமு கெழில்காட்டுங் காழிவரு தம்மகனார்க்
கின்னமுதந் தேவியோடு மெழுந்தருளி யுண்பித்த
மன்னவனார் திருவருளால் வாழிநனி துணைவியுடன்
பன்னுபுகழ்ச் சேதுபதி பாஸ்கரசாமிக்கோவே.

கற்றா ரோத்துங் கோலக்கா வருதம்மகனார்க்குப்
பொற்றாள மீந்தருளும் புண்ணியனார் திருவருளால்
பற்றாரும் பணிகேட்பப் பாஸ்கரசாமிக் கோவே
உற்றாருந் துணைவியொடு மூழிபல வாழிநீ.

தேவியுடனினிதமர்ந்து திருக்கூட லரசுபுரிந்
தாவலோடு வேல்வளை செண்டருமகனார்க் கன்றளித்த
தேவருளால் பாஸ்கரசாமிச் சேதுபதி யிறையே
ஓவற வொண்ணுதலுடனே யூழிபல வாழிநீ.

# பாஸ்கர சேதுபதி திருமணக் கும்மி

(முகவை. கவிஞர் இராமலிங்கம் பாடியது)

**விநாயகர் காப்பு**

1 பூமாதி லங்கிய மார்பனாம் பாஸ்கர
பூபதிமேல் கும்மி பாட்டுரைக்க
சேமத்திரு லாதிப்பரி யேறிப்பணி வாருக்கருள்
சித்தி விநாயன் காப்பாமே.

**பரமன்**

2 பொங்கும் புகழ்பெற்ற சிங்கநற் பாஸ்கர
போஜன் மேற்கும்மி தமிழ் பாட
மங்கைக் கொரு பங்கைத்தரு நிங் கட்சடை
வைத்தி பரமன் தந்துணையே

**பராசக்தி**

3 காருற்ற கைவளர் மன்னவன் பாஸ்கர
காண்டீப சுந்தர பாண்டியன் மேல்
பேர் பெற்றவிநோதம் கூறக்-கடலாடப்புவி
பெற்ற பராசக்தி காப்பாமே

**நாரணன்**

4 சித்தசனா மெங்கள் பாஸ்கர சாமி நற்
றீரன் மெற் கும்மி தமிழுரைக்க
நந்தன் கருடத்தன் கமலத்தன் பத்தன்றிரு
நாரணன் பொற்பதங் காப்பாமே

**ராஜராஜஸ்வரி**

5 வாசம் புகழ்பெற்ற பாஸ்கர சாமிபூ
மார்க்கண்டன் மேற்கும்மிப் பாட்டுரைக்க
ஈசர்க்கொரு பால் திமையோர் மெச்சிடும்
ராஜ ராஜேஸ்வரி காப்பாமே

**வடிவேவர்**

6 மாதய வாளனாம் பாஸ்கர ராஜன் என்
மன்னவன் மேற் கும்மிப் பாட்டுரைக்க
சீதக் கடலேழுக் கொரு வேல்விட்டருள்-சூரைப்பொடி
செய்த வடி வேலர் காப்பாமே.

மலர்மகள்

7. முத்தமிழோர்கருள் மன்னவன் பாஸ்கர
முன்னவனுங் கொடைக் கன்னன்மேல்
வித்தைக் குமியைச் சக்கரைவட்டு க்கிணை
கட்டிச்சொறி
வெள்ளைமலர் மகள் காப்பாமே

முத்து முனியாண்டி

8. சத்துரு சங்காரன் பாஸ்கர ராஜன்
உதாரன் மேல் கும்மி தமிழ் பாட
முத்திக் கொரு வித்தைப் பணி சத்தர்க்கருள்
வைத்து
முத்து முனியாண்டி காப்பாமே

நாட்டு வளம்

9. நாட்டுவளமும் நகர்வளமும்—இன்னும்
நன்னயஞ் சேரும் பல வளமும்
தோட்டு மலர்க்கழல் பின்னிடையிற்-தன்றாய்
சொல்லி வருகிறேன் பெண்ணரசே.

10. கன்னலின் சாறும் பலாக்கனி தேனுஞ்—செங்
கதலித் தேட்டும் கூடியொன்றாய்
செந்நெலிற் பாய் முகவை நகர் மேனி
செழித்துத் தழைக்கும் இரவி குலன்

11. மண்டு சுகங்கள் கவிபாடு - மது
உண்டு வண்டுகள் சுருதி கூடும்
கண்டு மயில்கள் நடமாடும் - செழுந்
தண்டகங்களும் மித நீடும்

12. செந்நெல் கரும்பின் வளங்காட்டு முயர்
கன்னல் கமுகி னெழில் காட்டும்
தென்னையோர் பூகம்தனை காட்டும் வாவி
சேல் கெண்டை மாதர் கண்காட்டும்

13. வான மட்டும் வளர் மாஞ்சோலை - நெடுங்
கான மட்டும் பெரும் பூஞ்சோலை
யானை கட்டப் பயிர் சீரேறும் - நெடும்
வான முட்டப் பெரும் பாரேறும்

14. விட்ட கதிருமுக்குத் காணுமொரு
கட்டுக் கல மளக்கக் காணும்
துட்டபுலியும் மானுஞ் சேரும்-வாலி
எட்ட வெஞ் சங்கினங் களுதும்

மன்னரது குணநலன்கள்

15. சீர் வளரும் புகழ் படைத்தவன்-பண்டு
தென்னிலங்கைக் கடலடைத்தவன்
பேர் பெற்ற உதாரக் குபேரர்க் கிணை
பேருலகில் கீர்த்தி பெற்ற துரை

16. செந்திரு மேவிய மாதனத்தான் மிக்கத்
தீரம் பொருந்தும் சிம்மாதனத் தான்
மந்திரத் திண்புய முத்துராமலிங்க
மன்னவன் செய்தவத் துதித்தான்

17. மட்டவிழ் மல்லிகை மாலை நவமணி
மாலை யிலங்கிய வாசலினான்
அட்டலெக்ஷிமியுங் கூடியொன்றாய் விளை
யாட்டுக் குமி கொட்டும் வாசலிலே

18. சந்தகங் கனிநினையோரும் மமைச்சரும்
தண்டிகை மேல் வரும் வாசலினான்
செந்தாமரைப் பெண்ணும் வெண்டாமரை
பெண்ணுப்
சேர்ந்து விளையாடும் வாசலினான்

19. சிங்களர் கன்னடர் பர்மா மலாயிகள்
சீன கலிங்கர் தெலுங்கருடன்
அங்க வங்க கலிங்க காஷ்மீர் அவந்தி
ஐம்பத்தாறு தேசத்தரசர்களும்

20. துங்கனாம் பாஸ்கர சேதுபதி எங்கள்
சுழிகன் பால் திரை ஏந்தி நிற்க
மங்கையர் கற்பூர ஆரத்தியேந்தி-எம்
மன்னன் மதி முகம் பார்த்து நிற்க

21. ஞாயம் வகுக்கும் அதிகாரன்-சிங்கன்
மாகை செலுத்தும் மகராஜன்
தோயப்பரி ஏழ் பெற்றவ ரோடக்கடலாடத்திசை
சுற்றி வரும் வெண்மை வான்பரியாம்.

22. காசிக்குந்தென் கன்னியா குமரிக்குங்
கடல் சுற்றும் பூமிக்கு மோங்கு புகழ்
வாசிக்கி வைகை வளநாடன் -றமிழ்
வாசிப்பினில் புகழஞ்சேடன்

### சேதுபதி மன்னர் திருமணம்

23. மங்கையர் தங்கள் சிரொரத்தின மலர்
மங்கை நிகர் மங்களேஸ்வரியை
துங்கனாம் பாஸ்கர சேதுபதி
சுத்தன் திருமணஞ் செய்ததுவும்

24. ஐந்தன் போர்க் கொடை தந்தருளு மெங்கன்
ஆண்டவன் பாஸ்கர ராஜன் தன்மேல்
சிந்தை மகிழ்ந்து கும்மித் தமிழா கச்
செய்யு ராமலிங்கஞ் சொல்கனியை

25. இன்னிலந்தன்னிலே பாடி விளையாட
இங்கித மங்கையர் வாருங்கொடி
சொன்ன கும்மித் தமிழைப் படிக்கும்
பசும்தோகை யரே நீங்கள் எல்லோரும்

26. வாருங்கோடி பெண்காள் வாருங்கோடி-சேது
வள்ளலைப் பார்க்கநீர் வாருங்கோடி
காரைப் பொருகுழலாள் வடமேருக்கிணை
முலையாள்
கயற் கண்ணியைக் கூப்பிட்டு வாருங்கோடி

### மணமகள் அலங்காரம்

27. சீருள்ளபூம் பட்டுடுத்துங்கோடி — நெற்றி
திருவெண்ணீர் திருத்துங்கடி
தானத் திரு குடையானு யர் வீரக்
கழலுடை
ஹரிபாசந்ஷேரச்ஸ்கர ராஜனருள்

28. செம்பொற் கடகஞ் செங்கைக் கிரண்டில்
சிற்றிடைக்கித் தங்கம் பட்டையிட்டு
கும்பக் கலசம் பம்பரம் போற்றின்னமும் பெற்றிடு
கொங்கை ரவிக்கை யிறுக்குங்கோடி

29. நெய்யிட்ட கொண்டைக்குப் பூவிட்டு மேலிட்ட
நெற்றிக்கு கஸ்தூரி பொட்டுமிட்டு
மையப் பொருகுழலர் மதனெய்யப்பொருவிழியீர்
மகிழ வாருங்கடி பெண்கள் வாருங்கடி

30. தானக னெங்கள் பாஸ்கர ராஜன்
சமூகத்தில் நின்று விளையாட
மானைக்கயல் வீக்கதிர் வானைச் சுடல் வேலைப் பொரு
மைவிழி மாதரே வாருங்கடி

31. சீருடையா னெங்கள் பாஸ்கர ராஜ மா
தீரனைப் போற்றி விளையாட
வாரிற்றெழு மேத்தன பாரகிரியார் சித்ர
வள்ளியைக் கூப்பிட்டு வாருங்கடி

32. தேவதருப் போல் கொடுக்கும் நற்பாஸ்கர
செம்மலைப் போற்றி விளையாட
கோவைக்கனி வாய் பெற்றவள் ஆடப் பலநூல் கற்றவள்
குஞ்சரத்தைக் கூட்டி வாருங்கடி

33. அழகு கொண்ட வதனத்தினாள் ரவிக்
கைக் கடங்காதிரு தனத்தினாள்
பழமும் கடலமுதும் கிளி பகருஞ்சொல்லமிர்தம் பெரு
பச்சை முத்தைக் கூட்டி வாருங்கடி

34. மலையைப் போன்றருள் மன்னவன் பாஸ்கர
வள்ளலைப் போற்றி விளையாட
அலையுந்திரு மகளின்ப விரதியுஞ் சரியலலின்றுரை
அன்ன முத்தைக் கூட்டி வாருங்கடி

35. பூசையில் மன்மத பூசையினால் – சொந்த
புருஷன் மேல் வைத்த ஆசையினால்
வாசக் குழலாள் சிற்றிடையாள் பொற்குடையாள்
மோகன
வஞ்சியைச் கூட்டிப் பரஞ்சி மின்னே

36. வையகம் போற்றிய தென்முக வாபுரி
வாழும் புல்லாணியுமே கூடி
மையஞ்சன மெழுதுங்கணை யம்பென விழி
பெற்றிடு
மாணிக்க வல்லியை கூவுங்கோடி

37. வேலைப் பழித்த விழியழகி சீனி
வெல்லங்கலந்த நற் சொல்லழகி
மாலைக் குயிலே தேக்கிய சோலைக்குயிலே
மாதரசே நீங்கள் வாருங்கோடி

38. மிஞ்சும் புகழ்பெற்ற சிங்கநற் பாஸ்கர
வேந்தனைப் போற்றி விளையாட
மிஞ்சுங் கருங் கொண்டையர் வம்பஞ்சம்
பெருங்கொங்கையர்
வாருங்கடி பெண்காள் வாருங்கடி

39 கோவரத்னகிரி எடுத்தவன் - அன்று
கொண்ட மழையைத் தடுத்தவன்
தேவர்க்கமுதத்திடு மாலைக் கிளையின் பன்பெரு
செல்வக் குபேரனெனத் தழைத்தோன்

### மணமகனைக் காணுதல்

40. பொங்கும் புகழ் பெற்ற சிங்கநற் பாஸ்கர
பூபதி செல்வந்தழைத் தோங்கி
எங்கும் புகழ் தங்கும்படி பொங்கும்மியின்
பூஞ்சோலை
எல்லவருங் கூடி வாருங்கடி

41. மாலையிலே கதிர் மறைத்தவன்-வஞ்ச
மானுக்கொரு கணை தொடுத்தவன்
கோலாகலன் சேது காவலவன்-எங்கள்
கோமானைப் பார்க்கநீர் வாருங்கடி.

42. மன்னவன் பாஸ்கர சேதுபதி-மணி
வாசல் மஹா மேருவைப் பாருங்கடி.
அன்னக் கொடிகட்டி இருப்பதும்-நம்மை
அழைப்பது போலுங் குறிப்பதும்

43. எட்டுலகங் கொடை குமணன்-பாஸ்கர
விலாசந் தன்மையும் பாருங்கோடி.
அஷ்ட லெக்ஷிமி யாசாரந் தன்னை
அணுகி மகிழ்ந்து பாருங்கோடி.

44 அதிரங்க வாத்தி முழங்கு-நல்ல
சதுரங்க மண்டபமுந்தாண்டி.
கதி தரு சேதுபதி விளையாடும்
கரடிக் கூடமிதுதாண்டி.

45. காண்டீபனா மெங்கள் பாஸ்கர ராஜன்
கல்யாண மண்டபம் பாருங்கோடி.
வேண்டிய பொம்மைகள் படங்கள் வஸ்த்திர
வேடிக்கையை வந்து பாருங்கோடி.

46. கூரிய வேல் போல் விழியாளே - சோலைக்
குயிலைப் போன்ற மொழியாளே
நாரிய ரெல்லோரும் வாருங்கடி - நம
தாண்டவனைக் கண்ணால் பாருங்கோடி.

47. முன்னொரு நாள் விஸ்வாமித்திரன் வேள்வி
முடித்திட எண்ணி அயோத்திதனில்
மன்னன் தசரதன் பாலவன் சென்று நன்
மைந்தர் இருவர் தனையழைத்து

48. தாடகை சம்சா ரமுடித்து மன்னன்
ஜனகன் வில்லையுமே யொடித்து
தேடரிதாகிய சீதையைக் கல்யாணம்
செய்திடும் ராமன் தனைப் போலும்

49. சந்திர வதன தனதளவென – இட்ட
மந்திர விபூதி பளபளவென
சுந்தரஞ்சேர் முடி மன்னவன் பாஸ்கர
சுந்தரத்தைக் கண்ணால் பாருங்கடி

50. முத்துச் சரங்களசைந்து மின்ன – நவ
ரத்தின மோகன மாலை துன்ன
கத்த நவமணி வாகுமின்ன - முடி
துலங்குஞ் சோதி பளபளகன.

51. வஞ்சியர் வெஞ்சாமரம் போடி – கண்ட
மாதர்கள் நெஞ்சம் மையல் கூடி
மிஞ்சும் புகழ்பெற்ற பாஸ்கரராஜன் நல்
வேளைக் கண்ணாலே பாருங்கோடி

52. காவலன் எங்கள் சேதுபதி சென்னை
காலேஜில் ஏப்பே பரிசை தந்து
பூவலஞ் சுத்திய ராமனைப் போல்மன்னன்
பூமிதட்சனஞ் சுத்தி வந்து.

53. சோனருள் தங்கும் நன்னன் துரைச் சிங்கஞ்
சுந்தரன் பெற்ற தவத்தில் வந்த
மாமயிலாள் மங்களேஸ்வரியைச் சேது
மன்னன் மணஞ் செய்யமுன்னாளில்

54. மின்னரசே வேதன் கை தேர்ந்து – கோடி
மின்னப் பெண்ணாகவுஞ் செய்தானோ
மன்னவன் பாஸ்கரன்றன்னை மணஞ்செய்ய
வகுத்தனன் பிரம தேவனென்று

55. நன்னய மானாகி சேடனும் ஆயிரம்
நாவினால் சொல்ல வரிதாமே
யென்றுவமோகனங்க வின்னுஞ் சொல்வதை
யேகமாய்க் கூடி கேளுங்கோடி

## திருமணச் சடங்குகள்

56. மன்னன் பாஸ்கர ராஜன் தேங்காய் தொட்டு
வரும் அலங்காரம் பாருங்கோடி
வன்னப் பசுங்கிளி மாதர்களே - இந்த
மன்னவன் இந்திரனாகு மென்றார்.

### மணமகனின் அழகில் ஈடுபட்ட பெண்கள்

57. காவலவன் எங்கள் சேதுபதிதனை
கண்டு வண்டார் குழல் மாதொருத்தி
ஓவியம் போல அசையாமல் நிற்கிற
ஒழுங்கைப் பாருங்கள் தோழியரே

58. வால மதனெங்கள் பாஸ்கர ராஜன் மேல்
மையல் கொண்டொரு பெண் மெய்சோர்ந்து
சேலையும் மாலையும் ஓலையும் காலிடஞ்
சேருமலங்கோலம் பாருங்கடி.

59. மால்தனைப் போல்வரும் பாஸ்கரராஜா
மன்னனைக் கண்டோர் பெண் மையல் கொண்டு
மேல் விழியை இமையாமலே நிற்கிற
விந்தையைப் பாருங்கள் முன்னாளே.

60. தோகையர் மன்மதன் பாஸ்கரராஜன் நின்
சுந்தரங் கண்டொரு சோமவல்லி
மேகலை சோர்வதைக் கீழ்கலை யென்றவள்
விரித்துடுத்தாள் பாருங்கடி

61. மலையெனப் புயந்தானுடைய யெங்கனி
மன்னனைக் கண்டு மையல் கண்டு
கலைகள் பின்வரும் மானினைக் கூட்டம்போல்
கன்னியர் சூழ்வதைப் பாருங்கடி

### மன்னரது பணியாட்கள்

62. கார்சொரி கூந்தலழகியரே — சேது
காவலவன் பக்கலிலொருவன்
பாரிய தங்க மடல் பிடித்ததொரு
பாரிசம் வாராது யாரடி சொல்

63. தாரணி மார்பனாம் முத்துச் செல்லத்துரை
ஸ்தானாபதி பரிபூரணமும்
ஆரணன் நற்றவத்தால் வந்த பேரன்
காயாம்புவண்ணன் இவர்தாண்டி

64. வெற்றிவேர் மயில் விசிறி கைக்கொண்டு
வேகமாய் வாரவனாரடி சொல்
சித்தினிப் பொன் நவரத்தின மாலை — நான்
செப்பிவருகிறேன் பெண்ணரசே.

65. வெற்றி நல்வேல்படை வெண்ணிலத்தை
சத்துரு சங்கராசாமி யெங்கள்
கார்த்தன பாஸ்கர சேதுபதி கையில்
சித்திரவேலுமிவர் தாண்டி.

66. வல்லவன் ராமன்பின் வந்திடுந்தம்பிபோல்
வார சிங்காரத்தைப் பாருங்கடி
வாசம் புகழ் பொன்னுச் சாமிமால் முன்செய்த
மாதவப் பேற்றினில் வந்துதித்த

67. தேசம்புகழ் கோட்டைச்சாமி சீமானிவர்
வாரதோர் சிங்காரம் பாருங்கடி
வாசனையெங்கும் கமழுமடி வார்த்தை
வையகம் யெங்கும் புகழுமடி

68. ஈசனருள் பெற்ற தாஸன் உக்ரபாண்டியன்
ஏந்தல் இதோ வாரார் பாருங்கடி
கார்முகில் போலுஞ் குழலாளே கையில்
அணிந்த தங்க வளையாளே

69. கற்கண்டு போலு மொழியாரெயிந்த
கண்ணன் புகழ் சொல்லக் கேளுங்கடி
வையகம் புகழும் விஜயரகுநாதர்
மன்னன் துரைராஜன் முன்னாளில்

70. செய்யுந் தவத்தினில் வந்த சிகாமணி
சேதுபதி ராணி வள்ளி மயில்
மின்னொளி யானை மணம் புரிந்துமிந்த
மேதினியில் கீர்த்தி பெற்ற துரை

71. மன்னர் மன்னர் புகழ் மங்களசாமி மால்
வரு மலங்காரம் பாருங்கடி
தங்க மலை நேர் தனத்தாரே கல்வி
சார்ந்தோர்க் கீயுந் தனத்தாரே

72. செங்கமல மொத்த மங்கையரே – இந்த
சீமான் பெருமையைக் கேளுங்கடி
பாரோர் புகழும் புதுவை நகர் வளர்
பாண்டியன் சாமிக் கண்ணேந்திரன்றன்

73. செய்யுந் தவத்தினில் வந்த சிகாமணி
சீமான் வாரதைப் பாருங்கடி
சேதுபதிக்கு மரு கனடி அவர்
செம்மல் பொன்னுச்சாமி சீலனடி.

74. மாதவத் தோர்க்கிவர் தொண்டனடி - பொல்லா
வண்டருக்கே யிவர் சண்டனடி
ஆதுலருக்கு, மூதண்டனடி - மன
தச்சமில்லார்க்கு முத்தண்டனடி

75. தங்கையரே நான் சொல்லிவருவதை
சங்கையில்லாமலே கேளுங்கடி
துங்கன் சேது ராஜ சிங்கமுத்து
துரை ஜெயபாலன் இவர்தாண்டி

76. வக்கணக் காரி மகமாயி – வரும்
வள்ளல் பேர்தனைக் கேளுங்கடி
ராஜகுல திரன் முத்துச் சாமி மால்
நற்றவத்தால் வந்த தீரனெனும்

77. வாசம் புகழ் பெற்ற மால் தங்கச்சாமி நன்
மன்னன் வருவதைப் பாருங்கடி
காவிற் குயிலின் மொழியாரே - செல்
கெண்டையைப் போலும் விழியாரே

78. தாவிப்பரியின் மேல் ஏறிவருகின்ற
தாட்டிகன் பேர் சொல்லக் கேளுங்கடி
அத்தன் அருள் பெற்ற வேலுச்சாமித்தேவர்
அருந்தவத் தினில் வந்து தித்த.

79. சித்தனாம் பாண்டிக்கண்மாய்ச் சின்னச்சாமி
சீமான் புகழின்னங் கேளுங்கடி
வெற்றிக்கு விக்கிரமாதித்தன்டி மேலும்
விளங்கும் பிரக்யா சித்தன்டி

80. பக்திக் குயர் தர்ம புத்திரண்டி-இந்த
பாரினுள் ளோர்க் கன்ன சத்திரண்டி
சத்திய குடைக்கி முன்னனடி-ஒரு
தாழ்வில்லா யோக நிபுணனடி

81. நற்றமிழோர்க் குத்தியாக சிங்கம்-பாண்டி
நாட்டுக்குள்ளே கண யோக சிங்கம்
உற்றவர் தங்கட்குத் தங்கக்கட்டி-எதில்
ஒன்னலர் யானை மேல் சிங்கக்குட்டி

82. தேட்டுப்புலி கவியாட்டுப் புலி மஹா
சித்துப்புலி சின்னச்சாமி புலி
காட்டுப்புலி பாண்டிநாட்டுப்புலி கொடைக்
கண்ணன் சின்னச்சாமி மால் தாண்டி

83. நாட்டுக்கரசன் கொலுசூரன்-இவர்
தாட்டிகமுள்ள வலுவீரன்
கோட்டைமேல் தாவுபரி மன்னாமிந்த
நாட்டுக்குள் ளோங்கும் புகழ்கண்ணனாம்

84. பூரண பொற்கொடு நாகு செங்கமலம்
பொங்கமுடன் இன்னும் கேளுங்கடி
தீரன் அரண்மனைச் சாமி செல்லத்துரை
செம்மல் பள்ளிக்குடத்துச் சாமி

85. சிட்டர் புகழ் ஜெய வீரவன்னியெனும்
சித்தூர் சாமி இவர்தாண்டி
அட்டதிசை புகழ் பட்டணங்காத்தான் வாழ்
அண்ணல் துரைச்சிங்கம் இவர்தாண்டி

86. மட்டுக் கடங்காத புதுவை நகர்வளர்
மன்னன் பொன்னையா தவத்தில் வந்த
கட்டழகன் சீமைச்சாமி வன்னித்துறை
சீமான் வாரதைப் பாருங்கடி

87. கொங்கைக் குடங்கள் இரண்டிருந்தும்
குவிந்த மலை சுமந்தே வருந்தும்
சிங்க மிடையையொத்தத் தங்கக் கனகாம்புஜம்
ஸ்ரீ ரங்கம் ஜானகி நாகரெ[illegible]னம்

88. மங்கையர் எல்லோரும் வாருங்கடி – இந்த
மன்னன் பெருமையைக் கேளுங்கடி
சிங்க பரிபாலன் முத்துராமலிங்க
சிறுவயல் ஜெமிந்தா ரிவர்தாண்டி

89. மட்டுக்கடங்காத சேனையை முன்னிட்டு
வார சிங்காரத்தைப் பாருங்கடி
மாமலர் கூந்தலில் வண்டாட – சித்ர
வள்ளி மருங்குல் துவண்டாட

90. சந்திரன் போல்முகம் தளதளவென
ஐருகை மாலை பளபளவென
மந்திரத்தின்புய ராஜராம ராயர்
மந்திரி வாரதைப் பாருங்கடி

91. தேமல் முலைமலர் செண்டாட – ராஜன்
சித்ர வீதியுந்தாண்டி வந்தோம்
பாடகந் தண்டை சிலம் பொலிக்க வந்த
பரத நாட்டியம் நீர்களிக்க

92. முத்தமிழோர்க்கும் இச்சிக்கும் மாதர்க்கும்
முத்தம் கொடுக்கும் மதிபாலன்
சத்திய வானெங்கள் சீமைச்சாமியெனும்
சித்தசனைக் கண்ணில் காணோமடி

93. வேதன் விதித்த விதிதானோ – இந்த
மேதினியோர் செய்தவந்தானோ
மாது வேலி நாச்சியாரைத் தேடிப் போன
மன்னன் இன்னும் வரக் காணோமடி.

94. என்று செங்கமலம் சொற்கேட்டு - பசுங்
கன்று பாலில்லாததுபோலும்
நாடகரம் பைபயஞ் செனிக்க வந்த
நாரி யாரே சொல்லக் கேளுங்கடி

95. நின்று மோஹனாள் முகம்வாடக் கண்டு
அன்று சித்ரரேனை யோடி வந்து
சங்கீதப் பாட்டுக்காக மகிழ்ந்து - துரை
இங்கிதன் சீமச்சாமி கொடுத்த

96. தங்கச் சரியணி கரத்தினாள் – மார்பில்
தட்டி மோஹனாளைத்தான் தேற்ற
இந்திரன் போல் மதயானை மீதெழுந்து
எங்கோன் வருவதைப் பாருங்கடி

97. சந்திர வட்டக்குடை நிழற்ற—ஹரிக்
சந்திரன் வாரதைப் பாருங்கடி
மந்திரிமார்கள் புடைசூழ—மணி
வாசலில் வாரதைப் பாருங்கடி.

98 அஞ்சு தரு வைத்த கைத்தலத்தான்—முன்னம்
ஆதியிலே ஆதிமூலமென்ற
குஞ்சரத்தைக் காத்த பாஸ்கர ராஜன்
குபேரன் வருவதைப் பாருங்கடி.

99. தேசத் தரசர்களும் வணங்க—ஜெய
பேரிகை டம்மாரமும் முழங்க
ஆசார வாசல் மணி முகப்பில் வேதம்
அந்தணர் கூறி ஆசிர்வதிக்க

## மணமகளுக்கு ஆரத்தி

100. நத்துக் குவித்திலங்கும் கோண வாசலில்
தாட்டரசன் வரப் பார்த்திருக்க
முத்தாத்தாள் ஸ்தானாதிபதி யோடி—மணி
முத்தினால் ஆராத்தி யேந்தி நிற்க

101. நீதிப் புரோகிதர் ஆசிகள் கூறியே
நேமமாய் ஓமம் வளர்ந்திருக்க
வேதியர் எல்லோரும் கூடியொன்றாய்—நல்ல
வேதத்தில் உள்ளபடி யுரைக்க.

## மணவறைக்கு மணமகள் 'வருதல்

102. சாந்தணி மார்பர் துரைச்சிங்கச் சாமி
தபோபலத்தால் வந்த தார்குழலாள்
மாந்தளிர் போல் மேனிமங்களேஸ்வரியும்
மன்னவன் பால் வந்தமர்ந்திருக்க

103. அங்கனாம் பாஸ்கர ராஜனுக்குந் துரைச்
சிங்கங் குமாரியைத் தாரையிட
மங்கள மெங்கும் முழங்கிடவே—மன்னன்
மலர்க் கரந் தாரை வாங்கிடவே

104. தாரணி புகழ் ஸர்வதாரி நாம
ஸம்வச்சரம் இடப மாசம்
சீர் பொருந்தும் மூன்று தேதி சுக்கிலபக்ஷம்
திங்கள் வாரத் திருதியை நாளில்

105. மிருகசீரிஷ நட்சத்திரமும் பகல்
மிதுன லெக்கனமுங் கூடி
மருவு நாளில் பருவ முகில்கள்
சாய் விட்டோலிருப்பது போல் நாடி,

மக்கள் நாணி கட்டல்

106. மங்களமுரசு தானடிக்க – வந்த
மாதர்கள் சோபனமும் படிக்க
சிங்கனாம் பாஸ்கர சேதுபதி – திரு
மாங்கல்யங் கட்டினார் பாருங்கடி

ஆசீர்வாதம் பெறுதல்

107. மாதவத் தோர் மகிழ்ந்திடவே – எங்கள்
மன்னவன் பூமாலை மாற்றிடவே
வேதியர் ஆசிர்வதித்திடவே – வெள்ளை
மாது மலர்கள் தெளித்திடவே

108. சுண்டு விரல் பிடித்திழுத்து மனையைச்
சுற்றி வருவதைப் பாருங்கடி
கண்டதில்லையோடி காத்தாயி – அதன்
கருத்தைச் சொல்லடி சாத்தாயி

அருந்ததி பார்த்தல்

109. அண்டருலகத்தில் வசிஸ்டர் தேவி – நல்
வருந்ததியைக் கண் பாருமென்று
பண்டு நடத்திடும் பழக்கம் போல் – மன்னனீ
கொண்டு நடத்துரார் முழக்கமான

## திருமண கேளிக்கைகள்

110. பூச்செண்டு கொண்டு ராணி யடித்திட - மன்னன்
நின்று கொண்டே யதைத் தடுத்தி
கண்டவர் கைகொட்டி நகைத்திட – ராணி
களப மல்லிகை முகந்திட

111. துண்டு கொண்டுமன்னன் துடைத்திட – ராணி
நின்று கொண்டே பக்கஞ் சிரித்திட
கண்டவர்கள் ஆசீர்வதித்திட - டர்ணர்
கலைக்டர் மலர்கள் தெளித்திட

112. அண்ட சராசர மதிர்ந்திட – பேரி
யடித்திட வேதம் உரைத்திட
வண்டார் குழவி மங்களேஸ்வரி – ராணி
மன்னவன் பாஸ்கர ராஜனுமாய்

## ரஜராஜேஸ்வரிஸய மணமக்கள் வணங்குதல்

113. ராஜ ராஜர் பணி ராஜராஜேஸ்வரி
நாரணியை நமஸ்காரஞ் செய்து
ராஜாதிராஜன் பாஸ்கரராஜன்
நாராதிபன் வாரதைப் பாருங்கடி

## மணமக்கள் அந்தப்புரம் செல்லுதல்

## மணமக்களை ரணி ஆசீர்வதித்தல்

114. கொண்டல் வண்ணன் திரு தண்டாமரைப் பெண்ணை
கூட்டிப் பள்ளியறை செல்வது போல்
கண்டெங்கள் ஸ்தான்ாபதி முத்தாத்தாள் கையின்
கற்பூர ஆரத்தி ஏந்தி நிற்க.

115. கட்டியர் எச்சரிக்கை கூற பெண்கள்
கவரி குஞ்சம் பாவாடையிட
எட்டிய ஸ்தானாபதி யோடி எங்கள்
ராணிக்கு எச்சரிக்கைகள் செய்ய

116. மட்டிலடங்காத மகிழ்ச்சியுடன் - ஜெக
மாதா மகன் வரப் பார்த்திருக்க
அஷ்ட திசை புகழப் பட்டத் தரசன் கை
கட்டி நடப்பதைப் பாருங்கடி

117. பண்டொரு நாள் சீதை தன்னினையே ராமனும்
பாணிக்கிரஹணஞ் செய்தவுடன்
அண்டருலகம் மதிக்கப் பெற்றதந்தை
அன்னை கௌசலை தன்னை ராமன்

118. நாடி வருவது போலுமடி எங்கள்
ராஜன் ராணியுடன் கூடி
சேடியர் கூடி பதம்பாட சில
மாதர்கள் கூடி நடமாட

119. காதலுடன் ஜெகமாதா மதமலர்
கண்டு இருவரும் தெண்டனிட
சேதுபதி ராணி முத்துத் திருவாயி
சேயனைக் கண்டு அகமகிழ்ந்து

120. ஆசீர்வதித்து அருமையுடன் பெற்ற
ஆனந்த மார்பனை முத்தமிட்டு
ஆசனந்தன்னில் அமரச் செய்து ராணி
அட்சதை இட்டு அமர்ந்திருந்தார்.

(திருமணக் கும்மி முற்றிற்று)

# பெயர்கள் தொகுப்பு


பக்கங்கள் | பக்கங்

அ

அட்டாவதானம் சரவணப் பெருமாள் கவிராயர் 12
அண்ணாமலை ரெட்டியார் 33
அப்துல் காசீம் மரைக்காயர் 75
அப்துல் காதிர் புலவர் 39,57
அமிர்த கவிராயர் 13,39
அமெரிக்கன் மிஷன் 32
அம்பலவாண தேசிகர் 60
அரசமுத்திரை 58
அழகிய சிற்றம்பலக் கவிராயர் 13,39

ஆ

ஆருத்திரா தரிசனம்
ஆலவாய்ப் பதிகம் 50
ஆவுடையார் கோவில் 39
ஆறுமுகம் சேர்வை, லக்ஷாதிபதி 36
ஆறுமுக நாவலர் 14

இ

இந்திய தேசிய காங்கிரஸ் 32
இப்ராகீம் சாயபு,
இராமேசுவரம் 74
இரண்டாவது பிரதாப ருத்திரன் 61
இரவிசேரி 67
இராமசாமி செட்டியார் 67
இராமநவமி 23,50
இராமநாத பண்டாரம் 50
இராமநாதபுரம் அரண்மனை 18,51
இராமநாதபுரம் சிவன் கோயில் 49,51
இராமநாதன் செட்டியார் 34
இராமசாமி சிவன் 14
இராமலிங்க பிரதிட்டை 11
இராமலிங்க விலாசம், அரண்மனை 20,22
இராமேசுவரம் 23,35,48
இராமேசுவரம் திருக்கோயில் 50
இராஜேசுவர் முத்துராமலிங்க 54

ஈ

ஈரோடு

ஊ

ஊர்க்காடு ஜமீன்தார் 83

ஒ

ஒரு துறைக் கோவை 39

க

கங்கணி 19
கட்டியேறி 19
கந்தபுராணக் கீர்த்தனை 14
கந்தபுராணம் 14
கண்ணுச்சாமித்தேவர் 26
கபிலர் 87
கமுதி சிவன் கோயில் 69,70
கலாவதி 61
கல்லிடைக் குறிச்சி மடம் 83,84
கனகாபிஷேகம் 41
காசி 35
காசி அன்னபூரணி ஆலயம் 35
காஞ்சிபுரம் 50
காதர் ராவுத்தர் 37
காயகப்பிரியா 13
கிரீட்டன் தம்பதிகள் 22
கிருஷ்ண ஐயர், குன்றக்குடி 14,42
கிருஷ்ண ஐயா திருக்கோடிக் காவல் 40
கிழவன் சேதுபதி 19
குலாம் காதிர் நாவலர், நாகூர் 56
கோட்டைப் பட்டினம் 12,39